Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
அகஞ்சுரக்கும் தொகுதி
ஆரம்பம்: 13. 08. 88
Saturday – 11.30 a.m.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
சிறுநீர்சனனித்தொகுதி
Sat, Sun – 8. 30 a.m.

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 29 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 29 (13-08-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 23

# ஐ.தே. கவில் இருந்து றெனிடி மெல் விலகல்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேரப்போவதாக அறிவிப்பு

கொழும்பு. ஆகஸ்ட். 13

முன்னாள் நிதியமைச்சர் திரு றெனிடி மெல் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்து விட்டார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அவரே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் தாம் சேரப்போவதாகவும் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் சொன்னார்.

நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்த பின்னர் தமது எம். பி. பதவியைத் துறக்க அவர் முடிவு செய்திருந்தார். ஆனால் நேற்று நாடாளுமன்றம் கோரம் இல்லாமையால் ஒத்திவைக்கப் பட்டு விட்டது.

தாம் அறிக்கை சமர்ப்பித்தலைத் தடுப்பதற்காகவே வேண்டுமென அரச தரப்பு எம். பிக்கள் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினார்கள் என அவர் குற்றம் சுமத்தினார்.

1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஸ்ரீ. ல. சு. க. ஆட்சியில் இருந்தபோது அக்கட்சியில் அங்கம் வகித்த திரு. றெனிடி மெல் பின்னர் அக்கட்சியிலிருந்து பிரிந்து ஐ தே. கட்சியில் சேர்ந்தார்.

1977 இல் ஐ தே. க. ஆட்சிக்கு வந்தது முதல் 1987 இறுதி வரை நிதியமைச்சராக இருந்த அவர் அதன் மூலம் நீண்ட காலம் தொடர்ந்து இலங்கையின் நிதியமைச்சராக விருந்த பெருமையைப் பெற்றார்.

1987 டிசம்பரில் நாடாளுமன்றத்தில் பேசுகையில்,

நாடாளுமன்றத்தின் ஆயுளை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தியது தவறு என்று கூறியதன் மூலம் — ஐ தே. க. அரசின் தலைமைப் பீடத்திற்கு எதிராகக் குரல் எழுப்பினார்.

இந்தப் பேச்சைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியால் அவர் நிதியமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இப்போது ஐ தே. க. அங்கத்தவர் பதவியையும் அவர் துறக்கிறார். (உ-எ)

## சார்க் மகாநாடு பாகிஸ்தானில்

கொழும்பில் நடைபெறவிருந்த சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாடு பாகிஸ்தானில் நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

காத்மண்டுவில் நடந்த சார்க் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் இது சம்பந்தமாக முடிவுசெய்யப்பட்டது. (உ-எ)

## 11 பேர் பலி!

பாட்னு. ஆக 13

பீஹார் மாநிலத்தின் இரண்டு கிராமங்களில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் 11 கிராம வாசிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

## சுபநேரம்

13 - 08 - 88
சனிக்கிழமை
சுப நேரம்:
03 05முதல் 04 35வரை
ராகுகாலம்:
09.05 முதல் 10 35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஆசிரியர் சேவை இனி மாகாண ரீதியில்

ஆசிரியர் சேவை இனிமேல் மாகாண ரீதியில் மாற்றி அமைக்கப்படும்.

ஆசிரியர்களின் சுய விருப்பத்தின் பெயரில், அந்தந்த மாகாணங்களின் கீழ் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான முன நடவடிக்கைகளை கல்வி அமைச்சும் கல்விச் சேவைக் குழுவும் மேற்கொண்டு வருகின்றன.

ஆசிரியர்கள் தமது சுய விருப்பதின் பெயரில் எந்த மாகாணத்தில் சேர்ந்து கொள்ள விரும்புகின்றாரோ அந்த மாகாணத்திற்கு காலக்கிரமத்தில் இடமாற்றம் பெறுவார்கள்.

புதிய மாகாண ஆசிரியர் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருப்பதாகவும்–

மாகாண ஆசிரியர் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக விசேட படிவங்கள் தனித்தனியாக ஆசிரியர்களுக்கு விநியோகிக்கப்பட்டு, விவரங்கள் திரட்டப் பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-11)

## வடக்கு, கிழக்கிற்கு கல்வி ஆணையாளாகள் விரைவில்நியமனமாவார்கள்?

கொழும்பு, ஆக. 13

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான மாகாண கல்வி அமைச்சு செயற்படும் வரை மாகாண கல்வி அமைச்சின் அதிகாரங்களை உள்ளடக்கிய விசேட கல்வி ஆணையாளர்கள் விரைவில் நியமிக்கப்படலாம்.

இதற்கான தீர்மானம் கல்வி அமைச்சு பட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கிற்கும், கிழக்கிற்கும் தனித்தனியாக மாகாண கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றுவதற்கு இரண்டு தம்ழர்கள் நியமிக்கப் படுவாாகள் என கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தென்வித்தார். (உ-11)

## நல்லூர் மஹோற்சவம் இடையூறின்றி நடைபெறும்

### ஆணையாளர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 13

வருடாவருடம் நடைபெறுவது போல இம்முறையும் திருவிழா ஒழுங்காக, இடையூறு எதுவுமின்றி நடைபெறும் என எதிர்பார்க்கிறோம்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் குறித்து யாழ் மாநகர சபை ஆணையாளர் சீ. வீ. கே. சிவஞானம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது.–

நாட்டில் எவ்வளவு நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் வருடாவருடம் ஒழுங்காக திருவிழா நடைபெற்று வந்துள்ளது. இம்முறையும் அவ்வாறே நடைபெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அதனடிப்படையில் தான் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் யாவற்றையும் செய்து வருகிறோம் என்று சொன்னார்.

திருவிழா நடைபெறும் 26 நாட்களிலும் நல்லூரை அண்டிய பகுதி வீதிகள் வாகனப்போக்குவரத்துக்களுக்கு தடை செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை அண்டிய பகுதிகள் துப்புரவு செய்து, வீதிகளை செப்பனிடும் பணிகள் வெகு மும்முரமாகநடைபெற்று வருகின்றன.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது.

26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஞ்சத் திருவிழாவும், செப்டம்பர் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழாவும் செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ-க)

## நாடாளுமன்றில் கேட்ட தத்துவ உரை!

கொழும்பு, ஆக. 13

நாடாளுமன்றத்தில் ஒரு தத்துவ உரை கேட்டது. நிதி அமைச்சர் அல்ஹாஜ் நைனா மரைக்காரே அந்தத் தத்துவ உரையைச் சொன்னார்.

''வாழ்க்கையே விபத்துக்களினால் ஏற்பட்டது தான்'' என்பதே அந்தத் தத்துவ உரையாயாகும்.

திறைசேரிச் சட்ட மூலம் பற்றிய விவாதத்தின் ஒரு கட்டத்தில்..

அனில் முனசிங்க (சுதந்திரக்கட்சிஎம்.பி): தற்செயலாக ஜனாப். நைனாமரைக்கார் நிதி அமைச்சராகி விட்டார்.

எல்லாப் பக்கங்களும் ஓட்டைகள் உள்ளபடகு ஒன்றை ஓட்டிச் செலலும் பொறுப்பு அவரிடம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர்:– வாழ்க்கையே தற்செயலாக ஏற்பட்ட விபத்துக்களில் உருவானது தானே! (அ-எ)

## கர்நாடக முதல்வராக எஸ். ஆர். பொம்மை தெரிவு

கர்நாடக முதலமைச்சராக திரு. எஸ். ஆர். பொம்மை நேற்றுதெரிவு செய்யப்பட்டார்.

மாநில ஜனதா எம். எல். ஏக்களின் கூட்டம் நேற்று நடந்தது. அப்போது இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதிருப்தியாளர் பிரிவுத்தலைவரானதிரு.தேவகவுடா திரு. பொம்மையின் பெயரை முன்மொழிந்தார்.

இன்று திரு.பொம்மை முதலமைச்சர் பதவியை ஏற்பார். (உ-எ)

## ஆட்சித் தலைமையை சாடுகிறார் றெனி டிமெல்

கொழும்பு, ஆக. 13

இலங்கையின் தற்போதைய ஆட்சித்தலைமை மாற்றப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய முன்னாள்அமைச்சர் திரு. றெனிடிமெல் கோரினார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் காப்பாற்றுவதற்கு நாட்டின் ஆட்சித் தலைமையால் இயலாமற் போய்விட்டது.

இலங்கையில் பல ஆண்டுகளாகப் பொதுத் தேர்தல் நடத்தாமல் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு மூலம் அரசுத் தலைவர் ஜெயவர்த்தன தன்னையும் தனது கட்சியையும் பதவியில் இருத்திக்கொண்டிருப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது.

சுதந்திர, நீதியான பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படுவதற்காக நான் இனி உழைப்பேன் என்றார். (உ-எ)

## பர்மாவில் ஆயிரம் பேர்பலி!

ரங்கூன், ஆக. 13

கடந்த ஐந்து தினங்களாக பர்மாவில் நடந்த மாணவர் கலவரத்தில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று மேற்கு ராஜதந்திரிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

இதனிடையில் பர்மா இராணுவத்தினரிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாக பி. பி. சி. அறிவித்தது.

பர்மாவின் புதிய ஜனாதிபதியான திரு. அங்லுவின் நேற்று ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஜனாதிபதி பதவியுடன் ஆளும் சோஷலிச புரோகிராம் கட்சித் தலைவர் பதவியையும் திரு. அங்லுவின் ராஜினாமாச் செய்துவிட்டார். (உ-எ)

## மாணவன் தவராசா விடயம்:

# அமைதிப்படை -பல்கலைக்கழகக் குழு நேற்று நடத்திய பேச்சில் முடிவில்லை

### விடுவிக்கப்படுவாரா என்பது இரு தினங்களில் தெரியும்

யாழ். பல்கலைக்கழக மாணவன் தவராசாவை விடுதலை செய்வது சம்பந்தமாக அமைதிப்படை அதிகாரிகளுக்கும், பல்கலைக்கழக முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நேற்று பேச்சுவவார்த்தைகள் நடைபெற்றன.

அந்த மாணவனுக்குப் பிணை நிற்கவும், அவரது எதிர்கால நடவடிக்கைகளுக்கு உத்தரவாதம் அளிககவும்பல்கலைக்கழக நிர்வாகம் முன்வருமானால், இரு தினங்களில் அந்த மாணவனை விடுவிப்பது குறித்து தாங்கள் முடிவு செய்வதாக அமைதிப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இந்த மாணவன் விடயத்தில் விசாரணைகளைத்துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என அமைதிப் படையினர் தரப்பில் உறுதி கூறபபட்டிருக்கிறது

நேற்றுக்காலை 10மணியளவில் யாழ் பல்கலைக் கழக கட்டடத்தில் இந்த பேச்சுக்கள நடைபெற்றன.

அமைதிப் படையினர் தரப்பில் அமைதிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் சந்தேஷ்பாண்டே, யாழ் நகரக் கொமாண்டர் பிரிகேடியர் காலோன் உட்பட ஆறு அமைதிப் படை உயரதிகாரிகள் கலந்து கொண்டார்கள். பல்கலைக்கழக முக்கியஸ்தர்கள் சார்பில் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோருடன் மாணவர் பிரதிநிதிகள் ஐவர் உட்பட ஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

காலை 10.15 மணியிலிருந்து நண்பகல் 11.45 வரை யாழ். பல்கலைக் கழக மாநாட்டு அறையில் இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றன.

பேசசுக்களின் போது பல்கலைக்கழகத்தினர் சார்பில் செல்வன் தவராசாவை விடுவிக்கும்படி வலியுறுத்தப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் பிரஸ்தாப மாணவனின் கல்வி பாதிப்படைகிறது என்றும், விரைவுரைகளின் இறுதியில் நடைபெறும் செயல்முறைப் பயிற்சிகளுக்கும் அவர் தோற்ற முடியாதுள்ளது என்றும் ஆகவே நல்லெண்ண அடிப்படையிலாவது பிரஸ்தாப மாணவனை விடுவிக்கும்படியும் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

ஆனால் அமைதிப் படையினர் உடனடியாக விடுவிக்கும் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

''குறிப்பிட்ட மாணவன் போராளி இயக்கம் ஒன்றின் அங்கத்தவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது'' எனவே அவர் மேலும் விசாரணைகளின் பின்னரே விடுவிக்கப்படுவார்.

ஆனால் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவரது கல்வியைத் தொடருவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம் – இப்படி அமைதிப் படை தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

கைதடி ஆயுள் வேதக் கல்லூரி ஊழியர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் குறித்தும் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (உ - க - 9)

## ரஷ்யா விண்ணுக்கு ஏவிய செயற்கைக் கோள் அமெரிக்காவில் விழும்?

வாஷிங்டன், ஆக 12

வானில் கட்டுப்பாட்டை இழந்து சுற்றி வரும் சோவியத் செயற்கைக் கோள் 'கொஸ்மோஸ்–1900' அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கும் அக்டோபர் 15 ஆம் திகதிக்கும் இடையில் பூமியில் வந்து விழும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

அணுச்சக்தியில் இயங்கும் இந்த செயற்கைக்கோள் அமெரிக்காவில் விழக்கூடும் என்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

பூமியில் விழுந்தவுடன் அப்பகுதியில் கதிர் வீச்சு அபாயம் ஏற்படலாம் என்று அமெரிக்க அரசு தனது மாநில அரசுகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

'கொஸ்மோஸ் 1900' சோவியத் யூனியனால் 198, டிசம்பரில் வானுக்கு ஏவப்பட்டது.

## மாணவர் பகிஷ்கரிப்பு தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்தும் விரிவுரைகளை பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளனர்.

அமைதிப்படையினரால் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் தவராசா விடுதலை செய்யப்படும் வரை இந்த பகிஷ்கரிப்பு தொடரும் என பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதி ஒருவர் சஞ்சீவிக்குத் தெரிவித்தார். (உ-9)

புதுமையும் எழிலும் வெற்றியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய பதிவு செய்யப் படாத Honda C D 125-Twin. Honda Chaly, Honda Express ஆகியன விற்பனைக்குண்டு. விபரம்:- லால் 690, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (5722)

தையல்மெஷின், T. V லென்ஸ், தளபாடங்கள், றேடியோ, ஹோல்செற் மற்றும் பலவித பாவித்த பொருட்கள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்.பற்றிக்ஸ்சந்தியருகில்.) (5715)

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### காணி விற்பனை

யாழ். கண்டி வீதியில், புங்கன்குளம் றெயில்வே ஸ்ரேசனுக்கு அண்மையில் 1 பரப்புக் காணியும், வீடும், (கிணறு - நல்ல பிரயோசனங்கள் உள்ள) உடனடியாக விற்பனைக்குண்டு. சிறந்த வசதிகளையும், நல்ல சுற்றுடலையும் கொண்டது. வர்த்தக நிலையம் அமைக்கக் கூடிய வசதிகளும் உண்டு. தொடர்பு: K.S. முத்துலிங்கம், றேடியன் இன்ஸ்ரீரியுட் அரியாலை, யாழ்ப்பாணம். (C6173)

### வீடு வளவு விற்பனை

ஓட்டுமடம் சந்தியில் இருந்து 25 யார் தூரத்தில் மானிப்பாய் றேட்டில் 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக் குண்டு. சகல வசதிகளும், நல்ல சூழலும் உள்ள இடம். தொடர்பு K. கதிர்காமநாதன், அரஸ் ஜவுளி அகம், 146 நவீனசந்தை, யாழ்ப்பாணம். (5673)

### தளபாட விற்பனையும் கொள்வனவும்

மரக் கடைச்சல் வேலைக்கும் நிலை, யன்னல், கதவு மரத் தளபாடங்கள் ஓடருக்கு செய்வதற்கும் உடனடியாக வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். (1) மகாலக்ஷ்மி ரேட் குறூப், 29, அராலி வீதி, யாழ்ப்பாணம். (2) 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (5679)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6063]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hy-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் சென்ற (B 380 Bab - Cock) சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், புறொய்லர் குஞ்சுகள் 12/8; 19/8 லும், கோல்டன் கொமட் பிறவுண் சேவல் பேட்டுக்குஞ்சுகள் 17/8; 19/8; 23/8; 27/8ம் திகதியிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். 1. R. S. K. Farm, முருகபதி உடுவில்; 2. குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். (5668)

## தேவை

எமது கல்வி நிறுவனத்திற்கு ஒரு பெண் லிகிதர் தேவை. ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். விரும்பியோர் கல்வித் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 178, C/o உதயன் யாழ்ப்பாணம். (5723)

### WANTED

A Theodolite in Good Condition (For land - Surveying) The Cost will be decided according to the condition it has. Contact: S. M. K Veemankamam, M. V. Tellipalai. (5547)

### வீட்டு பணிப் பெண் தேவை

சிங்கப்பூரில் வசிக்கும் தமிழ் குடும்பத்தினருக்கு 12 வயதான ஊனமுற்ற ஆண்பிள்ளையை பராமரிக்க ஒரு பணிப் பெண் தேவை. 40-45 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத் தக்கது. போக்குவரத்துச் செலவும் சகல வசதிகளும் நல்ல சம்பளமும் கொடுக்கப்படும். 17-ந் திகதிக்குப்பின் தொடர்பு கொள்ளவும். T.காராளசிங்கம், 2ô8/1, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (5719)

### வகுப்புகள்

A/L89, 90 வகுப்புகள் வழமையான எமது ஆசிரியர் குழுவினால நடத்தப்படுகின்றன. புதிதாக A/L 90 Pure / App Maths ஆசிரியர்: திரு. வேலாயுதம் அவர்களால் 13 - 8 - 88 சனி மாலை 4-30 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. Nagalingam Institute, Thirunelvely. (5669)

### தொழிற் கல்வி

புதிய பிரிவுகள் ஆரம்பம் — 19 - 8 - 88. 1. Radio Officers (Ship) P. M. G., 2. Electronics, 3. Telex Operators-(International) இருபாலாரும். பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். தொடர்பு: Keen Centre — Thirunelvely. (5545)

### வீடியோ படப்பிடிப்பு

அதி நவீன வீடியோ கமறா மூலம் திருமணம், பிறந்த நாள் நிகழ்ச்சிகளை வண்ணக் கலாகளில், இந்தியாவிலும், இலங்கையிலும் பல வருடங்கள் வீடியோ படப் பிடிப்பில் அனுபவமுள்ள கமறா இயக்குநர்கள் மூலம் வீடியோ படமாக்கிக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேர்ஸ்), இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் விக்ரேஸ் மியூசிக் சென்ரர், இல. 887, ஆஸ்பத்திரிவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C/6052)

### பதவி வெற்றிடம்

கோழிப்பண்ணை பராமரிப்பதற்கும், தோட்ட வேலைக்கும் ஆண்கள் தேவை. 18-8-88 அன்று காலை 10 மணிக்கு, 'ஜிமாட்டிரெக்ஸ்றைல்ஸ்' யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும். (ஜிமாட்டி பாம், மைலங்காடு, சுன்னாகம்- Farm Address.) (5680)

யாழ்/ நகரில் அமைந்துள்ள பிரபல ஏஜென்சி நிறுவனம் ஒன்றிற்கு நாளாந்த பதிவேட்டுக் கணக்கு (Stock Clerk) மற்றும் கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) ஆகிய பதவிகளுக்கு ஆங்கில அறிவும், தட்டச்சு வேலை தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கவும். 323, C/o உதயன் யாழ்ப்பாணம். (5678)

### பெண் முகாமையாளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மட்டுப் படுத்தப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு (பதிவு இலக்கம் J/1650, 19 - 9 - 79) கணக்கியல் தகைமையும் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தியும் பெற்றுள்ள பெண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் 22. 08. 88 வரை கோரப்படுகின்றது. வயது எல்லை 20-40 வரை- அதிபர். (5681)

### திருமணப்பந்தல்

யாழ்/ இந்து வேளாள குலப் பெற்றோர் 27 வயதுடைய கனடா வங்கியில் கடமையாற்றுபவருக்கு அழகிய மணமகளையும் செவ்வாய்க் குற்றமுள்ள 20 வயது அழகிய பெண்ணுக்கு உயர்ந்த பதவியிலுள்ள மணமகனையும் தேடுகிறார்கள். கனடா செல்லக்கூடிய வசதியும் உண்டு. குறிப்பு விபரத்துடன் 321 C/o உதயன் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளுங்கள். (5665)

### கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

காங்கேசன்துறை வீதியில் கில்னர் கட்டிடத்திற்கு சமீபமாக (மனோகரா தியேட்டருக்கும், கில்னர் பில்டிங்குக்கும் இடையில்) நவீன வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு 322, C/o உதயன் யாழ்ப்பாணம். (5674)

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாதம் விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாகக் கற்பிக்கப்படுகின்றன விண்ணப்பங்கள் காலை 9 - 12 வரை. 61/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (5724)

### வாடகைக்கு

வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில் நவீன வசதிகளுடன் குடியிருப்பதற்கு வீடு உண்டு. நல்ல முறையில் வீட்டைப் பராமரிப்பவர்களிடம் வாடகை அறவிடப்பட மாட்டாது. தொடர்பு: 324, C/o உதயன் யாழ்ப்பாணம். (5682)

## போலீஸார் மீது சூடு!

திருகோணமலை, ஆக. 13

ஆண்டான் குளம் பாதிஸ்புரஎன்னும் இடத்தில் பொலீஸாரைநோக்கி தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனராம்,

பதிலுக்கு பொலீஸாரும் திருப்பிச் சுட்டனர். சுமார் 15 நிமிட நேரம் துப்பாக்கிச் சமர் இடம் பெற்றது.

# M 3 Travel's

பெருமையுடன் வழங்கும்

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### ✶ சவூதி அரேபியா:

| | வெற்றிடம் |
|---|---|
| 1. Bulldozer Operator — (புல்டோசர் ஒப்பிறேற்ரர்) | 3 |
| 2. Exavaor Operator (எக்ஸ்ஸவேற்ரர் ஒப்பிறேற்ரர்) | 2 |
| 3. Crane Operator (கிறேன் ஒப்பிறேற்ரர்) | 2 |

மேற்குறிப்பிட்ட தொழில்களிற்கு எம்மிடம் ஏற்கனவே தொடர்பு கொண்டவர்கள் பிரயாணம் செய்துவிட்டனர். மிகுதி வெற்றிடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

4. Cleaners (கிளினேர்ஸ்) உடனடியாகத் தேவை.
5. Catering Helpers (சிற்றுண்டிச்சாலை உதவியாட்கள்) ஓரளவு ஆங்கில அறிவு தேவை.
6. Carpenters (தச்சு வேலையாட்கள்)
7. Mason (கட்டிட வேலையாட்கள்)

### ✶ குவைத்:

1. Cleaners:-

சம்பளம் 37 டினர். சாப்பாடு இருப்பிட வசதி இலவசம். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் தொடர் கொள்ளவும்.

✶ உங்கள் தேவை எங்கள் சேவை.

✶ நம்பிக்கை, நாணயம் என்பவற்றிக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம் இதுவே.

**M 3 TRAVEL'S**

**T. இந்திரநாதன்**

சற்குணவாசா,

காங்கேசன் துறை.

(பஸ் வழி இல. 769, 764, 763.)

(C 6164)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



வே. ஜெயச்சந்திரன்

மலர்வு: 07. 08. 1966 — உதிர்வு: 16. 05. 1988

திதி: 13. 08. 88

வாழ்க்கையிலே துணையிருப்பாய் என்றிருந்த இரு தங்கையர்கள் தவிக்கின்றார்.

உறுதுணையாய் நீயிருப்பாய் என்றிருந்த தம்பியவன் வாடுகின்றான்

உன் கோலமதை இரசித்திருந்த உன தன்னை, தன் கோலம் அழித்திடவே துணிந்து விட்டாள்,

உற்றாரும் துவண்டு விட்டார், உறவினரும், நண்பர்களும் பதைக்கின்றார். இத்தனையும் கண்டும் கல்லானார் உன் தந்தை. பெயருந்தான் சந்திரனோ உன்னுலகும், விண்ணுலகோ, என்ன பிழை இழைத்தோம். எதற்கு இந்தத்தண்டனையோ. ஆண்டு பல சென்றாலும் ஆறிடுமோ எமது மனம். பிரார்த்திக்கின்றோம் உமது ஆத்மா இறைவனடி சேர.

இன்று நடைபெறும் திதிக்கிரியையில் கலந்து கொண்டு எமது துயரில் பங்கு கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை, தாய், சகோதரர்கள்.

க. வேலாயுதம்,
"வேல் ...கம்"
இந்தியப் பிட்டி
திருநெல்வேலி.

(5631)

### ரஷ்ய வீரர் 'மர்ம' மரணம்!

மாஸ்கோ, ஆக 12

கடந்த டிசம்பரில் வானுக்கு அனுப்பப்பட்ட சோவியத் விண்கலம் 'மிர்' ரில் பயணம் செய்துவிட்டுத் திரும்பிய விண்வெளி வீரர் அனரொலி லெ செவ்ன்கோ தனது 47 ஆவது வயதில் மர்மான முறையில் மரணமானார்.

கடுமையான வருத்தத்தின் பின்னர் இவர் இறந்தார் என்று அறிவித்த டாஸ் செய்தி ஸ்தாபனம், நோய் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை.

வானில் ஒரு வாரம் சஞ்சரித்து விட்டு கஸகஸ்தானில் வந்திறங்கியவுடன் இவர் மறுகணம் ஒரு விமானத்தை மாஸ்கோவுக்கு ஓட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ எ)

# CEYGMA PUMPS சிக்மா பம்ப்ஸ்

## விலை குறைப்பு

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குவதால் உற்பத்திச் செலவு குறைந்துள்ளது. அதற்கேற்ப எமது மின் மோட்டர்களின் விலைகளைக் குறைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய விலைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1/2 HP | — | 1" x 1" | — | 3500-00 |
| 1/2 HP | — | 1 1/2" x 1 1/4" | — | 3950-00 |
| 1 HP | — | 1 1/2" x 1 1/4" | — | 4750-00 |
| 1 HP | — | 2" x 1 1/2" | — | 5250-00 |
| 1 1/2 HP | — | 2" x 2" | — | 5850-00 |

குபோடா என்ஜினுடன் பொருத்தப்பட்ட 2" Pump —8250-00

ஒரு வருட உத்தரவாதம்! விற்பனைக்குப் பிந்திய சேவை!!

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்:

**யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்**

**UNITED AGRO ENGINEERING**

274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை: நாவற்குழி - கைதடி.

(C 6135)

## உங்கள் மங்கள வைபவங்களை

### வீடியோப் படமாக்குவதில் ஒரு புரட்சி!

விவரங்களுக்கு எங்களைச் சந்தியுங்கள்

மற்றும்

✶ வர்ண நிழற்படப் பிடிப்பு
✶ T. V. ✶ டெக் ✶ வீடியோக் கமரா மற்றும்
✶ எலக்ரோனிக் உபகரணங்கள் பழுது பார்க்க
✶ சூரிய மின் சக்தி அமைப்புகளைப் பெற்றுக்கொள்ள

**எவர்விஷன்**

21 A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: எவர்விஷன், C/o. S. நித்தியானந்தன், திருத்தணிகை, புங்குடுதீவு - 1. (C 6056)

## மகிழ்ச்சி அலைகள் பொங்கிட

**TELE CORNER**

**ரெலி கோணர்**

நவீன மொடல் -

✶ வீடியோ டெக் ✶ TV ✶ றேடியோ

மற்றும்

✶ வீடியோ கசெட் ✶ எவர்சில்வர் பொருட்கள் ✶ அன்பளிப்புப் பொருட்கள் அத்துடன் ✶ வீடியோ படம் பிடிப்பதற்கும் ✶ அன்ரனா பொருத்தவும், ✶ வீடியோ டெக் வாடகைக்கு பெறவும்.

**TELE CORNER**

வீடியோ டெக், T V, றேடியோ, மின் உபகரணங்களும், பழுதுபார்த்துக் கொள்ளப்படும்.

**TELE CORNER**

ரெலி கோணர்

கண்டி வீதி, சாவகச்சேரி.

(நவீனசந்தை மேல்மாடி)

(C 6101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐயா'வின் பேச்சில் ஆயிரம் அர்த்தங்கள்; கொழும்பு அரசியலில் குழப்ப நிலை!

ஐயாவின் பேச்சுக்கு ஆயிரம் அர்த்தங்கள் கற்பிக்கப் படுகிறது.

கண்டி பெரஹெரா முடிவில் தியவதன நிலாமை தர்மிஷ்டரை அவரது மாளிகையில் வைத்துச் சந்தித்தார்.

பெரெஹெரா நல்லபடியாக நிறைவு பெற்றது என்ற செய்தியை நிலாமை தர்மிஷ்டரிடம் சொல்லி வைத்தார்.

பதிலுரையாக தர்மிஷ்டரும் சில வார்த்தைகள் சொன்னார்.

விரைவில் ஜனுதிபதி தேர்தல் நடத்தப்படும். தெரிவு செய்யப்படும் புதிய ஜனுதிபதிக்கு, எனக்குத் தந்தது போன்ற ஒத்துழைப்பை நல்க வேண்டும் — இப்படி தர்மிஷ்டர் அப்போது தியவதன நிலாமையைக் கேட்டுக்கொண்டார்.

தர்மிஷ்டரின் இப்பேச்சுக்குத்தான் இப்போது ஆயிரம் அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றது. தர்மிஷ்டர் ஜனுதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடமாட்டார் என்பதை இப்பேச்சு எடுத்துக் காட்டுகிறதுஎன்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

வேறு சிலர் தர்மிஷ்டரின் பேச்சை 'அப்படி எடுத்துக் கொள்ள முடியாது; உள்ளர்த்தத்துடன் பேசக்கூடியவர் அவர். ஆயிரம் அர்த்தங்கள் அதில் இருக்கும்' — என்று கூறி வருகின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் நாளிதழ் 'அத்த'.

அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தர்மிஷ்டர் "ஜனுதிபதித் தேர்தலை இப்போதைக்கு நடத்தும் எண்ணம் இல்லை"— என்று தெரிவித்திருந்தார்.

'இப்போதைக்கு' என்ற சொல்லை மட்டும் 'அத்த' நாளிதழ் எடுத்து அதற்கு வியாக்கியானம் செய்திருக்கிறது.

"எப்போது ஜனுதிபதித் தேர்தல் வரும்" — என்று 'அத்த' கேட்டிருக்கிறது.

அப்படியானுல் தியவதன நிலாமையிடம் தர்மிஷ்டர் சொன்னதன் அர்த்தம்தான் என்ன?

ஜனுதிபதித் தேர்தல் ஒன்று நடந்தது அதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், அவர் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனுதிபதியாகவே கருதப்படுவார்; அப் புதிய ஜனுதிபதி தர்மிஷ்டராகவும் இருக்கலாம்; வேறு யாராகவும் இருக்கலாம் என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா!

எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்ருல் அவராகவும் இருக்கலாம் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா!

இப்படியும் 'ஐயா'வின் பேச்சுக்கு அர்த்தம் கற்பிக்கப்படுகிறது.

அர்த்தங்கள் பலவாக இருந்தாலும் மூன்ருவது முறையாக தர்மிஷ்டர் ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை அரசமைப்புச் சட்டப்படி தடுக்கமுடியாது.

காரணம் அவர் மக்களால் ஒருமுறைதான் ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டு முறை மக்களால் தெரிவு செய்யப்படவில்லையே.

முதல் முறை மக்கள் பிரதிநிதிகளினுல் தானே தெரிவு செய்யப்பட்டார்—

இப்படி கூறும்குழுவின் வாதமும் வலுத்து வருகின்றது.

எப்படியும் உள்ளர்த்தத்துடன் நீண்ட நாளைக்கு தர்மிஷ்டர் பேசிக் கொண்டிருக்க முடியாது.

ஜனுதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இதனிடையில் ஏதாவது ஓர் அர்த்தத்தை வெளிப்படுத்தியாகும் நிலை அவருக்கு ஏற்பட்டே ஆகும்.

இல்லாமல் தொடரின் அவரின் அரசியல் அகராதியும் வேருகி, அதன் அர்த்தமும் வேருகும் நிலை ஏற்பட்டு விடாதா?

கொழும்பு எதிர்க்கட்சி அரசியல் வட்டாரங்களில் இந்த அச்சம் ஏற்பட்டுள்ளது. ★

## உள்ளும் புறமும்

—குறுமுனி—

## பத்து லட்சம்!

கொழும்பு அரசியலுக்கும் பத்து லட்சத்துக்கும் என்ன தொடர்பு?

பிரதமர் 'பத்துலட்சம் வீடுகள்' திட்டத்தைக் கொண்டு வந்தார்.

இப்போது அத்திட்டமே அவருக்குப் 'பெரிய வீடு' அந்தஸ்தை வழங்க உதவலாம் என்று கூறப்படுகின்றது.

அந்த வரிசையிலே அனுராவும் 'பத்து லட்சம்' சொல்லை பாவிக்கத் தொடங்கியுள்ளார்.

சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் பத்துலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உடனடியாக வழங்கப்படும் என்று அனுரா அறிவித்து விட்டார். ★

## அர்த்தமுள்ள பேச்சா இது?

"தர்மிஷ்டருக்கு என்ன பேசுவது என்பதே தெரியாது,

"ஜே. வி. பிக்கு சுதந்திரக் கட்சி உதவுகிறது என்று திங்கட்கிழமை பேசுகிருர்.

"ஜே. வி. பியும் சுதந்திரக் கட்சியும் ஒன்று தான் என்று புதன் பேசுகிருர்.

"பேச்சு நடத்த வருமாறு ரோஹண விஜவீராவை வியாழக்கிழமை அவர் அழைக்கிருர்.

"அடுத்தநாள் காலிமுகத்திடலில் சண்டை போட வருமாறு விஜவீராவை அழைக்கிருர். இப்படி ஜே. ஆர். பேசுவதன் அர்த்தம் தான் என்ன?"

— எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கொட்டாஞ்சேனையில் நடந்த சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் பேசியது. ★

# ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகி வரும் அமெரிக்கா

சோலில் அடுத்தமாதம் ஒலிம்பிக் போட்டி நடக்க இருக்கிறது அல்லவா!

இதில் அமெரிக்கா சார்பில் கலந்து கொள்ளும் குத்துச் சண்டை வீரர்களைத் தேர்ந்து எடுக்க பொதுத் தேர்வு நடந்தது.

இந்தத் தேர்வில் கலந்து கொள்ள வந்த 12 வீரர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

அப்போது அவர்களில் மூன்று பேர் போதைப் பொருள் உபயோகிக்கும் பழக்கம் உள்ளவர்கள் என்பது பரிசோதனையில் தெரிய வந்தது.

அவர்களது சிறுநீரில் அதற்கான ஆதாரங்கள் காணப்பட்டன.

இதை ஒட்டி அந்த மூன்று பேரும் பொதுத் தேர்வில் கலந்து கொள்ளத்தகுதி இழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் - ஒலிம்பிக் போட்டியில் பெருமளவு தங்கப்பதக்கங்களைத் தட்டிக் கொள்ள அமெரிக்கா தயாராகி வருகிறது.

செப்டம்பர் மாதம் தென் கொரியத் தலைநகரான சோலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா 651 வீரர்கள், வீராங்கனைகளைக் கொண்ட அணி ஒன்றை அனுப்பவிருக்கிறது. ★

## குத்துச்சண்டை வீரரின் குத்துக் கரணம்!

குத்துச்சண்டை வீரர் என்ருல் குத்துக்கரணம் அடிக்க வேண்டும் என்பதும் தலை எழுத்தா?

மைக் டைஸன், உலகக் குத்துச் சண்டை சாம்பியன். அமெரிக்க நீக்ரோ இனத்தைச் சேர்ந்தவர்.

கடந்த ஜூனில் பிரபல வீரர் மைக்கல் ஸ்பிங்ஸை ஒரே நிமிடத்தில் வீழ்த்தி 75 கோடி ரூபா பரிசுத்தொகை பெற்றவர்.

அதன் பின்னர் 'இனிக் குத்துச் சண்டை போட மாட்டேன். அமைதியான குடும்ப வாழ்வு நடத்தப் போகிறேன்' — என்ருர்.

பிறகு மனம்மாறி அடுத்த மாதம் 3 ஆம் திகதி லண்டனில் இங்கிலாந்து வீரர் பிராங்க் புருனேவை எதிர்த்துப் போட்டியிடுவேன் என்ருர் டைஸன்.

திடீரென்று இப்போது லண்டன் போட்டியில் கலந்து கொள்ள மாட்டேன் என்று அறிவித்திருக்கிருர்.

'எனக்குத் தற்போது குத்துச் சண்டை போடும் மனநிலை இல்லை. அதனுல் புருனேவுடன் மோதும் போட்டியையும் கைவிடுகிறேன்'— என்கிருர் டைஸன். ★

## 90 ஓவர் வீசாவிட்டால் அபராதம்!

மேற்கு இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிர்வரும் நவம்பரில் சென்று பல்வேறு போட்டிகளில் விளையாட உள்ளது.

போட்டி நடக்கும் போது ஒருநாளில் 90 ஓவர் வீசப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை விதித்திருக்கிறது.

அப்படி எங்களால் வீசமுடியாது என்று மேற்கு இந்திய அணி அறிவித்து விட்டது.

90 ஓவர் வீசாத அணிக்கு அபராதம் விதிக்கப்படும் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ★

## போத்தம் 'அவுட்'

உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவராகத்திகழ்ந்தவர் இயன் போத்தம்.

இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் டெஸ்ட் பந்தயங்களில் 373 விக்கட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தவர்.

அவருக்கு ஏற்கனவே முதுகில் அடிபட்ட உட்காயம் இருந்து வேதனை கொடுத்து வந்தது.

இதற்காகச் சிலநாட்களுக்கு முன்பு போத்தம் லண்டன் ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை செய்து கொண்டார்.

அதைத் தொடர்ந்து அவர் குணம் அடைந்து வந்தார். அவருடைய உடலைப் பரிசோதித்த டாக்டர்கள் அதிர்ச்சியான தகவலை வெளியிட்டனர்.

"இனி போத்தம் பந்து வீசமுடியாது"— என்பதே அந்த அறிவிப்பு. உலக கிரிக்கெட்டில்புகழ்பெற்ற ஒரு மிகச் சிறந்த வீரரின் சகாப்தம் இப்போது முடிவுக்கு வந்திருக்கிறது. ★

## உலக விளையாட்டு





சிலோன் செரமிக் கோப்பரேஷனின்
வடபகுதி ஏகவிநியோகஸ்தர்

ROWLANDS USHA

குளிர்சாதனப் பெட்டிகளுக்கு
5 வருட உத்தரவாதம் வழங்கப்படுகின்றது./

ஆஸ்பத்திரிகளில் மருந்து வகைகளை மிகவும் சிறந்த பாதுகாப்பாக சேமித்து வைக்கக் கூடிய குளிர்சாதனம் உஷா என உலக சுகாதார ஸ்தாபனத்தினுல் (W.H.O)சிபாரிசு செய்யப்பட்டது:

எஸ்லோன் பைப்புகளும். சைனீஸ் இந்தியன் மோட்டர்களும் எல்லாவித நிறங்களிலும் மார்பிள் கற்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Twyfords Bathroom Sets எல்லா நிறங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சூரிய ஒளியினுல் இயக்கப்படும் மின்தட்டுக்கள் மூலம் (அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது) இன்றே உங்கள் வீடுகளுக்கு விளக்குகள், றேடியோ, ரி.வி, நீர் இறைக்கும் இயந்திரங்கள் எதுவித மின்கட்டணமுமின்றி செய்து கொள்ள இன்றே நாடுங்கள்.வடபகுதியில் முதல் முதலாக அறிமுகப்படுத்தியவர்கள்.

விநியோகஸ்தர்கள்:
விமாகி
செரமிக் அன் எலெக்றிக்கல்ஸ்
27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

லங்கா வால்ரைல்ஸ் லிமிடட் தயாரிப்புகள் எல்லா நிறங்களிலும் தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.
மின்சார உபகரணங்கள். எஸ்-லோன் பைப் வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை நிறுவனம்:
விமாகி செரமிக்ஸ்
159 யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதடுகளே ஒட்டாத குறள் எது?

## எழுதி வைத்த வள்ளுவரின் நோக்கம் யாது?

**வினை** என்றால் என்ன? இதை நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.

இந்த உலகத்தில் நாமாகத் தேடிக்கொள்கிற வினை வேறு.

தானாக வந்து சேருகிற வினை வேறு.

நாமாக ஒரு காரியத்தைச் செய்து விட்டு அதன் பலன் வரும் போது வினை, வினை

> தமிழறிஞரும் பேச்சாளருமான புலவர் கீரன் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இரண்டு வாரங்களாக நிகழ்த்தி வரும் தொடர் சமய சொற்பொழிவு இன்று நிறைவு பெறுகிறது. அவரின் அருளுரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.

அந்த வினை வேறு யாரும் எம்மீது திணித்த ஒன்று அல்ல.

இறைவன் நம்மேல் போட்ட வினையும் அல்ல.

அந்த வினைக்கான செயலைச் செய்வதும் நாம்; அனுவிப்பதும் நாமே என்பதை உணர வேண்டும்.

நம்மோடு தொடர்பு இல்லாமல், சிந்திக்காமல், எண்ணாமல் இருக்கிற காலத்திலேயே நம்மிடத்தில் வரக்கூடிய இன்ப துன்பங்கள் இருக்கிறதே அதைத்தான் பிராரத்துவம் என்றும் வினை என்றும் சொல்கிறோம்.

நாம் வாழ்க்கையில் திருமணஞ் செய்கிறோம். குடும்பம் நடத்துகிறோம். கஷ்டம் வரத்தான் செய்யும்.

திருமணஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்த வேண்டும் என்று விரும்பிச் செய்த வினையின் பலன் எதுவோ, அத்துன்பங்களை அனுபவித்துத்தான் தீரவேண்டும். அது நாமாகத் தேடிக்கொண்டது தானே!

இதில் இருந்து எப்படி எம்மை விடுவித்துக் கொள்வது?



புலவர் கீரன்

இதற்குத் திருவள்ளுவர் ஒன்றே முக்கால் வரியில் அழகாக வழி காட்டியிருக்கின்றார்.

'உலகில் எந்த இன்பத்தை எதிர்பார்க்கிறாயோ அதில் இருந்துவரும் துன்பத்தையும் எதிர்கொள்ளத் தயாராக இரு.

யாதனின்......... குறளைப் படியுங்கள். உங்கள் உதடு ஒட்டுகிறதா?

'அகரமுதல எழுத்து......

'கற்றதனாலாய பயன்......

இக்குறள்களைப் படிக்கும் போது உதடுகள் பொருந்த வேண்டியுள்ளன.

யாதனின் ... குறளை மட்டும் உதடுகளே பொருந்தாமல் படிக்கக் கூடியதாக ஏன் வள்ளுவர் எழுதிக் கொடுத்தார்?

எந்தப் பொருளில் நீ பற்றுதல் வைத்து இருக்கிறாயோ அதை எடுத்து விட்டால் உனக்குத் துன்பம் இல்லை என்பதை... உதடு கூட ஒட்டாத குறளின் மூலம் சொன்னால்தான் மனிதன் கொஞ்சமாவது சிந்திப்பான் என்பது வள்ளுவரின் எண்ணம்.

ஆகவே நாம் வினை என்று சொல்லுகிறபோது நாமாகத் தேடிக் கொள்கிற இன்பம், அதன் விளைவாகிய துன்பம் என்கிற வினை வேறு.

நாம் முன்னர் எப்போதோ செய்திருக்கக்கூடிய வினைகள் நம்மை வந்து சாருகின்றன.

இந்த வினைகளினால் வரு

## புலவர் கீரன் கொழும்பில் விளக்கம்

'அத்துன்பம் வேண்டாம் என்று சொன்னால் அந்த இன்பத்தையே விட்டு விடு'—

இதனை வள்ளுவப் பெருமான்—

யாதனின் யாதனின்
நீங்கியான் நோதல்
அதனின் அதனில் இலன்—

என்ற குறளில் தெளிவுபடக் கூறியிருக்கிறார்.

கின்ற துன்பம் நம்மை வந்தடையாமல் நம்மை மீட்கக் கூடியவன் விநாயகப்பெருமான் என்பதால்தான் வினை தீர்க்கும் விநாயகப்பெருமான் எனப்படுகின்றார். ★

# ஜப்பான் இதையும் விடவில்லை

**ஒரு** துரும்பு விலைபோனால் போதும். ஜப்பானியர் அதனையும் செய்து விற்று விடுகின்றனர். இப்பொழுது தொழில் நிறுவனங்கள் ஒரு சாதாரணமான பொருளை ஏராளமாக உற்பத்தி செய்து வருகின்றன. அது என்ன தெரியுமா? வேறொன்றுமில்லை. வீட்டுக்கு வீடு பயன்படுத்தப்படும் ரொட்டிசெய்யும் சாதனம் தான் என்றால் ஆச்சரியமாக இல்லையா? மின்சார ரொட்டி தயாரிக்கும் இயந்திரசாதனத்தை மின் இணைப்பில் பொருத்துங்கள். அதிலுள்ள கொள்கலனில் நீரை ஊற்றுங்கள். மாவைப்போடுங்கள். புளிக்கச்செய்யும் ஈஸ்டைப் போடுங்கள். இன்னும் சுவைக்கு என்னென்ன வேண்டுமோ அத்தனையும் சேர்த்துக்கொள்ளலாம். அந்தச் சாதனம் மாவை நன்றாகக் கலக்குகிறது. உருட்டுகிறது. போட்டு அடிக்கிறது. பிறகு தன்னிச்சையாக மின்சார வெப்பத்தில் சுடவைக்கிறது.

மாலையில் ரொட்டிமாவைப் போட்டு மின்விசையைத் தட்டிவிட்டு நிம்மதியாகத் தூங்கிவிடலாம். காலையில் நன்றாகச் சுடப்பட்ட ரொட்டியின் மணம் உங்களைத் துயிலில் இருந்து எழுப்பிவிடும். ஜப்பானின் மட்சுசிடா இந்த ரொட்டி தயாரிக்கும் சாதனத்தை மாதத்திற்கு ஒரு லட்சம் எண்ணிக்கை என்று செய்துதள்ளுகிறது. ஸடாச்சி, தொசிபா, ஏன்? சான்யோ நிறுவனங்கள்கூட அதற்கு மேலும் ஆயிரக்கணக்கில் ரொட்டிசுடும் சாதனங்களை தயாரிக்கத் தொடங்கிவிட்டன. மனிதன் ரொட்டி (இயந்திரம்)யால் மட்டுமே வாழமுடியாது என்று யார் சொன்னது?

★

### சொற்சிலம்பம் போட்டி இல: 84

முடிவுகள் வருமாறு;

**1 ஆவது பரிசு:**
திருமதி விமலாதேவி சுப்பிரமணியம்,
நாவற்காடு,
வரணி.

**2 ஆவது பரிசு:**
கி. காயத்திரிதேவி
மே/பா ஏ.கிருஷ்ணதாஸ்,
திருவில் வீதி,
வல்வெட்டித்துறை.

**3 ஆவது பரிசு:**
செல்வன். கு. சந்திரகுமார்,
இல: 232, ஆடியபாதரோட்.
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

**சரியான விடைகள் வருமாறு;**

**இடமிருந்து வலம்**

1. அப்பியாசம், 4. மா, 6. தத்தம், 8. அறுகு, 10. மகதம், 12. புகார், 14. கட்டம், 15. ரசி, 16. சுவர், 17. கழல், 18. கார், 19. ஈரல், 20. குடுவை.

**மேலிருந்து கீழ்**

1. அந்தப்புரம், 2. பிரதமர், 3. சதி, 5. ஆறு, 7. கம், 8. அம்பர், 9. குறும்பார்வை, 11. தகவல், 13. காசி, 16. சுழல், 17. கர, 18. காடு.

## அமைதியுற்ற மனமே ஆன்மீக செல்வம்

பேராசை, சுயநலம், முன்கோபம், மனஸ்தாபம், ஆகியவற்றின் மூலம் யாருக்கும் கஷ்டத்தைக் கொடுக்காதீர்கள், கோபத்தையும், மனத்தாங்கலையும் விட்டுவிடுங்கள். காரசாரமாக வாக்குவாதம்செய்து சண்டைபோடும் தீய சுபாவத்தை போக்கி நில்லுங்கள். நீங்கள் யாருடனாவது சண்டையிட்டால், அல்லது காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டால் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு உங்களால் தியானம் செய்யமுடியாது. உங்களுடைய மனம் அமைதியை இழந்து தடுமாறும். சக்தியின்பெரும்பாகம் பிரயோசனமற்ற வழிகளில் வீணாகிவிடும். இரத்தம் கொதிப்பு அடையும். நரம்புகள் நலிந்து விடும்.

எனவே, சதா சாந்தியுடைய மனமுடையவர்களாக இருங்கள். அந்நிலையில் இருக்கக் கூடுமான முயற்சியை மேற்கொள்ளுங்கள். அமைதியுற்ற மனமே ஆன்மீகச்செல்வம் என்பதை அறியுங்கள்.

தொகுப்பு- க. கனகராசா


இலங்கையிலே முதன் முறையாக வட மாகாணத் தண்ணீருக்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ரக தேயிலை !




தேநீர் தயாரிக்கும் முறை:

ஒரு தேக்கரண்டி 'தங்கம் தேயிலை'யை நன்றாகக் கொதித்த ஒரு கோப்பை தண்ணீரில் கலந்து இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும்.

நன்றாகக் கலக்கிய பின் மீண்டும் இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும். தேயிலையை வடித்த பின் பாலும் சீனியும் அளவுடன் சேர்த்துப் பரிமாறவும்.

ஏக விநியோகஸ்தர்:

மேடிக்கல் ஹோல்
224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்:

Ceylon Commodity Marketing [Pvt.] Ltd.
P.O. Box: 640, Colombo,

குறிப்பு: மூவர்ண நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கும் மேற் காட்டிய எமது வியாபாரச் சின்னம் கொண்ட பைக்கட்டுகளை அவதானித்து வாங்கவும்.

(C 6113)





யாழ் முகவர்:- எஸ். வி. முருகேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சகுந்தலாதேவி
ஜெயராமச்சந்திரன்
(சரவணை மேற்கு, வேலணை)

மலர்வு: 04-09-1949 உதிர்வு: 14-07-1988

அன்புடனும் பாசமுடனும் எம்முடன் வாழ்ந்து எம்மைப் பக்குவமாக வளர்த்தெடுத்த அன்புச் செல்வமே! உங்கள் பிரிவால் நாம் வாடுகின்றோம், துயருறுகின்றோம் உங்கள் இனிய நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

கணவர்:- C. ஜெயராமச்சந்திரன்
(இலங்கைத் துறைமுக அதிகார சபை கொழும்பு)
பிள்ளைகள்:- துஷாந்தி, ஜெயமோகன், மற்றும் உறவினர்கள்.

கற்குளி வடக்கு,
சாவகச்சேரி. (5757)

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 2 மாதம்
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

**ஆரம்பம்: 20-8-88**

கட்டணம்: 750/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
AMSTRAD (MICRO COMPUTER), E G 2000 (P C), COMMODORE
ஆகிய கம்பியூட்டரில் பயிற்சி அளிக்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

Diploma in Computer Programming in Basic And Cobol Language

பயிற்சிக் காலம்:- 6 மாதம்
ஆரம்பம்: 20-8-88
குறிக்கப்பட்ட மாணவர்களே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்ப படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள்:- 18-8-88

**UNIKCO COMPUTER CENTRE,**
NO: 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் கந்தோர் அருகாமை)
(C/6166)

---

31 ஆவது நாளில்
எங்கள் அன்பு அம்மாவுக்கு
இதய அஞ்சலி!



திருமதி பொன்னையா கமலாம்பிகை
(கமலம்)

அன்னை மடியில்: 20-12-1923 ஆண்டவன் அடியில்: 14-07-1988

எங்கள் அன்புத்தாயே! எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! எங்களையெல்லாம் அன்புடனும், பண்புடனும் வளர்த்து நல்வழி காட்டி, கல்வியூட்டி இந்த உயர்வான நிலைக்கு உயர்த்தி வைத்து ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்த அருமைத்தாயே நீங்கள் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய்தி 31 நாட்கள் சென்று விட்டன 31 நாட்களல்ல 31 ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டகலாதம்மா.

உங்கள் நினைவுடன்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்

5 ஆம் வட்டாரம்
அனலைதீவு (5615)

---

## கொம்பியூட்டர் பயிற்சி

யாழ்நகரிலும்! தெல்லிப்பளையிலும்!

**Diploma in Computer Programming in Basic, Advanced Basic & Cobol Courses**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**

17-08-88 (Week day Batch - I)
26-08-88 (Week-end Batch - II)
**2 Months**

INITIAL FEE: Rs. 400/- Only

★ வடமாகாணத்திலே, IBM உட்பட நவீன Computer களில் கூடிய பயிற்சி மிகத் தரமான முறையில் அளிக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த Diploma சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

Contact:

**I D P**
**Institute of Data Processing**

(9. 30 a.m)
342, K.K.S Road,
(சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்.

(3. 30 p.m)
K.K.S. Road.
(துர்க்கையம்மன்கோவிலடி)
தெல்லிப்பளை.

(C 6168)

---

உ

## ஆத்ம சாந்திக் கிரியை அழைப்பிதழ்

**அன்புடையீர்!**

ஆடி 22 ஆம் நாள் (6-8-88) சனிக்கிழமை இறைவனடிபமைந்த எமது புதல்வி செல்வி உஷா தேவி அவர்களின் ஆன்ம ஈடேற்றக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

ஆடி 31 ஆம் நாள் (15-8-88) திங்கள் தசாகம் ஆவணி 1 ஆம் நாள் 16-8-88 செவ்வாய் ஏகோதிஸ்டம் மாசிகம் ஆவணி 2 ஆம் நாள் (17-8-88) புதன் சபிண்டீகரணம் ஆவணி 5 ஆம் நாள் (20-8-88) சனிக்கிழமை கிரியைகளும் மேற்படி கிரியைகளில் தாங்கள் வருகைதந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
அன்புடன்

Y. K. S. பாலசுப்பிரமணியசர்மா
குடும்பத்தினர்.

ஸ்ரீ முருகன் கோவிலடி
கிராமபுவில,
சாவகச்சேரி. (5751)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை
கப்டன் சுபேசன்**
(கிட்டா, கிருஷ்ணலிங்கம்)

புலோலித் தாயின் மடியில்:
**15-12-1966**

தமிழ் மண்ணுக்காய் வன்னித் தாயின் மடியில்:
**29-06-1988**

**வீரனே நீ வாழ்க!**
எனது இலட்சிய தாகம் தீர்ந்தாலன்றி இல்லம்
திரும்பமாட்டேன் என்றுறுதியாய் சொல்லிச் சென்றாய்!
தந்தை தாயைப் பிரிந்தாலும் கொண்ட தலைவனைப்
பிரிந்து வரமாட்டேன் என்று வேண்டியவர்க்கு
வைராக்கியத்துடன் விடைதந்தாய்!!
நீ சொன்ன வார்த்தைகளை சத்திய வேதமாக்கி
வன்னி மண்ணிலே உதிரத்தைக் கொட்டி வீரான்மாவாக
விண்ணுலகம் சென்று விட்டாய்!!!
வேங்கையே நீ வாழ்க!

**-ஆருயிர் நண்பர்கள்.**

(5716)

---

**FIRST TIME IN JAFFNA**

## விசேட ஆங்கில வகுப்புகள்

**TO HELP YOU**
**Begin Build up & Enrich Your English**

யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்கள்!!

**ஆரம்பம்: 4 - 9 - 88**

க. பொ. த. சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக, பட்டதாரி மாணவர்களுக்குரிய

**AN INTEGRATED ENGLISH COURSE**

ஆசிரியர்: **திரு. T. N. பஞ்சாட்சரம்**

6 மாத கால தீவிரப்பயிற்சி

★ ENGLISH SPEECH PRACTICE (SPOKEN)
★ GRAMMAR & USAGE
★ VOCABULARY ENRICHMENT
★ READING WITH UNDERSTANDING PROSE & VERSE
★ PRACTICE IN WRITING

ஆரம்ப அறிவு குறைவானவர்களுக்கும், ஏனையோருக்குமுரிய

**SPECIAL**
**BASIC ENGLISH COURSE**

ஆசிரியர்: **திரு. K. சபாநாயகம்**

3 மாத கால துரிதப்பயிற்சி.

★ SPEECH, BASIC GRAMMAR
★ READING, COMPREHENSION
★ GUIDED COMPOSITION

பலர் ஓரளவு ஆங்கில அறிவிருந்தும் ஆங்கிலத்தில் பேசத் தயங்குகிறார்கள், இக்குறையைப் போக்க.

**SPOKEN ENGLISH**

4 மாத கால துரிதப்பயிற்சி.

ஆசிரியர்கள்: **திரு. T. N. பஞ்சாட்சரம், திரு. S. மூர்த்தி**

★ FUNCTIONAL GRAMMAR
★ SPEECH PRACTICE
★ VOCABULARY ENRICHMENT
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் யாவும் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

விபரங்களுக்கு நேரில், தபாலில்:

**ASTAN INSTITUTE**
**166/1 HOSPITAL ROAD — JAFFNA**
(... 1ஆம் மாடி)
(C. 6157)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சங்கத்தானை மீனாக்ஷி அம்மன் ஆலய
தர்மகர்த்தாவும்
முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி
ஆசிரியருமாகிய

**வைரமுத்து சின்னத்துரை**
**(தம்பி ஐயா)**

தோற்றம்: 05-06-1920 மறைவு: 18-07-1985
திதி: 13-8-1988

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'
மற்றவர் தாம் மறந்தாலும்
மனைவி தான் உங்களை மறப்பாளோ!
மக்கள் தான் மறப்பாரோ!

எமது தந்தையாய் வையத்து வாழ்வதற்கு வாழ வழி செய்த அன்புப் பப்பாவே! ஆண்டு மூன்றல்ல முப்பது சென்றாலும் உங்கள் அன்பு எமது நெஞ்சை விட்டகலாது.

உங்கள் ஆன்மா சாந்தி அடைய மீனாக்ஷி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்

அருமை மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவபதி'
மீனாக்ஷி அம்மன் கோவிலடி,
சங்கத்தானை. (5432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில்

**மில்க்வைற் சகாயம்**

மில்க்வைற் தயாரிப்புகள் இருபது ரூபாவிற்கு வாங்குவோருக்குப் பொலித்தீன் பையில் கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படும்.

இன்னும் மேலுறைகளுக்கும் விசேட பரிசில்கள் உண்டு.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் "மில்க்வைற்"



# சஞ்சீவி

13- 08 - 1988 சனிக்கிழமை



"உனது நெஞ்சிற்கு துரோகம் செய்யாதே, மனச்சாட்சியின் படி நட, நிச்சயமாகவே உனக்கு வெற்றி உண்டாகும்"

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி அழகிய, "ஸ்ரீ இராமகிருஷ்ணர்" ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் "மில்க்வைற்"







## 2-ஆவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி
**கு. விதூஷனி**
பிறப்பு: 13. 08. 86

கமலத்தில் கொலுவிருக்கும் திருமகள் போல் கதிரையில் அமர்ந்திருக்கும் விதூ மகளே! பெரியோர் ஆசியுடனே பெற்றோர் வாழ்த்திட உற்றார், உறவினர் உன்னைப் போற்றிட பலகலை பயின்று பல்லாண்டு காலம் தரணியில் புகழுடன் தலை நிமிர்ந்து வாழி!

(6445)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தம்பு செல்வரத்தினம்**
(ஆயுர்வேத வைத்தியர்)

பிறப்பு : 15 - 7 - 1928 இறப்பு : 15 - 7 - 1988

அன்பு மொழி பேசி
அறிவு நெறி புகட்டி
என்றுமே கடிந்திடாது
இமைப்பொழுது தகன்றிடாது
உள்ள கதை பேசி
உத்தமனுய் வாழ்ந்த ஐயா!
சாவென்ற பெயரில் எம்மை
சடுதியில் பிரிந்ததென்ன?
வேதனை தந்தோமோ நாம்?
கனவினில் கூட உந்தன்
கண்ணிடை வாழும் எமக்கு
காவலாய் நின்றிடையா!

## 37ஆம் நாள் நினைவஞ்சலி



**மலர்விழி (சசி) கனகரத்தினம்**

பிறப்பு : 9 - 7 - 1964 இறப்பு : 9 - 7 - 1988

மாருத அன்பில் எம்மை
மகிழ வைத்த மலர் விழியே!
நீதியற்ற இவ்வுலகில்
நிலைகுலைந்து நெக்குருகி
தீராத துயருடனே எமையென்றும்
வாடவைத்து
மீளாத்துயில் கொண்டு
ஆறுதலடைய
காலன் கையில் சரணடைந்தீரோ அம்மா!
உம் எழில் முகத்தை
இனி எப்போ காண்போம்?

**அந்தியேட்டிக் கிரியைகள்**

13-8-88 சனிக்கிழமை வில்லூன்றியிலும், சபிண்டீகரணக்கிரியை (வீட்டுக்கிருத்தியம்) 14-8-88 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறேம்

76/5, கடற்கரை வீதி,
நாவாந்துறை. (5772)

தகவல் :
திருமதி செல்வதியம்மா குடும்பத்தினர்

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகராஜா விக்கினேஸ்வரன்**
(நவாலி)

தோற்றம் : 2-5 1965
மறைவு : 13 8 1984

நீ நேசித்த தேசத்திலும் அகன் வெ்பார்
அங்கங்களிலும் உன்னைக் கலந்து விட்டு நீ மட்டும் மறைந்து விட்டாயே-
ன் ு!

பெற்ருர்,
உடன் பிறப்புகள்,
உற்ருர், நண்பர்கள்.
நவாலி (5770)

# மரண அறிவித்தல்கள்

## திரு. ப. தர்மரத்தினம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு, பூதராயர் கோவிலடியைச் சார்ந்த ப. தர்மரத்தினம் காலமாகிவிட்டார். (வயது 46) அன்னர் வ. பி. போ. ச. பருத்தித்துறைச் சாலையில் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றிவருபவரும். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவின் நல்லூர் பிரதேச அத்தியட்சகருமாவார். ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 88- 8- 14 ஆம் திகதி காலை நடைபெறும்.

தகவல்:
மனைவி, மக்கள், குடும்பத்தினர்
(5730)

## செல்லப்பா மீனுட்சிப்பிள்ளை

செல்லப்பா மீனுட்சிப்பிள்ளை 11.8.1988இல் காலமானர். இவர் காலஞ்சென்ற செல்லப்பாவின் அருமை மனைவியும், தங்கரட்ணம், தங்கராசா (பிரதம லிகிதர் நாவற்குழி V C) தங்கமணி, தங்கேஸ்வரி (பிரதம தாதி உத்தியோகஸ்தர் அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பளை) சிவராஜா, சண்முகராஜா இவர்களின் அருமைத்தாயாரும் காலஞ்சென்ற வல்லிபுரம், சின்னத்தம்பு இவர்களின் அருமைச் சகோதரியும் வள்ளிப்பிள்ளை, கனகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும், அம்பலவாணர், தம்பிராசா, நடராசா (சிமேந்து கூட்டுத்தாபனம் K.K S) இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புமாமியாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (13 . 08 . 1988) சனிக்கிழமை மு ப. 10 00 மணியளவில் மாவிட்டபுரம் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

தகவல்
மக்கள், மருமக்கள்.
(5769)

## திருமதி தங்கரத்தினம் சின்னத்தம்பு

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் சினனத்தம்பு காலமானர். இவர் ஆ. க சின்னத்தம்பு (ஹற்றன் இம்பீரியல் அச்சக உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம் (கனடா) முன்னுள் ஆளணி உத்தியோகத்தர் இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், இரத்தினேஸ்வரி, இரத்தினகுமாரி, இரத்தினராணி, இரத்தினஜோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலட்சுமி (கனடா) பாலலிங்கம் (அபிவிருத்தி உத்தியோகத்தர்). சோமேஸ்வரன் (யூனியன் காபைட்) சந்தவனநாதன் (E. C. G. தொழில்நுட்பவியலாளர் யாழ் போதனு வைத்தியசாலை), ஜெயகுகன் (ஈஸ்வரன் பிறதர்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷாந்தன், ஜயத்திரி, ஜயத்ரதன், கார்த்திகேயா, காங்கேயா, கஜரூபன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் திருமதி இராஜலட்சுமி அமரசிங்கம் தவராஜா (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), தர்மராஜா (இம்பீரியல் அச்சகம்), தியாகராஜா (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஆ. க. சின்னத்தம்பு.

'இரத்தின பவனம்'
ஸ்ரேஷனடி
மாவிட்டபுரம். (5773)

## மேஜர் (DON) சுப்பிரமணியம் தர்மரட்ணம் (Barrister - at - Law)

மேஜர் (DON) சுப்பிரமணியம்தர்மரட்ணம் 11-8 88 வியாழக்கிழமை மானிப்பாயில் காலமாகிவிட்டார். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், ராஜ்குமார் (Wing Commandor- (U. K) ராஜ்குமாரி மனேஜர் R. F. A (U. K) வசந்தகுமாரி R. F. A (U. K) மீனகுமாரி R. F. A (U. K) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், மாணிக்கத்தின் அன்பு மகனும் பூரணத்தின் (சிங்கப்பூர்) அன்புச் சகோதரனும் ஆவார்.

லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட இவர் லண்டன் பிரிட்டிஷ் மேஜர் பதவியை வகித்தவர். ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியாக விளங்கியவர். இவரது ஈமைக்கிரியைகள் மானிப்பாயில் சண்முகநாதன் இல்லத்தில் 11- 8- 88 வியாழக்கிழமை நடைபெற்றது. பி. ப. 3. 30 இந்து பிட்டி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெற்றன.

இத் தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேம்.

தகவல்:
செ. சண்முகநாதன்

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (5774)

## J. M. SABARATNAM

John Moothathamby Sabaratnam- (Retired Additional G A., Jaffna), Dearly beloved Husband of Atputham, loving father of Vimalini (Singapore), Vijitha (U.K.), Rajini, Shirley (Engineer, Singapore), Father in law of Ariyaratnam, (Engineer, Singapore), Dr. Gnanadurai (Consultant Anaesthetist U K ), Dr. Black (General Hospital, Jaffna) and Sivakumaran (Engineer Singapore), brother of S M. Kanagaratnam and Mrs. Lily Jesudason, brother in law of Dr A.K Black and Robert Jesudason, died in London on 10-8-88. Funeral will be held in U.K on the 19th instant.

56, RED LAKE DRIVE
PEDMORE
STOURBRIDGE
WEST MIDLANDS U.K.

40, Rakka Lane,
Chundikuli.

(5725)

## திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை

அனலைதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விசாலாட்சி ஐயம்பிள்ளை 12-8-88 இரவு காலமானர். அன்னர் கதிரவேலு ஐயம்பிள்ளை அவர்களின் அருமை மனைவியும் காலஞ்சென்ற சொர்ணம்மா, செல்லையா (S. P. H. I. Kayts), காலஞ்சென்ற இராசம்மா, சிவக்கொழுந்து, கனகம்மா, புஸ்பமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லையா, பரமேஸ்வரி, இளையதம்பி, காலஞ்சென்ற கந்தையா, வரதராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசகுலேந்திரன் (சவூதி) சரோஜினி, இரவீந்திரா (லண்டன்) ரேணுகா (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலேந்திரா, இராசையா, சிவானந்தன் ஜேர்மனி), சிவகுமார் (கனடா), குகநேசன் (லண்டன்), மாலதி (யாழ். பல்கலைக்கழகம்) இரஞ்சினி (சுவிஸ்) லேஷினி. சாந்தினி, ஜெயா (சுவிஸ்), உதயன் (ஜேர்மனி) ஜெகசீலன், குணநிதி, குணசீலன், கிரிதரன், வசந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்ற இராசரத்தினம், காலஞ்சென்ற வைத்திலிங்கம், காலஞ்சென்ற சுப்பையா, காலஞ்சென்ற பொன்னம்பலம் காலஞ்சென்ற நடராசா, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலாயுதம், இளையதம்பி ஆசிரியர், மருதையனர் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னரின் தகனக்கிரியைகள் 12-8-88 மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அனலைதீவு,

தகவல்:
ஐ. செல்லையா.
(5729)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 13 - 08 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Saturday 13 th August 1988.

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st – Lane, Pt - Pedro Road, Jaffna.

சஞ்சீவி
சஞ்சிகை
13-08-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION.
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

கருத்துக் கலசம்

## உழைப்பு

உழைப்பு வாழ்க்கையின் அடித்தளம். ஒருவனது வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும் அவனது உழைப்பிலேயே தங்கி உள்ளன.

தோல்விகளைக் கண்டு மனம் சலியாது விடா முயற்சியுடன் உழைப்பவன் வாழ்க்கையில் முன்னேறுவான். வெற்றிகளைக் கண்டு மதிமயங்கி விட்டவன் அல்லது மமதை கொள்பவன் தனது வாழ்க்கையைத் தானே பாழாக்குவான்.

பெரும் அறிஞர்களாகவும், தலைவர்களாகவும், செல்வந்தர்களாகவும், கைத்தொழில் அதிபர்களாகவும் விளங்கியவர்களில் பலரும் ஆரம்பத்தில் வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருந்து உயர்ந்தவர்கள்தான்.

அதற்குக் காரணம் உழைப்பும், விடாமுயற்சியும், மன ஊக்கமுமே ஆகும்.

உழைப்பின் மூலம் முன்னேற்றம் காண்பது அல்லது உயர்ச்சி அடைதல் என்றால் கடினமாக உழைப்பது மட்டுமல்ல. அடுத்தவனைத் தாழ்த்தாது, அவனது முன்னேற்றத்தைத் தடுக்காது, தன் சொந்த உழைப்பால் பண்புடனும் கண்ணியத்துடனும் முன்னேறுவது, உயர்வது என்பது தான் அர்த்தம். மாற்றுவடம் அபகரித்து முன்னுக்கு வர நினைப்பவன் ஒரு போதும் வாழ்க்கையில் வெற்றி காணமாட்டான்.

கடின உழைப்பு என்பது உடலால், மூளையால் அதிகமாக உழைப்பது என்று மட்டும் கொள்ளல் ஆகாது மன விருப்பத்துடன், ஓர் ஒழுங்கு முறையில், சூதும் வாதும் கலவாமல் உழைப்பதும் கடின உழைப்பே.

கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு. கற்ற கல்வி ஒரு போதும் வீண் போவதில்லை. அதுபோலவே கடின உழைப்பும், விடாமுயற்சியும் வீண் போவதில்லை. அவை உடனடி விளைவைத் தராவிட்டாலும், தராதவை போலத் தென்பட்டாலும் பிற்பிந்திய காலத்திலேனும் மேலதிக நன்மையைத் தரவே செய்யும்.

கடின உழைப்பு என்றதும், அதனைப் பெரும் பாரமாக நினைப்பதோ அல்லது சலிப்படைந்து விடுவதோ வாழ்க்கையின் வெற்றிக்கு உதவாது.

தனக்காக உழைப்பதன் மூலம் தான் வாழ்க்கையில் முன்னேறலாம், முன்னுக்கு வரலாம், உயர்ச்சி காணலாம் என நினைக்கக் கூடாது.

அடுத்தவன் நலனுக்கும், உயர்ச்சிக்கும் உழைப்பதும் வாழ்க்கையில் வெற்றி காண ஓர் தேவை. அந்த உழைப்பு மனப்பூர்வமான உழைப்பாக இருக்க வேண்டும்.

பண்பான உழைப்பும், சலியாத உழைப்பும், ஒழுங்கு முறையான உழைப்பும் பிறர் நலனுக்கான உழைப்பும் சேர்ந்தால் வாழ்க்கையில் வெற்றி அன்றி வேறில்லையே! ★

# மொஹஞ்சதாரோ அழிந்தது எப்படி? விஞ்ஞானிகள் ஆய்வில் வெளியாகும் மர்மம்

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது மொஹஞ்சதாரோ நாகரிகம்.

3,500 ஆண்டுகளுக்கு முன்னர் அது அழிந்து போனது.

மர்மமான சூழ்நிலையில் அதற்கு அழிவு ஏற்பட்டது.

1922 இல் பிரிட்டிஷ் புதைபொருளாராய்ச்சியாளர்கள் அழிந்து போன மொஹஞ்சதாரோவைக் கண்டுபிடித்தனர்.

அழிவு ஏற்பட்ட விதம் பற்றிய கர்ண பரம்பரைக் கதையை அது கதையல்ல, உண்மைச் சம்பவம் என்பதை ஆழ்வாராய்ச்சி நிரூபித்தது.

சூட்டுக்கு முறுக்கப்பட்ட கற்கள், பெரும் தீவிபத்து ஏற்பட்டதற்கான அறிகுறிகள் ஆகியவற்றை விஞ்ஞானிகள் கண்டனர்.

ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் இருந்த கட்டடங்கள் அனைத்தும் முற்றாக அழிந்தன.

வீதிகளிலே மனித எலும்புக்கூடுகள் காணப்பட்டன. மரணம் சம்பவிக்கும் முன்னர் வீதிகளில் மக்கள் சர்வ சாதாரணமாக நடமாடிக் கொண்டிருந்தனர். இதனை எலும்புக்கூடுகள் காணப்பட்ட விதத்தில் இருந்து அறியக் கூடியதாக இருந்தது.

அணுக்குண்டு வெடித்த பின்னர் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இடங்களில் சாம்பர் எப்படிக் காணப்பட்டதோ அதே விதமான சாம்பர் மொஹஞ்சதாரோவிலும் காணப்பட்டது.

ஹிரோஷிமா, நாகசாகியில் கதிர்வீச்சு மேலே இருந்து வந்தது.

மொஹஞ்சதாரோவைச் சுற்றிலும் கதிர்வீச்சு காணப்படவில்லை. அதனால் அணுக்குண்டு வெடிப்பினால் மொஹஞ்சதாரோ அழிந்திருக்கலாம் என்பதை ஏற்பதற்கில்லை.

**அழிவுவந்த விதம்**

பின்னர் எப்படி மொஹஞ்சதாரோவுக்கு அழிவு ஏற்பட்டது?

அன்றைய தினம்......

கண்ணைப் பறிக்கும் பிரகாசம் வானில் தோன்றியது.


வாயுமண்டலம் எரிந்து வருவது போன்று காணப்பட்டது.

பிரமாண்டமான வெடிச்சத்தம் கேட்டது.

நீர் நிலைகள் எல்லாம் கொதிக்கத் தொடங்கின.

அவற்றில் இருந்த மீன்கள் எல்லாம் பொரிக்கப்பட்ட மாதிரி காணப்பட்டன.

இது புராணக்கதை அல்ல; உண்மைச் சம்பவம் என்று விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.



அகழ்ந்து எடுக்கப்பட்ட மொஹஞ்சதாரோ புராதன சின்னங்கள்.

இப்படி வானில் தோன்றி வந்த தீப்பந்தங்களை—

'Blazing Chari ts' என்று கிரேக்கர்களும் உரோமானியர்களும்,

'Phantom Ships' என்று ஜப்பானியர்களும் பண்டைக் காலத்தில் வர்ணித்திருந்தனர்.

இவை எல்லாம் உண்மையே.

நவீன விஞ்ஞானம் இவை பற்றி என்ன கூற முடியும்?

பூமியின் வெளிமண்டலத்தில் கொஸ்மிக் கதிர்களும்மின்சார அலைகளும்சேர்ந்த பௌதீக இரசாயனரீதியிலானசேர்க்கை ஒன்றை உருவாக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியான சேர்க்கை Physico-Chemical Formation என்று அழைக்கப்படுகின்றது.

குகைகளில் செதுக்கப்பட்ட ஓவியங்களைத்துக் கணிக்கும்போது சரித்திர காலத்துக்கு முற்பட்ட மக்கள் இப்படியான Physico -Chemical Formation ஐ அவதானித்து இருக்கின்றனர். என்பது தெரியவருகின்றது.

எகிப்து நாட்டின் மூன்றாம் துட்மோஸ் மன்னன் பற்றிய வரலாற்றில் ஒரு குறிப்பு காணப்படுகிறது.

'22ஆம் ஆண்டில் குளிர் காலத்தின் மூன்றாவது மாதத்தில் ஒருநாள் மாலை 6 மணியளவில் வானில் பிரகாசமான பந்து ஒன்று தெரிந்தது. இது தெற்குப் பக்கமாக மெதுவாக நகர்ந்து சென்றது. அதைப் பார்த்தவர்கள் பயந்தனர்.

இவ்வாறு அந்தக் குறிப்பு கூறுகின்றது.

இதுபோன்ற 'தீப்பந்து'கள் பற்றிய ஓவியங்களும் பண்டைக்காலத்தில் தீட்டப்பட்டிருந்தன. அரபுச் சுவடிகளிலும் இவை பற்றிக் கூறப்பட்டிருந்தன.

பௌதிக இரசாயன சேர்க்கை (PCF) களில் பல ரகங்கள் உண்டு. சில 'குளிர்' ஆனவை. அவை நீண்டகாலம் சக்தியையும் ஒளியையும் வெளியே விடாமல் செயற்படும். உருவத்தில் ரபிக் பந்துபோல் இருக்கும்.

> பண்டைக்காலத்தில் இருந்து கூறப்பட்டு வரும் புராணக்கதைகள், கர்ண பரம்பரைக் கதைகளில் உண்மைகள் இல்லாமல் இல்லை என்பதை காலத்துக்குக் காலம் விஞ்ஞானிகள் நிரூபித்து வந்துள்ளனர்.
>
> அற்புதம் என்று பண்டைக்காலத்தில் கருதப்பட்டவற்றை திருப்திகரமான முறையில் விஞ்ஞானம் விளக்கிவருகிறது.
>
> — இப்படிக் கூறுகிறார் சோவியத் விஞ்ஞானி டாக்டர் மிக்கெயில் டிமிட்ரீவ்.
>
> மொஹஞ்சதாரோ அழிந்த விதம்பற்றி அவர் கூறிய கருத்துக்கள் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஆனால் பிரகாசமாகத்தோன்றும் வெள்ளை - மஞ்சள் நிற பௌதிக - இரசாயன சேர்க்கை (PCF) பந்து வாயு மண்டலத்தில் சுதந்திரமாக இடிமுழக்கத்துடன் நகர்ந்து வரும். அதன் உஷ்ணம் பல்லாயிரக்கணக்கான பாகைக்கு மேற்பட்டதாயிருக்கும்.

இவை திடீரென்றுவெடித்து கட்டடங்களை அழிக்கும்.

**நியூயார்க்கில்**

21.9.1910 இல் நியூயோர்க்கில் வானில் 'வளிமண்டல மின்மினிப் பூச்சிகள்' போன்று இப்பந்துகள் நூற்றுக்கணக்கில் பறந்து சென்றதை 3 மணித்தியாலங்களுக்கு மேலாக மக்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

### - டாக்டர் மிக்கேல் டிமிட்ரீவ் -

இதேபோன்று 1978 ஆகஸ்ட் 24ஆம் திகதி இரவு சோவியத் யூனியனில் கஹபரோவ்ஸ்க என்னும் இடத்திலும் இடம் பெற்றது.

திடீரென்று ஜெட் என்ஜின் இரைச்சல் போன்ற சத்தம் கேட்டது. இரவு, பகல்போல் ஆகியது.

பிரகாசமான அப்பொருள் படிப்படியாக பூமிக்கு இறங்கிறது. அந்தஇடம் எரிந்து கருகியமாதிரியான தோற்றம் ஏற்பட்டது. கற்கள்கூட உருகிப்பாயின.

பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்த நிகழ்ச்சி இடம்பெற்ற அந்த இடத்தில் இன்றுகூட புல், பூண்டுகள் முளைப்பது இல்லை.

இன்னொரு சம்பவம் 1984 செப்டம்பரில் ஒருநாள்மாலைப் பொழுது. சோவியத் யூனியன் உட்மோர்ட் குடியரசில் அரசுப் பண்ணை ஒன்றில் கண்ணைக் குருடாக்கும் அளவு பிரகாசத்துடன் பந்துபோன்ற ஒன்று தரையிறங்கியது.

20 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள மின்சார ட்ரான்ஸ்போமர்கள், மின்விநியோக லைன்கள் எல்லாம் உடனே இயங்காமற் போய்விட்டன.

இப்படியான 'தீப்பந்து'களில் இருந்து ஏற்படும் மின்னல் விஷவாயு காற்றில் பரவச் செய்கின்றது என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

மொஹஞ்சதாரோவில் வாழ்ந்த மக்களும் நெருப்பு, வெடிப்பு ஆகியவற்றினால் மட்டும் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. விஷவாயு காற்றில் கலந்ததினாலும் பாதிக்கப்பட்டனர்.

மொஹஞ்சதாரோ அழிவு இடம்பெற்ற அன்று ஆயிரத்துக்கு மேற்பட்ட 'தீப்பந்து'கள் வானில் தோன்றியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன

இதுபோன்ற 'தீப்பந்து' முதன்முறையாக 1983 இல் படம் பிடிக்கப்பட்டது.

மெக்ஸிகோ ஸாகடெக்ஸ் வானிலை அவதான நிலையத்தைச் சேர்ந்த பேராசிரியர் பொனில் முதல் இதனைப் படம் பிடித்தார். அதன் பின்னர் நூற்றுக்கணக்கான படங்கள் எடுக்கப்பட்டுவிட்டன.

மொஹஞ்சதாரோ காலத்தில் ஏற்பட்ட இயற்கையின் கோர சம்பவம் ஒன்று நம் காலத்தில் ஏற்படுமா?

**தடுக்கும் சக்தி உண்டா?**

அப்படி ஏற்பட்டால் அதைத் தடுக்கும் சக்தி எம்மிடம் உண்டா?

அப்படியான இயற்கையின் கோரத் தாண்டவம் நம் காலத்தில் ஏற்பட்டால்...... என்று நினைக்கவே மயிர் சிலிர்க்கிறது.

பழங்காலம் போன்று மனித இனம் உதவியின்றி இன்று இல்லை.

'தீப்பந்து'கள் தோன்றி வருவதை முன்கூட்டியே அறிவிக்கக்கூடிய ராடர் சாதனங்களை நவீன விஞ்ஞானம் தந்துள்ளது.

சரியான சந்தர்ப்பத்தில் ரொக்கெட்டுகளை மனிதன் பாவித்து வானில் செயற்கைக் குண்டு வெடிப்புகளை ஏற்படுத்தி பௌதிக - இரசாயன (PCF) சேர்க்கையாக வரும் பந்து'களை செயலிழக்கச்செய்யமுடியும்.

ஆதாரம்:
— ஸ்புட்னிக்

# 2,010ஆவது ஆண்டில் செவ்வாயில் முதலாவது மனிதன் இறங்குவான்!

பூமியைத் தவிர இதர கிரகங்களில் மனிதர்கள் இருக்கிறார்களா? உயிரினங்கள் வாழ்கின்றனவா? மண்ணும், தண்ணீரும் உள்ளனவா? உயிர்கள் வாழக்கூடிய அளவுக்கு காற்றோட்டம் இருக்கிறதா என்பதை கண்டறிய இடைவிடாத அறிவியல் முயற்சியின் ஒரு கட்டமாக இப்போது செவ்வாய்க் கிரகத்திற்கு விண்கலன்களை அனுப்பும் முயற்சிகள் தொடங்கி இருக்கின்றன.

இந்த அறிவியல் சாதனையிலும் சோவியத் யூனியனும், அமெரிக்காவும்தான் போட்டி போட்டுக் கொண்டு முன்நிற்கின்றன.

சமீபத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு செவ்வாய்க் கிரகத்தை ஆராயும் விண்வெளிக்கலம் ஒன்று சோவியத் யூனியனிலிருந்து அனுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. விரும்பியோ, விரும்பாமலோ இந்த இரண்டு வல்லரசுகளும் இந்தப் பெரும் முயற்சியில் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைக்க வேண்டிய நிலையும் காலக் கட்டாயமாக ஏற்பட்டிருக்கிறது.

1969 ஆம் ஆண்டு ஜூலையில் மனிதன் சந்திரனில் காலடி வைத்து, அங்கிருந்து மண்ணை எடுத்துக் கொண்டு வந்தான். அதைத் தொடர்ந்து அமெரிக்காவும், சோவியத் யூனியனும் விடாமுயற்சியுடன் 'நான் முந்தி — நீ முந்தி' என்று செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

செவ்வாய் கிரகம் பூமியிலிருந்து 10 கோடி மைல் தொலைவில் இருக்கின்றது. நட்சத்திர மண்டலத்தில் சுழன்று கொண்டே இருக்கும் சிவப்பு நிறமான செவ்வாய் கிரகம் எப்போதும் பூமியிலிருந்து அதிக தூரத்தில் இருப்பது இல்லை

இப்போது சோவியத் யூனியன் அனுப்பியிருக்கும் ஆய்வுக் கலம் செவ்வாய் கிரக மண்டலத்தை சூழ்ந்துள்ள படிவங்களை ஆராய்வதற்கே ஆகும். இன்னும் 20 அல்லது 25 ஆண்டுகளில் மனிதன் செவ்வாய் கிரகத்தில் போய் இறங்குவதற்கு இதை ஒரு ஆயத்த முயற்சி என்று கூறலாம். விண்ணியல் ஆராய்ச்சி நிலவரத்தில் இப்போது உள்ளபடி சோவியத் யூனியன், அமெரிக்காவை முந்திக் கொண்டிருக்கிறது. இரு நாடுகளும் தத்தம் பக்கில் தனியாக செவ்வாய் கிரகத்திற்கு

### - ஈ. நவரீதன் -

போனபொதிலும் சோவியத் நாடு அமெரிக்காவை விட 5 ஆண்டுகள் முந்திக் கொண்டு விடும் என்று அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

**கூட்டு முயற்சி**

அமெரிக்காவும், சோவியத் யூனியனும் கூட்டாக ஒத்துழைத்து இந்தச் சாதனையில் ஈடுபடுமானால் 2010வது ஆண்டில் செவ்வாய் கிரகத்தில் முதலாவது மனிதன் போய் இறங்கி விடுவான். இதற்கிடையில் இனிவரும் 10 ஆண்டுகளில் சோவியத் நாடு சங்கிலித்தொடராக ஆள் இல்லாத விண்கலங்கள் பலவற்றை செவ்வாய் கிரகத்தின் புற மண்டலத்திற்கு அனுப்பி ஆய்வுகள் நடத்தும்.



செவ்வாய் கிரகத்தில் மனித முகசிற்பம். அமெரிக்க விண்கலம் எடுத்து அனுப்பிய படம் இது.

செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பும் விண்வெளிக் கலத்தை எந்த மாதிரியில் அமைக்கலாம் என்பது பற்றி அமெரிக்கா, சோவியத் யூனியனின் விஞ்ஞானிகளும், பொறியியலாளர்களும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். முதலில் செவ்வாய் கிரகத்திற்கு ஒரு 'ரோபோ' கலம் அனுப்புவது குறித்தும் பரிசோதனைகள் நடத்தி வருகிறார்கள் இதில் எத்தனையோ இடையூறுகள் வரலாம் என்றாலும் 21 ஆம் நூற்றாண்டில் செவ்வாய் கிரகத்தில் மனிதன் இறங்க முடியும் என்று அமெரிக்க, சோவியத் நிபுணர்கள் உறுதியாகக் கூறுகிறார்கள்.

**மனிதர்கள் வாழ்கிறார்களா?**

செவ்வாய் கிரகம் அநேகமாக பூமியைப் போலவே இருக்கும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை. அங்கே உயிரினங்கள் இருக்கலாம். பூமியில் உள்ளது போலவே எல்லா உயிர்களும் வாழலாம். ஏன் மனிதர்கள்கூட இருக்கலாம் என்றும் எண்ணுகிறார்கள்.

செவ்வாய் கிரகத்தின் நடுவிட்டம் 4200 மைல் நீளம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பூமியின் நடுவிட்டம் 7926 மைல் ஆகும்.

செவ்வாயின் சுற்றுச்சூழல் ஏறக்குறைய பூமியில் உள்ளது போன்றதே. வெப்பம் மிக அதிகமாக இருக்கலாம். எரிமலைகள். பிரம்மாண்டமான பள்ளத்தாக்குகள் இருக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் உள்ளன.

இந்த செவ்வாய் மண்டல பயணத்தில் அமெரிக்கா — ரஷ்யா இருநாடுகளும் ஒத்துழைப்பதால் ஒற்றுமை தோன்றும்.

ஏற்கனவே சோவியத் நாடு சமிக்ஞை கொடுத்துவிட்டது. ரஷ்ய பஸ் புறப்படுகிறது என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் கூறினார். அமெரிக்கா அந்த பஸ்ஸில் இடம்பிடித்து ஏறிக்கொள்ளுமா? என்றும் இப்போது அமெரிக்க மக்களிடையே கேள்வி எழுந்திருக்கிறது.

**7 மாத கால ஆய்வு**

செவ்வாய் கிரக சுற்றுப்புற ஆய்வுக்காகச் செலுத்தப்பட்டுள்ள சோவியத் விண்கலன் செவ்வாய் மண்டல சூழலை ஆராய்ந்து தகவல்கள் முழுதும் தர 7 மாத காலம் பிடிக்கும். செவ்வாய் மண்டலத்தை இது சென்றடைய சுமார் 280 நாட்கள் பிடிக்கும்.

கதிரியக்கத்தைச் செலுத்தி செவ்வாய் கிரகத்தின் தரையைச் சோதிக்கவும் அதில் ஏற்பாடு உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்கள் போனதே!

சஞ்சீவி சிறுகதை

அவனது மனம் போல குமுறியெறியும் கடலலையை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான், எப்போதும் சுறுசுறுப்பாக அமைதியற்றிருக்கும் தலைநகரில் இந்தக் காலிமுகத்திடலில் தனிமையில் குந்தியிருப்பது நிம்மதியாயிருக்கும்! தொட்டுத் தழுவுகின்ற குளிர்காற்றில் தன்னையே மறந்து கற்பனையிலயித்திருப்பான் ராகவன்.

வீட்டிலிருந்து அன்றும் வழக்கம்போல, அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. ''தம்பி! ஏன் இப்போது பதில் போடுவதில்லை...? ஐயா, அம்மாவை மறந்துவிட்டாயா? உன் நல்வாழ்வொன்றையே கனவாகக் கொண்டிருக்கிறோம். நேற்றும் ஒரு புறோக்கர் உன்னுடைய சம்பந்தமாக கதைக்க வந்திருந்தார்...''

பாரிய அலையொன்று குமுறியெழுந்தது, கடிதத்தைக் கிழித்தெறிந்து வீசினான். அலையொன்று அதனைக் கவர்ந்திழுத்தது. கடிதத்தையா...? அவன் நினைவையா?

பயிற்றப்பட்ட ஆசிரியராகி, குடாநாட்டில் அவனுடைய ஊருக்குச் சமீபமாக ஒரு பாடசாலை கிடைத்தது. அங்குதான் அவனுடைய முதலாவது சம்பந்தம் . காதலுக்குத் தகுதி வேண்டும், அந்தஸ்து வேண்டும்! என்றுதான் கணக்குப் போட்டிருந்தான். இதனால் தன்னைவிட உயர்ந்தவர்களைக் காணும்போது தாழ்வு மனப்பான்மையில் தலை குனிந்து கொள்வான். இதே போல கல்வியில், அனுபவத்தில் தன்னைவிடக் குறைந்தவர்களை சட்டை செய்யமாட்டான். இந்தத் தவறான தப்புக்கணக்கு அவன் மனதில் போலியானவொரு சுயகௌரவத்தை வளர்த்தது. அதனால் அவன் சந்தித்த முதலாவது இழப்பு...! சந்திராவை இழந்தது. அவனைப் பொறுத்தளவில் பேரிழப்புத்தான்!

அவளுடைய இளமை, அழகு அவன் மனதில் சலனத்தை ஏற்படுத்தி, உறங்காமல் பல இரவுகள் தவிக்க வைத்தது. அவன் தனக்குள் புழுங்கிய நாட்கள், நாட்களல்ல... அவை வருடங்கள். அவள் ஒரு பட்டதாரி ஆசிரியை. கல்வி அந்தஸ்து வாழ்வில் குறுக்கிடுமோ என்று காதலை வெளிப்படுத்த துணிவில்லாமல் தவித்தான். ஸ்டாவ் ரூமில் அவளைக் கண்டவுடன் மனத்தைச் சூழும் தாழ்வு மேகங்கள்! அவற்றையெல்லாம் விலத்தி, தனது உள்ளத்தை வெளிப்படுத்தலாம்! துணிவிருந்தால் தானே? அமைதியான புன்னகையுடன் புத்தகத்தில் முகம் பதித்துக்கொள்வான்.

தனிமையில் சிந்திப்பான். முடிவினை அறியவேண்டும். கொதித்தெழும்பும் உணர்வலைகள். பிறகு அந்தத் தாழ்வு மனமேகத்துள் மறைந்து கலங்க வைக்கும் கனவு!

''நான் ஒரு கோழை... காதலிக்கத் துணிவில்லாத கோழை. எனக்கொரு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் தெரியாத கோழை... கோழை!''— அந்தக் குழப்பத்தில் மாதங்கள் பல கடந்து இறுதியில் ஒரு முடிவு தெரிந்தது. அவனுடைய அணியைச் சேர்ந்த ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரின் காதல் வலையில் அவள் வீழ்ந்துவிட்டாள். அந்த முடிவை அறிந்த பின் அந்தப் பாடசாலையே சூனியமாகி விட்டது.

அவளைக் காணுகின்றபோது பாடசாலை முடிந்து அந்த ஆசிரியரும் அவளும் மோட்டார் சைக்கிளில் ஒன்றாகப் போவதை, கலகலப்பாக பேசிச் சிரித்து சுதந்திரமான காதல் வானில் சிறகடிப்பதைப் பூட்டிய அடிமைவிலங்குடன் ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருப்பான்.

சீதன பேரத்தில் முன்னேற்றம் கண்டு, பெண்ணைப்பார்க்கப் போனான். அவனுக்கு அவளைப் பிடித்துவிட்டது. கருமை என்றாலும் அழகி. அகன்ற புருவம். உருண்டைக் கண்கள் பேசிய அந்த வார்த்தைகள்.

'ராகவன்! எத்தனையோ மாப்பிள்ளைகளுக்குக் காட்சி கொடுத்திருக்கிறேன். நீ யாவது எனக்கு மாலை சூடுவாயா? என்னைக் கரைசேர்ப்பாயா? என்னைக் கரம் பற்றுவாயா?...'

—அம்மா, ஐயாவுக்குப் பிடித்திருந்தது. ஆனால் தங்கச்சிதான் முந்திரிக்கொட்டையாய் முழங்கித் தள்ளினாள்.

'எங்கட வீட்டில ஆரும் கறுப்பா...? அண்ணை நிறத்துக்கு அவள் தோதில்ல...'— தான் சிவப்பி என்ற கர்வம்.

சீதனத்துக்கெதிராகப் போராட முடியாவிட்டாலும், நிறவெறிக்கு எதிராக இறுதிவரை போராடியே தீருவது! அவளைக் கட்டியே தீருவது! என்ற இலட்சிய வேட்கையுடன் களத்தில் குதித்தான். கொழும்பில் இருந்த சித்தி செய்தி கேட்டு, அவசரமாக ஊர் திரும்பி வீட்டுக்கு வந்திருந்தாள். போராட்டத்தில் புதிய திருப்பம்!

'போயும்... போயும் அந்த ஊருக்குள்ளேயே கலியாணம் பேசுறது. பட்டிக்காடுகள்! எங்களுடைய நாகரிகமென்ன? பண்பாடென்ன?' —புதிய கோணத்தில் பேச்சுவார்த்தையை திருப்பினாள்.

இடைக்கிடை ஆங்கிலத்தைப் புகுத்தி, நடை, உடை, பாவனையில் புதிய நாகரிக இலக்கணம் படிக்கும் சித்தியின் கருத்தை, ஆமோதித்தாள் தங்கை. புதிய வாழ்க்கை, புதிய நாகரிகத்தை அறியும் ஆவல்; ஐயாவுக்கும் அம்மாவுக்கும்!

'கொழும்பில் எனக்குத் தெரிஞ்ச ஒரு குடும்பம்: நல்ல பெரிய இடம்: தகப்பன் முந்தி அரசாங்கத்தில் பெரிய வேலை பார்த்தவர்; முன்னாள் அஸிஸ்டெண்ட் கொமிஷனர். ஒரு மகன் ஸாம்பியாவில் எக்கவுண்டன்...'

—வீட்டில் எல்லோரும் வாயைப் பிளந்தார்கள். அவனுக்கு சித்தியின்மேல் ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்துவிட்டாளே சித்தி.

'கலியாணம்: அது எனக்குத்தான்! எனக்குத்தான்!! நான் மனப்பூர்வமாக விரும்பி, எனக்கேற்ற துணையைத் தெரிவுசெய்ய எனக்கு உரிமையிருக்கு. உங்களையே நம்பி, முப்பத்தைந்து வயதுவரைக்கும் காலத்தைக் கடத்திவிட்ட என்னுடைய நிலைமையை, யோசிச்சுப் பாருங்கோ! என்னுடைய உணர்வுகளை ... ஓ... நான் ஊமையாய் இருக்கிறதால... உங்களுக்கு புரியாமலிருக்கலாம்! என்னுடைய வாழ்க்கையில அனாவசியமாகத் தலையிட்டு, என்னை எரிமலையாக்க வேண்டாம்!'

—கோபத்தில் கைகால்கள் உதறல் எடுத்தது. அடிக்கடி எச்சிலை விழுங்கிக்கொண்டான்.

'அப்ப தங்கச்சி! உன்னோடேயே நாங்களும் கொழும்புக்கு வாறம். அதையும் ஏன் விடுவான்? நல்ல இடமென்றால் தம்பிக்குத் தானே மதிப்பு...'

— 'எனக்கிஞ்ச மதிப்பு குறைஞ்சுபோகயில்ல. சும்மா வீணாக அலைஞ்சு திரிஞ்சு...... காலத்தை வீணாக்காம இதையே செய்வம்...'

—அவன் அம்மாவின் சேலைத் தலைப்பை மொய்த்தபடி கூறினான். அவன் காலம் என்ற பதத்தை பிரயோகித்த நோக்கம்; தன்னுடைய இளமையையும், வயதையும் சுட்டிக்காட்டவே! ஆனால் அம்மா அதனைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.



'அதுக் கென்னடா சித்தி சொன்னதையும் ஒருக்கா பார்ப்பம்...'

'இப்ப சித்திக்கா கல்யாணம்...எனக்கா கல்யாணம்?

—அவன் ஆத்திரப்பட்டுக் கத்தினான். பதிலடியாக ஐயாவின் செருமல் கேட்டது. அவன் பெட்டிப்பாம்பாகி விட்டான். ஐயாவுக்கு முன் நின்று முகம் கொடுத்துப் பேசாத பிள்ளை. நல்ல அருமையான அமைதியான பெடியன்.. இந்தக்காலத்து பெடியன்களைப் போலவே...... சிகரெட் சாராயம் குடித்துக் கொண்டா திரியுது?... —ஊரில் அவனுக்கு கிடைக்கும் நற்சாட்சிப் பத்திரங்களைக் கோவைப்படுத்தி அதனை மகனின் சீதன மார்க்கெட்டுக்குப் பயன்படுத்திக்கொண்டார். அவனைப் புகழ்வதில் தனியின்பம். 'இந்தக்காலத்து பெடியளைப்போலவா என்னுடைய மகன். இப்பிடியொரு மாப்பிள்ளைய இந்த நாளையில தேடுங்கோ பார்ப்போம்...'

—எல்லோரும் புகழ்ந்து துதித்து மலர்களை அள்ளிச் சொரியும் ஞானியாய், சாந்த சொரூபியாய் காட்சியளிப்

- அநுராசன் -

பான். அவனுடைய உள்ளம் சுதந்திரமாக முடிவெடுத்தது கிடையாது. எந்த நேரமும் எங்கோவொரு மூலையில் ஐயாவின் செருமல் கேட்டுக் கொண்டேயிருக்கும். ஒழுக்கசீலனான இவனைக்கண்டு, தலைசாய்த்து புன்னைகைக்கும் பெரியோர்கள்; மரியாதையாய் ஒதுங்கி வழிவிடும் கன்னிப்பெண்கள். தனது இமேஜைக் காக்க எத்தனை சத்திய சோதனைகள்.

எதுவித காரணமுமின்றி உஷாவின் சம்பந்தம் நிராகரிக்கப்பட்டது. பெண்வீட்டார் வந்து பதிலைக் கேட்டபோது ஐயா எதற்கும் தயாராகவிருந்தார்.

'மகனுக்கு பொம்பிளையைப் பிடிக்கவில்லையாம். சுறுப்பாம்...' —அவனுக்குத் தன்னுடைய குரல்வளையைத் தானே நெரித்து தற்கொலை செய்ய வேண்டும்போலவிருந்தது. உள்ளக்கிடக்கையை உணர்த்த முடியாதவனுக்கு குரல்வளை எதற்கு? சித்தியின் புதிய ஏற்பாட்டின்படி, கொழும்புக்கு பயணம்! வழக்கம்போல பெண் பார்த்துவிட்டு வந்தபின் ஐயா சித்தியிடம் கேட்டார்.

'புள்ள! சீதனமெண்டால் முந்தின சம்பந்தத்தை விடக் குறைவு. அவையள் வீடு தாறனென்று சொன்னவையள். இவையள் ...டும் தருவினமாம்.....'

—'நீங்கள் சீதனத்தைப் பற்றி, பார்க்கிறியள். அந்தக் குடும்பத்தில சம்பந்தம் செய்யக் குடுத்து வைச்சிருக்க வேணும்.....'

—இந்தவொரு விடயம் அவனுக்குப் பலமாக அமைந்தது. பெண்ணைப் பொறுத்தளவில், விருப்பு, வெறுப்பு இல்லாவிட்டாலும், எப்பிடியும் சித்தியின் மேலுள்ள ஆத்திரத்தைத் தீர்க்க வாய்ப்பாக அமைந்தது.

'அம்மா! நீங்களே யோசிச்சுப் பாருங்கோ! வீடில்லாம கல்யாணம் செய்து, போட்டு, பிறகு தெருவிலேயே நிற்கிறது. என்னுடைய நிலமையை யோசிச்சுப் பாருங்கோ!

'ராசா உன்னப்போல வாழ்க்கையில நிதானமுள்ள முன்யோசனையுள்ள புள்ளையைப்பெற, என்ன தவம் செய்தேனோ? பெண்களுடைய கவர்ச்சியில மயங்காமல், எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கும் உன்னுடைய பொறுப்புணர்ச்சி, இந்தக் காலத்தில எந்தப் பெடியளுக்கு வரும்?'

ஊருக்கு வந்த அன்றைய தினமே, அப்பா டெலிகிராம் அனுப்பினார்.

தனக்கொரு துணையைத் தானே தேர்ந்தெடுக்க முற்பட்டான்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக, பாடசாலை அபிவிருத்திசபையின் நிதியுடன் இரண்டு ஆசிரியைகளை நியமித்திருந்தார்கள். அவர்களில் ஒருத்தி தேவி ......சுபத்திரா தேவி! காதலைத் தூண்டியது. இந்த முறையும் பஸ்ஸைத் தவறவிடக்கூடாது. பின்பு ராஜேந்தரைப்போல 'நானொரு ராசியில்லா ராஜா' பாட வேண்டியிருக்கும். முதலில் அவளோடு நெருக்கமாகப் பழகிய பின்புதான் முடிவைத் தெரிவிக்க வேண்டும்.

ஸ்டாவ் ரூமுக்குள் நுழைந்தான். அவள் சுபத்திரா தேவி ஏதோ புத்தகத்தில் மூழ்கிப் போயிருந்தாள்.

அவனைக்கண்டதும் மரியாதைக்கென்றாலும்...... அவன் இப்போது ஒரு பட்டதாரி ஆசிரியன். அத்தோடு பதினைந்து வருட அனுபவ முதிர்வு. கேவலம்! உயர்தரத்துடன் தொண்டர் ஆசிரியராகவிருக்கும் அவளுக்கு இவ்வளவு திமிரா? கௌரவத்தை விட்டுக்கொடுத்து அவனே கதையைத் தொடக்கினான். இனி அந்தப் போலிக் கௌரவம் அவனுக்குத் தேவையில்லை. அவனுக்கொரு வாழ்வு வேண்டும்! அந்த இளமைக்கேற்ற அழகான கவர்ச்சி... வேண்டும்! அவளைப்போல ...

'ஹலோ! மன்னிக்கவும். எப்பிடி சுபத்திரா வேலையெல்லாம் போகுது' — அவள் ஒருவித பயம் கலந்த மரியாதையுடன் நெளிந்தாள்.

—'பரவாயில்லை ஒரு மாதிரி போகுது......'

—'இந்தமுறை டீச்சிங் குக்கு கோல் பண்ணியிருக்கு. விண்ணப்பிச்சனீங்களே...'

—'ஓம் இந்தமுறை எப்பிடியும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறன்...' — அதெப்படி நிச்சயமாகக் கூறுவீங்கள்...?' —அவன் சிரித்தபடி கேட்டான்.

'எங்கட அத்தானுக்குத் தெரிஞ்சவொருவர் மினிஸ்ரியில இருக்கிறார்...'— அவள் பெருமையாக உதட்டை நெளித்தாள்.

ஏதோ அவளுடைய துன்பங்களுக்கு விடிவெள்ளியாக, இரட்சகனாக நினைத்தவன் ஏமாந்தான். உதவி கேட்பவளுக்குத்தானே உதவ முடியும்!

'ஏன் மேல தொடர்ந்து படிக்கலாமே... பட்டதாரிப் படிப்பைத் தொடரலாமே...' —உயர் படிப்புக்காவது இவனுடைய உதவியைக் கோருவாளா? என்ற நப்பாசை. அவள் சிரித்து மழுப்பினாள்.

கடந்தகால ஏமாற்றங்கள் உந்தி ஒரு புதுவித உத்வேகத்தைக் கொடுத்தது. வலிய அவளையே சுற்றி வந்தான். அவளாகவே பேச்சை ஆரம்பிப்பான். அவன் போகின்ற இடங்கள், பார்க்கின்ற இடங்கள் எங்கும் அவளாகவே தெரிந்தாள். தெரிய வேண்டும் என விரும்பினான்.

'ஏன் டீச்சர்! நீங்கள் கோயிலுக்குப்போறதில்லையா? —தான் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் கோயிலுக்குப் போவதை எடுத்துக் கூறினான்.

'டீச்சர்! பூவொன்று புயலானது படம் பார்த்தனீங்களா)எனக்கென்றால்பாலசந்தரைப்போல, புதுமையான டைரக்டரைத்தான் பிடிக்கும்!......'

— 'உன்னையார் இதெல்லாம் கேட்டது? — அவள் கேட்கவில்லை. கேட்டு விடுவாளோ என்ற பயம். அவனை நினைக்க அவனுக்கே வியப்பு. பெண்களின் பக்கமே ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்தவன் இப்போது படியிறங்கி பரிதவித்தான். எல்லையைக் கடந்து ஏமாற்றத்தைத் தரிசிக்கும்போது, பலவீனம் பளிச்சிடுகின்றது.

நல்லகாலம்! கடவுள் அவனைக் காப்பாற்றினார். இவன் தனது விருப்பத்தை வெளியிட முன்னரே அவள் திருமண அழைப்புடன் வந்தாள்.

'மாஸ்டர் தவறாமல் வந்திடுங்கோ!...' —இடி விழுந்தது போலயிருந்தது. அன்று முழு நாளும் கட்டிலில் கிடந்தான். இனி எனக்கொரு வாழ்வே இல்லையா? அதைவிட இன்னுமொரு அவமானம் அதனைத்தான் அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

காரியாலய அறைக்கு வெளியே அவள் சக ஆசிரியை ஒருத்திக்குத் திருமண அழைப்பிதழைக் கொடுத்தாள். உரையாடல் அவனுக்கு உறைத்தது.

'என்ன சுபத்திரா? நான் நினைச்சன் நீர் ராகவன் மாஸ்டரைத்தான் விரும்பிநீராக்கும் எண்டு...'

—'அவர் தான் எனக்குப் பின்னால வலிய சுற்றிக் கொண்டு வருவார். பாவம்! தலையில மயிரும் போய்... இப்ப நாற்பதுக்கு மேல இருக்கும்!...'

—'பாவமப்பா! அவருக்குக் குடும்பப் பொறுப்புகள் இருக்கு 'பால. அதுதான் இன்னும் செய்யாமலே இருக்கிறார்...'

—சுபத்திராதேவி பலமாகச் சிரித்தாள். உலகமே அதிர்ந்து அவன் மேல் சரிவது போல இருந்தது. அவளைப்போல பத்து வருடங்களுக்கு முன் அவன் எவ்வளவு அழகு. அடர்த்தியான தலைமயிர். சிவந்த கன்னங்குழியை இணைத்ததான மெல்லிய கரும் மீசை. பார்க்கும் பெண்களுக்கு இவன் மீது எதிர்பார்ப்பிருக்கும் என்று இறுமாப்புக் கொண்டிருந்தகாலம். இன்று! அவளே அவனுடைய நிலைமையை எடுத்துக் காட்டிவிட்டாள்.

அவன் ஒரு புதிய சித்தாந்தத்துடன் எழுந்தான். மற்றவர்களுடைய அபிப்பிராயத்துக்காக, தன்னுடைய உணர்வுகளை, ஆசைகளை அடக்கி சமாதியிட்டு, பூச்சொரிந்து வழிபடும் வணக்கத்துக்குரிய சிலையாக, பேசாமடந்தையாக இனியும் வாழத் தயாரில்லை!

வாழ்வில் விரக்தி, வேதனை, வெறுப்பு, ஊரைவிட்டு ஐயாவின் கட்டுப்பாடு, சீதனம், சுயநலம், திருமணபந்தம் எல்லாவற்றையும் உதறியெறிந்தான். கொழும்புக்கு இடமாற்றம் கிடைத்தது.

இப்போது அவனைக் கட்டுப்படுத்த யாருமே இல்லை. சுதந்திரமானவொரு உலகம், இனி யாருடைய அபிப்பிராயமுமே தேவையில்லை. ★

## இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

வாழைப்பழமும் அதன் பயனும் — இனிய சுவை மிகுந்த பழம். உடல் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாச் சத்துகளும் பாலைப்போல் கலந்துள்ளது. மூளைக்கு மிக நல்லது. காலை, மாலை ஒவ்வொரு பழம் உண்டுவர உடல் நன்கு வளரும். நல்ல ஜீரணமாகும். மலக்கட்டு நீங்கும். அயன்சத்துநிறைந்த வாழைப்பழம் இரவு நேரங்களில் பாலுடன் உண்பது நற்பயன் விளைவிக்கும் எல்லா வாழைப்பழங்களிலும் ஒரே அளவில் தான் சத்துப்பொருள்கள் அடங்கி உள்ளன.

முழங்கால் வாய்வுக்கு மருந்து — முழங்கால் வாய்வுக்கு முடக்கத்தான் துவையல், ஆதிநாராயணன் (வாதமடக்கி) கீரைப்பூண்டு மிளகு சேர்த்து பொரியல் செய்து உணவுடன் உட்கொண்டுவர முழங்கால் வாய்வு குணமாகும்.

இருதய வியாதிக்கு கஷாயம் - செம்பரத்தம்பூ இரண்டு எடுத்து இரண்டு டம்ளர் நீரில் போட்டு 50 கிராம் மருதம்பட்டையும் இடித்துப் போட்டு காய்ச்சி ஒரு டம்ளராக கசாயமாக்கி தினம் காலையில் அரை அவுன்ஸ் 12 நாட்கள் சாப்பிட இருதய சம்பந்தமான நோய்கள் குணமடையும்.

தொகுப்பு: க. கனகராசா

## காகிதம் கனவில் வந்தால் . . . .

★ எழுதப்பட்ட காகிதம் கனவில் தோன்றினால் கோர்ட்டு வழக்கு, பணச் செலவு உண்டாகும்.

★ எதுவும் எழுதப்பெறாத வெற்றுக் காகிதத்தைக் கனவில் காண்பது நன்மை ஊக் குறிக்கும்.

★ காகிதக் கட்டுக்களைத் தான் சுமப்பது போல் கனவு கண்டால், சோதனைகள், துன்பங்கள் உண்டாகும்.

★ செய்தித் தாளைப் படிப்பது போன்று தோன்றினால் நண்பர்களின் உதவி கிடைக்கும்

'கனவுகளும் பலன்களும்' நூலிலிருந்து.

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு

விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக முகாமையாளர்,

உதயன் / சஞ்சீவி

292/2, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.

COMPUTERIZED PROCESSING & PRINTING A 135 COLOUR ROLL

P.C PRINTS - 4-00

PROCESSING Free 8x10

COLOMBO studio, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனுடன் பிறக்கும் இந்தியக் குழந்தை

இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் கடன் சுமை இருக்கிறது.

எப்படி என்று எண்ணுகிறீர்களா?

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 1980—81இல் இருந்து ஏறிக்கொண்டே போகிறது.

1980—81இல் ரூபா 11,298 கோடியாக (இந்தியப்பணத்தில்) இருந்த வெளிநாட்டுக் கடன் 1986 — 87இல் 20,299 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது.

இன்று இந்தியாவின் மொத்தக் கடன் 1 லட்சத்து 66 ஆயிரத்து 546 கோடி ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை ஏறத்தாழ 80 கோடி ஆகும்,

அப்படிப் பார்க்கும்போது இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் 2082ரூபா கடன் உள்ளது. அதாவது பிறந்த குழந்தையின் தலையில் கூட 2082 ரூபா கடன் சுமை உள்ளது.

'பழைய கடன்' என்று எண்ணவேண்டியதுதான்.

## நிழல் நிஜமானது

பிரபல ஹொலிவூட் குழந்தை நட்சத்திரம் ஜீடித் பார்ஸி.

10 வயதான இச் சிறுமி 'தி ரிவெஞ்ச்', ஜோஸ் — 4 உள்பட பல படங்களில் நடித்து உள்ளார்.

'பட்டல் விஷன்' என்ற படத்தில் தந்தையின் கையால் கொலை செய்யப்படும் மகள் பாத்திரத்தில் நடித்து இருக்கிறாள்.

இந்தப் படத்தில் நடித்தது போன்றே அவளது நிஜ வாழ்க்கையும் முடிந்து விட்டது.

ஜீடித்தையும் அவளது தாய் மரியாவையும் தந்தை ஜோசப் சுட்டுக் கொன்றுவிட்டு பெட்ரோல் ஊற்றி எரித்து விட்டார்.

பிறகு தானும் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

## சப்பாத்து இன்றி பாடசாலைக்கு போகாத கோர்ப்பச்சேவ்

சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்பச்சேவின் வாழ்க்கை வரலாறு செய்திப் படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

45 நிமிடங்கள் ஓடக் கூடியது இப்படம்.

இந்தப் படத்தில் கோர்ப்பச்சேவின் தாயார் மரியாவின் பேட்டி இடம் பெற்று வருகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது தனது குடும்பம் இருந்த வறுமை நிலையை மரியா தனது பேட்டியில் குறிப்பிட்டு இருக்கிறார்.

''என் மகன் கோர்ப்ச்சேவுக்கு சப்பாத்து வாங்கக் கூட பணம் இல்லாது கஷ்டப்பட்டேன்.

''இதனால் அவன் மூன்று மாதம் பாடசாலைக்குக் கூடச் செல்லவில்லை'' — இப்படிப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார் மரியா.



கோர்பச்சேவ்

இப்படம் போலந்து நாட்டு டெலிவிஷனல் ஒளிபரப்பப்பட்டது. ★

## உங்களுக்குத் தெரியுமா?

அதிகமான டாக்டர்களைக் கொண்ட நாடு எது என்று தெரியுமா? அமெரிக்காதான்.

தற்போது அங்கு பதிவுபெற்ற டாக்டர்களின் எண்ணிக்கை : 1 லட்சத்து 36 ஆயிரம்.

★ ★ ★

'கொடிகாத்த குமரன்' போன்று 'கொடிகாத்த குமரி'யும் ஒரு நாட்டில் இருந்தாள்.

அவள் யார் தெரியுமா? பிரான்ஸில் கொடிகாத்த வீராங்கனை என்று ஜோன் ஓவ் ஆர்க்'கைப் புகழ்வதுண்டு.

கொடிகாத்த குமரன் திருப்பூர்க் குமரன் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

★ ★ ★

இங்கு கருத்தடை செய்துகொண்டால் சன்மானம் கிடைக்கும்.

சன்மானம் என்றால் பணஉதவி, வேறுநாடுகளில் பல்வேறு சலுகைகள் பதவி உயர்வு கிடைக்கும்.

ஆனால் 'ஐவரிகோஸ்ட்' என்ற ஆபிரிக்க நாட்டில் கருத்தடை செய்துகொள்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வளவுதான். பிடித்துக்கொண்டுபோய் மரணதண்டனை தருவார்கள்.

கருத்தடை செய்வதை அந்தநாடு தடைசெய்துவிட்டது. மீறுபவர்களுக்கு மரணதண்டனை. ★

## கடமையைச் செய்யத்தவறிய பத்தாயிரம் பொலீஸார்

சோவியத் யூனியனில் சுமார் பத்தாயிரம் பொலீஸார் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர்.

காரணம், கடமையை ஒழுங்காகச் செய்யவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டதேயாகும்.

பொலீஸார் கடமையை ஒழுங்காகச் செய்கிறார்களா? என்பதுபற்றி சோவியத் அரசு விசாரணை ஒன்றை நடத்தியது.

கடந்த ஆண்டு இரண்டு லட்சம் பொலீஸார் இந்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதில் பெரும்பாலானவர்கள் தேறிவிட்டனர். பத்தாயிரம் பொலீஸார் மட்டும் மாட்டிக்கொண்டனர். ★

பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

# நத்தை விழுங்கும் போட்டி; 15 நிமிடத்தில் 267 வயிற்றுக்குள்!

இட்லி, பூரி சாப்பிடும் போட்டி தெரியும். நத்தை சாப்பிடும் போட்டி பற்றி கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

முகம் சுளிக்க வேண்டாம். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் 'லபக் லபக்' என்று நத்தைகளை விழுங்கி உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

ஜெட்வேகத்தில் இவர் சாப்பிட்ட நத்தைகள் எவ்வளவு தெரியுமா? 267 ! பதினைந்து நிமிடத்தில் அத்தனையும் விழுங்கி விட்டார்.

இந்த அரிய சாதனையைப் படைத்திருப்பவர் வின்சென்ட் ஜெவுல்கோ. இவருக்குவயது48. தலைநகர்பாரிஸ் அருகே உள்ள செயின்ட் பானட் என்னும் இடத்தில் போட்டி நடந்தது. 15நிமிடங்களுக்கு மேல் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தால் ஜெவுல்கோ மேலும் 50 நத்தைகளை விழுங்கியிருப்பார்.

கடந்த ஆண்டு நடந்த போட்டியில் இரால் 232



நத்தைகள் தான் சாப்பிட முடிந்ததாம்.

★ ★

ஒரிஸா மாநிலம் புவனேஸ்வரம் பகுதியில் லட்சக்கணக்கில் ஆபிரிக்க நத்தைகள் படையெடுத்துள்ளன.

கோடைகாலம் முழுவதும் பூமிக்கு அடியில் பதுங்கி இருந்த இவைகள், மழைகாலம் தொடங்கியதும் வெளிக்கிளம்பி சாய்கிறிகள், பறங்களை நாசமாக்கிவருகின்றன.

இந்த நத்தைகள் ஆராய்ச்சிக்காக ஆபிரிக்காவில் இருந்து ஒரிஸா விவசாய பல்கலைக்கழகத்துக்குக் கொண்டுவரப்பட்டன. அங்கு ஆராய்ச்சிக் கூடத்தில் இருந்து தப்பிய சில நத்தைகள் இனப்பெருக்கம் செய்து, இப்போது லட்சக்கணக்கில் பெருகிவிட்டன.

தற்போது அவற்றை ஒழிப்பது இயலாத காரியமாக இருக்கிறது. விழுங்கவேண்டியது தானே. ★

# கணவன் ஒன்று நினைக்க கம்பியூட்டர் ஒன்று நினைத்தது!

துருக்கியைச் சேர்ந்தவர் அப்துல் சுலைமான்.

ஆறு வருட திருமணவாழ்வு அவருக்குக் கசந்தது.

மனைவி எஸ்ரினை விவாகரத்துச் செய்து விட்டு இன்பமான திருமணம் ஒன்றைச் செய்துகொள்ள அவர் திட்டமிட்டார்.

முதல் அலுவலாக மனைவி எஸ்னுக்கு மூன்று முறை 'தலாக்' கூறி அவளின் தாய் வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

இரண்டாவதாக 'ஏற்ற' துணைவியைத் தேர்ந்தெடுக்க கம்பியூட்டரின் உதவியை நாடினார்.

கம்பியூட்டரும் அவருக்கு 'ஏற்ற' மனைவியைத் தேர்ந்தெடுத்தது. முன்னாள் மனைவி எஸ்ரினையே மீண்டும் ஏற்ற மனைவியாக கம்பியூட்டர் தெரிவு செய்தது.

சுலைமானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கம்பியூட்டரின் கட்டளைக்குப் பணியவேண்டியதாயிற்று.

பரந்த மனப்பான்மையுடன் மீண்டும் எஸ்ரினை அன்பு மனையாளாக ஏற்றுக்கொண்டு. ஏழாவது ஆண்டு திருமண வாழ்வில் காலடி எடுத்து வைத்தார்.

இச்சம்பவம் இரண்டு 'புதுமொழி'களை உருவாக்கிவிட்டது.

ஒன்று—

திருமணங்கள் சொர்க்கத்தில் மட்டுமல்ல, கம்பியூட்டரிலும் நிச்சயிக்கப்படுகிறது.

இரண்டு— நாம் ஒன்று நினைக்க கம்பியூட்டர் ஒன்று நினைக்கும்.

அப்படி என்று சொன்னால்— நம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் — என்ற பழமொழி என்னவது? ★

## 75 ஆண்டு கடலில் கிடந்த மதுபானம்!

பழமையான மதுபானத்துக்கு எப்போதுமே கடுமையான கிராக்கி உண்டு.

75 ஆண்டுகளுக்கு முந்திய ஸ்காட்லாந்து விஸ்கி, பிரான்சு சேம்பைன் மதுபான போத்தல்கள் சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் ஏலம் விடப்பட்டன.

1913 - ஆம் ஆண்டு கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து இந்தப் போத்தல்கள் கண்டு எடுக்கப்பட்டன.

அவற்றில் ஒரு போத்தலை ஒரு பெண் தனது தந்தைக்காக 2700 ரூபாய்க்கு ஏலம் எடுத்தாள். ★

## ரூ.9 ஆயிரத்துக்கு ஏலம் போன காற்சட்டை!

பிரபல ரொக் இசைப்பாடகர் எல்விஸ்பிரிஸ்லியின் உடைமைகள் லண்டனில் ஏலம் விடப்பட்டன.

எல்விசின் ரசிகர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஏலம் எடுத்தனர்.

எல்விசின் 2 அரைக் காற்சட்டை 9 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ஒரு எலக்ட்ரானிக் கிடார் இசைக்கருவிக்குத்தான் அதிக விலைகிடைத்தது. ★

## பெரிய சரக்கு விமானம்!

உலகின் மிகப் பெரிய சரக்கு விமானத்தை சோவியத் நிபுணர்கள் உருவாக்கி உள்ளனர்.

ராட்சத ட்ரக்குகள், மோறிகள், பஸ்கள், ட்ராக்டர்கள், படகுகள், பாலம் கட்டும் இரும்புச்சட்டங்கள், புல்டோசர்கள் ஆகியவற்றை இதில் எடுத்துச் செல்லலாம்.

விமானத்தின் முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் சரக்குகளை ஏற்றலாம்.

விமானத்தின் உள்பக்கக் கூரையில் 10 தொன் எடையுள்ள கிரேன் (பளு தூக்கும் இயந்திரம்) பொருத்தப்பட்டுள்ளது.

சரக்குகளை ஏற்றி இறக்கும் 88 பணியாளர்களும் இந்த விமானத்தில் அமர்ந்து செல்ல முடியும்.

ஏ. என். 124 என்று விமானத்துக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ★

## சோவியத்தில் விமானம் கடத்தும் முயற்சி

சோவியத் யூனியனில் கடந்த 15 ஆண்டுகளில் 50 முறை விமானங்களைக் கடத்த முயற்சி நடந்துள்ளது.

இதில் பெரும்பாலான முயற்சிகள் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

விமான ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப்படையினரின் விழிப்பு உணர்ச்சியே இதற்குக் காரணம் என்று சோவியத் அதிகாரிகள் தெரிவித்தனர். ★

## செயற்கை பெட்ரோல்!

கேரளாவில் உள்ள இடுக்கி மாவட்டம் வழவரா கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் பாபு. இவர் செயற்கை முறையில் பெட்ரோல் தயாரித்து உள்ளார். அது இயற்கையாக பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் பெட்ரோல் போல உள்ளது. சேரள எம். பி குரியன் என்பவர் அந்த பெட்ரோலை ஊற்றித்தனது காரை இயக்கினார்.

இதையடுத்து மத்திய அரசு விஞ்ஞானிகள் குழு ஒன்றை கேரளாவுக்கு அனுப்பி செயற்கை முறையில் தயாரிக்கப்படும் அந்த பெட்ரோல் பற்றி ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது' உலகம் முழுவதும் பெட்ரோல் பற்றுக்குறை நிலவும் போது கேரள வாலிபர் செயற்கைப்பெட்ரோல் கண்டு பிடித்து இருப்பது ஒரு வரப்பிரசாதம் ஆகும். ★

## புளியின் அபூர்வசக்தி!

மூத்திரப்பையில் கல் உருவாகாமல் தடுக்கும் அபூர்வசக்தி, நம் சமையலுக்குப் பயன்படுத்தும் புளியில் தங்கி உள்ளது.

தென்னிந்தியர்கள் புளியை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். வடஇந்தியர்கள் அந்தஅளவு சேர்த்துக்கொள்வதில்லை.

இதனாலேயே வடஇந்தியாவில் மூத்திரக்கல் வியாதி அதிகளவில் காணப்படுகிறது என்று ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ★

## பாரசூட்

பாரசூட்டை பிரெஞ்சுக்காரர் ஜாக்ஸ் கார்னர் கண்டு பிடித்தார், வருடம் 1897. பாரிஸ் நகரில் 700 மீட்டர் உயரத்தில் இருந்து அவர் பாரசூட்டில் இறங்கிக் காட்டினார்.

## நமீபியா; ஆளே இல்லாத இடம் என்று பொருள்

முன்னாளில் தென்மேற்கு ஆபிரிக்கா என்று அழைக்கப்பட்ட நாடு தான் இப்போது நமீபியா என்று அழைக்கப்படுகிறது.

இது சுதந்திர நாடு அல்ல. தென் ஆபிரிக்க நாட்டை ஆகும் நிறவெறி அரசு இதையும் ஆள்கிறது.

நமீபியாவின் விடுதலைக்காகத் தென்மேற்கு மக்கள் ஸ்தாபனம் (சுவப்போ) போராடி வருகிறது.

'சுவப்போவுக்கு' ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியாவும், ஆதரவு அந்தஸ்தை வழங்கியுள்ளன.

ஆபிரிக்க மொழியில் 'நமீப்' என்றால் ஆள் இல்லாத இடம் என்று பொருள்.

அப்படியானால் நமீபியாவில மக்களே இல்லையா?

இருந்தமாதிரி நமீபியாவில் 1 லட்சத்து 50 ஆயிரத்து 700பேர் வாழ்கின்றனர். நாட்டின் விஸ்தீரணம் 8 லட்சத்து 24 ஆயிரத்து 292 சதுர கிலோமீட்டர். தலைநகரம் விந்தோக். பேசப்படும்மொழி ஆங்கிலம். ஆபிரிக்க மொழிகள் உட்பட 27 மொழிகள்.

நமீபியாவின் மேற்கில் அட்லான்டிக் கடல், வடக்கில் அங்கோலா, வடகிழக்கில் ஸம்பியா, கிழக்கில் பொஸ்வானா, தெற்கு—தென்கிழக்கில் தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. ★

# விண்கலத்திலும் விளம்பரம் செய்யலாம்!

வான வெளிக்குச் செல்லும் ரொக்கட்டுக்கள், செயற்கைக் கோள்களில் குறைந்த கட்டணத்தில் கம்பெனி விளம்பரங்கள் செய்ய சோவியத்யூனியன் முன்வந்துள்ளது.

2 வாரங்களுக்கு முன்பு செவ்வாய்க் கிரகத்துக்கு சோவியத்யூனியன் அனுப்பிய ஃபோபஸ் விண்கலத்தில் ஒரு ஆஸ்திரிய நாட்டு விளம்பரம் இத்தாலிக் கம்பெனி விளம்பரம் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த விளம்பரங்களைப் படித்துப்பார்க்க மற்ற கிரகங்களில் மனிதர்கள் இருந்தால் இது பயனுள்ள காரியம்தான். ★

## அனுமான் வாலாக நீளும் ராமாயணத் தொடர்

இந்திய டெலிவிஷன் 'தூரதர்ஷனி'ல் ஒளிபரப்பப்பட்டுவரும் ராமாயணம் இந்திப்படம் சென்றமாதம் இறுதியுடன் முடிவடைந்து விட்டது.

இந்த ராமாயணத் தொடரை நீடிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இரண்டுமாத இடைவெளிக்குப்பின்னர் ராமாயணத்தொடர் ஒளிபரப்பு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

இரண்டாவது தொடரில் வால்மீகி இராமாயணத்தில் இடம்பெற்றுள்ள லவ —குச சம்பவங்கள் இடம்பெறும்

முதலாவது தொடர் தூர்தர்சனில் 78 வாரங்கள் இடம்பெற்றது. ★

## அமெரிக்காவிலும் இந்த நிலையா?

அமெரிக்காவில் வானியல் நிபுணர்களைவிட சோதிடர்கள் எண்ணிக்கையில் பத்துமடங்கு அதிகம் இருக்கிறார்கள்.

இதை நாம் கூறவில்லை. அமெரிக்காவின் பிரபல வானியலாளரான கார்ல் சஹான் என்பவரே கூறியிருக்கிறார்.

அவர் கூறுகிறார்:

'மேலைநாடுகளில் சோதிடத்தைப் பற்றிய இதழ்கள் ஏராளமாக வெளிவருகிறன; வானவியலைப் பற்றிக் கூறும் இதழைப் பார்ப்பது மிகவும் அரிது.

'அமெரிக்காவில் அநேகமாக எல்லா நாளேடுகளும் தினமும் சோதிடப் பலன்களை வெளியிடுகின்றன; ஆனால் வாரத்துக்கு ஒருமுறையாவது வானவியல் பற்றிய கட்டுரைகளை வெளியிடும் நாளேடே அநேகமாக இல்லை என்று கூறிவிடலாம்.

'அமெரிக்காவில் வானவியல் நிபுணர்களைவிட சோதிடர்கள் பத்துமடங்கு அதிகம் இருக்கிறார்கள்.

'நான் ஒரு விஞ்ஞானி. என்னைச் சந்திக்கும் பலர் உங்களுடைய ராசி என்ன? நீங்கள் ஜெமினியா? என்று கேட்கிறார்களே தவிர, 'சுப்பர் நோவா வெடிப்புக்களில் தங்க அணுக்கள் உற்பத்தியகிறதாமே? என்றோ, 'செவ்வாய்க் கிரகத்துக்கு ரொக்கட் அனுப்ப நிதி ஒதுக்கீடு கிடைக்குமா? என்றோ'— கேட்பதில்லை.

இப்படிக் கூறுகிறார் கார்ல் சஹான்.

வீட்டுக்கு வீடு வாசல்படிதான். ★

## உலகில் உள்ள மொழிகளின் எண்ணிக்கை 6,760

பைபிள் 16 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக அச்சிடப்பட்டது.

அதன் பின்னர் 1,884 மொழிகளில் பைபிள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது

கிறிஸ்தவ மத நூல்களை விநியோகித்து வரும் நிறுவனம் 'பைபிள் ஹவுஸ்' இது ஒரு தனியார் நிறுவனம்.

பைபிளின் புதிய ஏற்பாடு 38 அரிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பெருநாட்டில் உள்ள பேச்சுமொழியான கெச்சுவா மொழியிலும் பைபிள் இருக்கிறது.

ஸ்டட்கார் குழு பைபிளைச் சேர்ந்த மொழியியலாளர்கள் உலகில் 6,760 மொழிகள் உள்ளன என்று கணிப்பிட்டுள்ளனர். இவற்றில் பேச்சு வழக்கில் உள்ளது 2,790 மொழிகளாகும். ★

## 'தாலாட்டு' எப்படி வந்தது?



தமிழில் 'தால்' என்பது நாக்கினைக் குறிக்கும். (தால்—தாலம்— நாக்கு)

குழந்தைகளை தூங்கவைக்க தாய்மார்கள் நாக்கினை லு... லு.. லு என்றோ, ர...ர...... ர...என்றோ ஆட்டுவர்.

இவ்வாறு நாக்கினை ஆட்டிப் பாடுவதால் (தால்+ஆட்டு) 'தாலாட்டு' என்று வந்தது.

## சுரங்கப்பாதை

இங்கிலாந்தில் செவர்ன் ஆற்றின் அடியில் 4½ மைல் நீளத்தில் கட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதை உலகத்திலேயே பெரிய சுரங்கப்பாதை ஆகும்.

இதைக் கட்டி முடிப்பதற்கு 13 ஆண்டுகள் ஆயின. ★

## ஆஞ்சநேயர் பேசிய இனிமை மொழி எது?

அசோகவனத்தில் சீதையிடம் அனுமான் எந்தமொழியில் பேசினார்?

சமஸ்கிருத மொழியில் பேசினால் இராவணனுக்குப் புரிந்து விடும்! அவன் வடமொழிப் புலமை பெற்றவன். பக்கத்தில் உள்ளவர்களும் புரிந்துகொள்வார்கள்.

மேலும் சமஸ்கிருதத்தில் அனுமான் பேசினால் சீதைக்கு ஐயம் எழலாம். இராவணனே வடிவம் மாற்றிப் பேசுகின்றான் என்று சீதை சந்தேகப்படக் கூடும்.

அதனால் 'ஆஞ்சநேயன் இனிமை மொழியில் பேசினான்' என்றார் வால்மீகி.

'இனிமை மொழி' என்று வால்மீகி குறிப்பிட்டது தமிழ்மொழியைத்தான்

இவ்விதம் சொன்னவர் பன்மொழிப் புலவர் என்று பெருமைபெற்ற பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் என்பது குறிப்பிடத்தக்கது. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# படைப்பாளியின் உள்நோக்கு என்ன?

## அதை நாடி பிடித்து காட்டும் நடுநோக்கே அவசியம்!

> பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்...என்ற குறளில் வரும் நஞ்சு, பார்வை நஞ்சு என்று புலவர் ஈழத்துச் சிவானந்தன் தெரிவித்த கருத்து ஜூன் 18 சஞ்சீவியில் வெளியானது. அந்தப் புதிய பார்வையை ஒட்டியும் வெட்டியும் ஜூன்25, ஜூலை 2,16 ஆம் திகதிய சஞ்சீவி இதழ்களில் கருத்துக்கள் பிரசுரிக்கப்பட்டன. வெட்டித்தெரிவித்த கருத்துடன் வாதம் முடிவடைந்ததாக அறிவித்தது மனத்தாங்கலை ஏற்படுத்திவிட்டது. ஆகவே இருதரப்புக்களையும் சீர்தூக்கி இணைகோத்த சமநோக்குடன் கவிஞர் சு. வில்வரத்தினம் எழுதிய கருத்து இங்கு பிரசுரமாகின்றது. இனியும் இவ்விவாதத்தை முற்றுப்பெறச்செய்வதில் தடையேதும் இருக்காதல்லவா!

நடைபெற்ற இருபக்க விவாதங்களிலுமிருந்து இங்கு காட்டப்படும் கோணம் வித்தியாசமானது. வித்தியாசமானது என்பதிலும் இணைகோத்த சமநோக்கு என்பது பொருத்தமானது. பக்கம் எடுப்பதல்ல முக்கியம், ஒரு படைப்பாளியின் உள்நோக்கு என்ன என்பதை நாடிபிடித்துக்காட்டும் கூரிய நடுநோக்கே அவசியம்.

'பெயக்கண்டும்'... குறளின் நேர்ப்பொருள் என்ன என்பது நாம் அறிந்ததே. உரையாசிரியர்கள் கூறுவதும் அந் நேர்ப்பொருளே. பெரும்பாலும் அதற்குப் பலரும் உதாரணிப்பது சிவபெருமான் நஞ்சுண்ட கதையையேதான். அதைப் பெரும்பாலும் புராணம் என்று பலரும் ஒதுக்கிவிட வாய்ப்புண்டு. அப்படியாயின் வேறு உதாரணங்கள் உண்டா? உண்டு. கிரேக்க தேசத்துஞானி சோக்ரடீஸ், நபிகள் பெருமானுரின் சீடர் ஒருவர், இன்றைய ஈழப் போராளிகள்.

### சோக்ரடீஸ்

கிரேக்க ஞானி சோக்ரடீசுக்கு கிரேக்க நீதிமன்றம் விதித்த தண்டனை நஞ்சுண்டு மரணித்தல். சிறையில் சோக்ரடீசைச் சந்தித்த நண்பன் தப்பிக்க வழி சொல்கிறுன். அல்லாவிடின் தாமதம் செய்தும் நஞ்சை அருந்தலாம் என்கிறுன். இரண்டையும் மறுத்த சோக்ரடீஸ் 'இந்த நஞ்சு கொல்வது என் உடலையே, என்னையல்ல எனது இருப்பு என்றும் அழியாதது' என்று கூறி குறித்த நேரத்தில் நஞ்சுண்டு மலர்ந்த முகத்துடன் மரணத்தை எதிர்கொண்டான். நயத்தக்க நாகரிகத்துக்கு உதாரணம் ஆயினுன்.

### நபிநாயகம்

நபிகள் பெருமானின் சீடரில் ஒருவன் சிறந்த படை வீரன். சரணடைந்த அல்லது சிறையுண்ட ஒரு யுத்தக்கைதியைப் பார்வையிடுகிறுன். படைவீரர்கள் வரிசையில் நின்ற அவனது இடுப்பில் ஒரு வாரிஞலான பை! 'என்ன அது?' நபிகளின் சீடன் கேட்கிறுன்.' எதிரிகளிடம் பிடிபடாதிருக்க எமக்களிக்கப்பட்ட நச்சுத்திராவகம்; உடனே கொல்வது' என்கிறுன் கைதி. 'அப்படியா எங்கே பார்க்கலாம்? என அதை வாங்கிய நபிகளின் சீடனுகிய வீரன் மடமடவென்று வாயில் ஊற்றுகிறுன். அல்லாவின் நாமத்தை ஜபித்தபின் ஏதும் நடக்கவில்லை. நஞ்சு அவன் உயிரைத் தீண்டவேயில்லை. கம்பீரமாக நடந்து செல்கிறுன் அந்த வீரன். ஆழமான இறைநம்பிக்கையின் காரணமாக நஞ்சுண்டும் நிமிர்ந்து நின்றுன் அந்த நயத்தக்க இறை நாகரிகன்.

### ஈழப்போராளிகள்

இன்றைய ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஏனைய போராளிகளை, இயக்கத்தைக் காட்டிக்கொடாதிருக்க நஞ்சுண்டு உயிர்த்தியாகம் பண்ணிய வீரர்கள் எத்தனையோ பேர். சரி-பிழை தாண்டி அவர்களின் தியாக வரலாறு இன்று போற்றப்படுகிறது.

### உதாரணங்கள்

மேற்கண்ட உதாரணங்கள் எல்லாம் பெயக்கண்டும்...' என்ற குறளின் பொருளாய் விளங்குவன என்றுகொள்ளலாம். இவற்றிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் உள்ளனவேனும், உன்னதமான நோக்கமொன்றில் பொருட்டாக உயிரைத் துச்சமெனக் கருதும் உயர்ந்த மனநிலையை ஒவ்வொன்றும்காட்டி நிற்கின்றன. இந்நோக்கில் அக்குறளின் பொருள் இதுவாகுமா? உன்னதமான ஒரு நயத்தக்க நாகரிகத்தைப் பேணிநிற்க விரும்புபவன் அதற்காக அந்த உன்னத இலட்சியத்திற்காக, நஞ்சு பெயக்கண்டும் அதை உண்டு தன்னுயிர் நீத்தும் அந்த நாகரிகத்திற்கு உதாரணனுய் அமைந்து நிற்பான். சரிதானு? நஞ்சுண்டு மரணித்தல் அல்ல; இங்கு முக்கியமானது மரணத்தையும் மலர்ந்த முகத்துடன் எதிர்கொள்ளும் மனநிலை. சரிதானு?

சரி, இனி அடுத்த பக்கத்துக்கு வருவோம். ஒரு கவிஞனின் படைப்பிலிருந்து நாம் ஒரே பொருள்தான்கொள்ள வேண்டுமென்றொரு விதியும் கிடையாது. சொல்லப்போனுல் பலபொருள் கிளர்த்தும் படைப்பே காலத்துக்குக் காலம் வெவ்வேறு பொருள் தந்து காலம்கடந்து வாழும் கலைப்படைப்பாக உயர்ந்து நிற்கும். நோக்குவார் நோக்கும் நுண்ணறிவுக்கு இயைய பொருள்விரிந்து கொடுக்கும் படைப்பே ஒரு படைப்பாளியின் மேதா விலாசத்தைக் காட்டிநிற்கும். நேர்ப்பொருளை மட்டுமல்ல சுட்டாமல் சுட்டி நிற்கும் பொருளையும் கண்டு சுவைப்போனே உண்மைக்கலை நுகர்வோன். நேர்ப்பொருள் வேண்டிநிற்போர்க்கு 'வெள்ளைக்கவி'கள் தான் உகந்தவை. சுட்டும் பொருளை உணராமல் சுட்டும்விரலையே காண்போனை விட இவ்வகையினர் ஒன்றும் மோசமானவரல்லர். திருக்குறள் தன் யாப்பு வடிவத்தில் குறுகியது. அது சுட்டிப் புலப்படுத்தும் பொருளையும் ஏன் குறுக்கவேண்டும்? குறுகத் தறிப்பதில் யாருக்கு லாபம்?

### நஞ்சு

மேற்குறித்த குறளிலே பிரச்சினைக்குரியது நஞ்சு. நஞ்சின் இயல்பு என்ன? உயிர்க்கு ஊறு விளைவிப்பது உயிர்க்கு ஊறு விளைவிப்பது நஞ்சுமட்டும்தானு? கண்ணிலே ஊறும் நஞ்சு ஊறு செய்யாதா? நாவினுல் சுடும் நஞ்சு நெஞ்சிலே விளையும் நஞ்சு? இவையெல்லாம் ஊறு செய்யாதனவா? செய்யும் என்பது பலரின் நம்பிக்கை. அநுபவக் கணிப்பு. ஆனுல் இந்தப் பொருமைக்காரரின் நஞ்சாற்றலையும் (நன்ருற்றல் என்பதுபோல இது நஞ்சாற்றல்) பொறுத்து, சினங்காத்துநிற்றல் நயத்தக்க நாகரிகம் இல்லையா?

நற்றிணை கூறியதை வள்ளுவரும் அடியொற்றிஞர் என்ருர். அடியொற்றிஞர் என்ருலும் அதன் கருத்தை அப்படியே படியெடுத்துத்தந்தார் என்று சொல்லலாமா? பழையதை தனது நோக்கிற்கேற்ப 'புதுவது மொழிதல்' தனித்துவமுடைய கவிஞனின் இயல்பு. அத்தோடு கலை நோக்கும் சிலவேளை அதை மீறிய நீதிநெறி நோக்குமுடைய வள்ளுவன் வெறுமனே நஞ்சுண்ணலைத்தான் கருதினுன் என்று கொள்வதற்கும் இல்லை. ஏன் அதிகதூரம்? அவன் அக்குறளில் பயன்படுத்திய சொற்களைச் சுண்டிப்பார்த்தாலே இதைக் கண்டுகொள்ளலாம். 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்' —இதில் 'அமைவர்' என்ற சொல் எதை உணர்த்தி நிற்கிறது. 'நஞ்சுண்பவர்' என்று நிறுத்தியிருக்கலாமே? ஏன் 'நஞ்சுண்டு அமைவர்' என்று நீட்டுகிறுன்? 'அமைவர்' என்ற சொல்லுக்கிடாக இறப்பர், அல்லது உயிர் நீப்பர் என்ற சொற்களை ஏன் அவன் கையாளவில்லை? இப்படிப் பார்க்கும்போதுதான் 'அமைவர்' என்ற சொல்லை அவன் பயன்படுத்தியது பலவித அர்த்த விரிவுகருதி என்பது புலனுகும். 'பெயக்கண்டும்' என்ற சொல்லும் இதே அர்த்த விரிவு பொதிந்ததேதான். பொருள் உரைக்கும்போது சில சொற்களுக்கு உரையாசிரியர் சிலவிகுதிகளை இணைத்துக் காண்பதுண்டு. இதிலே 'நஞ்சுண்டு'என்பதற்கு 'உம்'விகுதி சேர்த்து 'நஞ்சுண்டும்'என்றும் பார்த்தல் புதிய நோக்கில் பொருள் விரிதல்எளிதல்லவா?

### கள் உண்பவர்

இன்னும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். இது வேறொரு குறளின் பின்னடி. 'நஞ்சுண்பார் கள்ளுண்பவர்' இதில் கள் நஞ்சானது எப்படி? இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் தெரியாதவரல்ல வள்ளுவர். நஞ்சு உடன் கொல்லும். கள் மெல்ல மெல்ல நஞ்சாகி நின்று கொல்லும் கால வித்தியாசம் தெரியாதவரல்ல வள்ளுவர். ஆனுல் உயிருக்கு ஊறு செய்யும் குணத்தால் இரண்டும் ஒன்று என்கிருர். இதே குணத்தால் பதார்த்த நஞ்சும், பார்வை நஞ்சும், வார்த்தை நஞ்சும், நெஞ்சக நஞ்சும் ஒன்றில்லையா? தீய குணங்களுக்கு உறைவிடமான, ஊருக்கு ஊறு செய்வோரான நபர்களை 'நஞ்சர்கள்' எனக் குறிக்கும் பிரயோக வழக்கு எதைச் சுட்டுகிறது? அர்த்த விரிவுக்கு இடம்தந்து நின்ருல் ஒரு படைப்பை புதிய கருத்துப் புலங்களை நோக்கி அழைத்துச் சென்று புதிய தரிசனம் காண்பதில், காட்டுவதில் என்ன பிழை? வள்ளுவன் இதைக் கருதவேயில்லை என்பது என்ன சரி? சரிதானு?

சரி. இன்னும் சில நடைமுறை உதாரணங்களைக் கண்டால் புதிய பொருள் மேலும் புலனுகும். காண்போமா? ஒரு விருந்து வைபவ வீட்டில் ஒரே அமர்க்களம். பந்தி அமர்க்களந்தான். பலரின் பேச்சோசைகள். ஒருவன் 'என்னப்பா கறிக்கு உப்புப்புளி ஒண்டும் இல்லையா?' இன்னெருவன் 'சோத்துக்கை ஒரே கல்லப்பா' மற்றொருவன் 'பாயாசத்துக்க இனிப்பெண்டசாமானே இல்லை. சீ' இப்படிப் பல அதிருப்திக் குரல்கள். அதே பந்தியின் மூலையில் சில பவ்யமானவர்களும் அமர்ந்திருக்கின்றனர். இத்தகைய சொற்களுக்கே கூசும் இயல்பினர்; நயத்தக்க நாகரிகர் ஓசைப்படுத்தாமல் கல் நீக்கி மெல்ல அதை உமிழ்ந்தெடுத்து வைத்து உப்புப்புளி பற்றி ஏதும் பேசாமல் 'நஞ்சுண்டு' அமைகிருர்கள். பந்தி எழுந்து போகையிலே வீட்டுக்காரர் தலையைச் சொறிந்தபடி கேட்கிருர் 'சாப்பாடு எப்படியோ?' தோளில் தட்டி இவர்கள் சொல்கிருர்கள் 'சாச்சா அமிர்தமாயிருந்தது! பிறர் மகிழ்ச்சிக்காக தாம் 'நஞ்சுண்ட' போதும் அமிர்தம் எனப் பாராட்டும் இவர்கள் 'நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' இல்லையா? இந்தக் கதை இந்தக் குறளுக்குள் இல்லையா?

### ஏழையின் விருந்து

சரி இன்னுமொன்று ஓர் ஏழைக் 'குடிமகன்' வீட்டுக் கல்யாணம் தடல்புடல்இல்லை. அங்கே காசை மட்டும் போட்டிட்டு 'சோடா' அருந்திய தோடு கம்பி நீட்டிவிடுகின்றனர் பல உயர்சாதியினர். அவர்களுள்ளும் சிலர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் பத்தியமர்ந்து விருந்துண்டு சென்றதில் வீட்டுக்காரனுக்கு பரம சந்தோஷம். வெளியே வரும் அவர்களை 'நஞ்சுமிழும் பார்வையோடு நக்குவார் பலர் (தமக்குள் நக்கிற்று வருகினம்)' 'எப்பிடி விருந்து நல்லாயிருந்தது போல?' 'ஓமோம் உங்களின்ற இடங்களைவிட எவ்வளவோ நல்லம்' இவர்களின் பதிலில் நயத்தக்க நாகரிகத்தின் பளிச்சிடல். இதை இக்குறள் காட்டவில்லை என்று சொல்லலாமா?

புராணத்திலிருந்து ஓர் உதாரணம் 'மென்று சுவைத்துப் பார்த்த இறைச்சித் துண்டுகளைக் காளத்திப் பனுக்குப் படைக்கிறுன் வேடன் கண்ணப்பன் இதை ஒளித்து நின்று பார்க்கிறுன் பூசகன். இவையெல்லாங் நஞ்சாகி வயிற்றைக் குமட்டிக் கொண்டு வருகிறது அவனுக்கு. ஆனுல் கண்ணப்பன் தன் அன்பெனுந் தேனிலே குழைத்துத் தந்த அமுதப் படையல் அவை என்பது காளத்தியப்பனுகிய சிவனுக்கே தெரியும். அதைக் காட்ட அவன் செய்த விளையாடல் நாம் அறிவோம். அன்பிலே தோய்த்துத் தந்தால் நஞ்சையும் உண்ணத் தெரிந்த நஞ்சுண்டகண்டன் காட்டிய நயத்தக்க நாகரிகம் இக்குறளில் இல்லையென்று சாதிக்கலாமா?

### சைவ உணவு

ஏன்? சைவ உணவு ஆசாரசீலர்களை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். சைவ உணவு அவர்களுக்கு அமிர்தம். மற்றவற்றை நஞ்செனவிலக்குவர். ஆனுல் விருப்பு வெறுப்பு கடந்த மனேநிலைக்குரிய ஆன்மீகவாதிகளோ அந்த நஞ்சையும் உண்பர். இவர்கள் வேண்டுதல் — வேண்டாமை, இன்னேரன்ன இருமைகளினின்றும் விலகியவர்கள். இந்த உலகம் போற்றுதலை அமிர்தம் என்றும் தூற்றுதலை நஞ்சென்றும். ஆனுல் இருமைகளைக் கடந்தவன் தூற்றுதல் என்னும் நஞ்சையும் உண்டு மலங்கழிப்பதுபோல் கழித்து நிற்பான். போற்றுதல், தூற்றுதல் இரண்டும் இந்த உடலுக்கே. ஆத்மனை அவை தீண்டா என்பது அவன் தெளிவு. அந்தத் தெளிவில் உதயமாவதே உண்மையான நயத்தக்க நாகரிகம் எனலாம்.

மேற்குறித்த உதாரணங்கள் மூலம் 'பெயக்கண்டும்' என்ற குறள் எடுக்கக்கூடிய பலவிதமான அர்த்த விரிவுகளை நாம் கண்டோம். கண்டும் காணுதிருப்போர் வள்ளுவர் குறிப்பிடும் 'கண்ணேட்டம்' இல்லாத வகுப்பைச் சேர்ந்தவர்களே. புதிய பார்வை அல்லது கண்ணேட்டம் இல்லாதவனே நேர்ப்பொருள் தேடிநிற்பான். அதேவேளை புதிய கண்ணேட்டம் என்பது வலிந்து கருத்துப்பிளந்து இல்லாததை எடுத்துச் சொருகுவதுமல்ல. கலைஞன் காட்டிய திசையைக் குறிகாட்டி நிற்பது விமர்சகர் கடமை. குருடர்கள் போலைப் பற்றிக்கொள்ள மறுப்பது மடமை. ★

- கவிஞர் சு. வில்வரத்தினம் -

## சிரிக்கும் பாப்பா!

சின்னப் பாப்பா சிரிப்பினிலே
சிந்தை மயங்காதவர் உண்டோ?
பொன்னும் மணியும் என்ருலுமுன்
புன்னகைக்கு இணையாமோ?

மழலை உன்றன் சிரிப்பினிலே
மயங்கும் உலகம் காண்போமே!
குழலும் யாழும் உன்சிரிப்பின்
குளிர்மைக்கு முன் நிகராமோ?

வையம் மகிழுமுன் சிரிப்புக்கு
வண்ண மலர்கள் ஈடாமோ?
கையை அசைத்து நீசிரிக்கும்
காட்சியை விஞ்சும் எழிலுண்டோ?

அழகுப் பாப்பா உன்சிரிப்பில்
அன்னை உள்ளம் களித்திடுமே!
இறைவன் முருகன் உன்வடிவில்
இருக்கும் பொருளும் புரிந்திடுமே!

—நெடுந்தீவு லக்ஸ்மன்—

## யாருக்கும் அடிமைகள் அல்ல!

அழகான குளம். அங்கே வண்ண வண்ணச் செந்தாமரைகள் பூத்திருந்தன.

அந்தச் செந்தாமரையை கயனள் ரசித்து மகிழ்வது க்அக்கம்.

இதனுல் அங்கிருந்த செந்தாமரை ஒன்று கர்வம் கொண்டது. தன் புகழை யாருக்காவது சொல்ல வேண்டும் என்று நினைத்தது.

அங்கும் இங்கும் அசைந்து அசைந்து பார்த்தது. அருகில் நாணற்பூ தென்பட்டது. செந்தாமரை நாணற் பூவைப் பார்த்து,

'ஏய்...! அற்ப பூவே, நீயும் இருக்கிருய்,உன்னை யாராவது பார்த்து ரசிக்கிருர்களா...? எங்களையே மக்கள் கூட்டம் காணப் படையெடுக்கிருர்கள். நீ இருந்தென்ன பயன்'

நாணற்பூ மௌனமாக இருந்தது. அப்போது சிலர் வந்து தாமரைப்பூவை பறித்துச் சென்றனர். மௌனமாய் இருந்த நாணற்பூ,

'உன்போல் அழகாய் இருப்பவரின் நிலைமையைக் கண்டாயோ...? நாங்கள் நிம்மதியாக இருக்கலாம்'—

கோபம் கொண்ட தாமரை,

'எம்மை இறைவனுக்கு அலங்கரிக்கவே கொண்டு செல்கிருர்கள். நாம் இறைவனுக்குப் பணிபுரிபவர்கள்'

நாணற் பூவோ மெல்லச் சிரித்த வண்ணம்,

'நாம் யாருக்கும் பணிபுரியும் அடிமைகள் அல்ல' என்று சொன்னது,

தாமரைப்பூ 'கம்' என்று வாயடங்கி விட்டது.

செல்வன்.

பா. சந்திரகாசன்

## நேருஜியின் வாழ்வில்...

உலகப் பெருந்தலைவர்களில் பாரதப் பிரதமராக இருந்த நேருஜியும் ஒருவர்.

குழந்தைகள் என்ருல் நேருஜிக்கு கொள்ளைப் பிரியம். வீண் ஆடம்பரங்களை வெறுத்து எளிமையாக வாழ்ந்தவர் அவர்.



நேருஜி

அவர் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம். பஞ்சாபில் கபூதலாவுக்கு ஒரு பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தை நேருஜி ஆரம்பித்து வைத்தார்.

நிலத்தைத் தோண்டும் பணியை அவரே தம்மையால் தொடக்கிவைக்க ஏற்பாடாகி இருந்தது.

விழாத்தலைவர் ஒரு வெள்ளிக் கடப்பாரையை நேருவின் கையில் கொடுத்தார்.

நேரு அதை ஒரு கணம் முறைத்துப் பார்த்தார். உடனே அந்தக் கடப்பாரையைத் (மண்வெட்டி) தூக்கி எறிந்து விட்டார்.

பக்கத்தில் கிடந்த ஒரு இரும்புக் கடப்பாரையை எடுத்து நிலத்தைத் தோண்ட ஆரம்பித்து விட்டார்.

அருகே நின்ற அதிகாரிகளையும் காங்கிரஸ்காரர்களையும் நோக்கி, 'இந்திய விவசாயிகள் வெள்ளிக்கடப்பாரையை வைத்துக்கொண்டா வேலை செய்கிருர்கள்..? எதற்கு இந்த வீண் ஆடம்பரங்கள் எல்லாம்...?'

என்று கோபத்துடன் கேட்டார். ★

### பெரிய புத்தகம்

புத்தகங்களை அச்சிடும் முறை அமுலுக்கு வந்த 400 வருடங்களில் மேலை நாடுகளில் வெளிவந்த எல்லாப் புத்தகங்களின் பட்டியலும் அடங்கிய ஒருநூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டு உள்ளது.

உலகின் மிகப்பெரிய புத்தகம் இதுதான். 41 மீட்டர் நீளமும் 2½ தொன் எடையும் கொண்டது இந்தப் புத்தகம். ★

### மயக்கம்

மூளைக்குத் தேவையான அளவு ஒட்சிசன் கிடைக்காத போதுதான் மயக்கம் ஏற்படுகிறது. ★





## குழந்தைகள் எதிரில் சண்டை போடாதீர்கள்

குழந்தைகள், அதிலும் இன்றைய குழந்தைகள் எறும்பு போன்றவர்கள் மிகவும் சுறுசுறுப்புள்ளவர்கள்.

எதையும் உற்றுப்பார்த்துக் கவனித்து அதுபோலவே செய்து காட்டுவதில் பெரியவர்களைவிடப் படுசுட்டிகள்.

அப்படிப்பட்டவர்கள் முன்னிலையில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கூடியவரையில் குழந்தைகளுக்கு முன்னிலையில் சில தகவல்களைப்பற்றிப் பேசுவதோ, செய்வதோ கூடாது. முக்கியமாகச் சண்டை போடுவதைத் தவிர்த்துக் கொள்வது புத்திசாலித்தனமே.

சண்டை போட்டுக்கொள்வதால் குழந்தைகளின் மனநிலை பாதிப்படைகிறது முதலாவது.

உங்களைச் சுற்றித்தான் உங்கள் குழந்தைகளின் இனிய உலகம் இருக்கிறது. அது போலவே உங்கள் உலகமும் அவர்களைச் சுற்றித்தான் இருக்கிறது.

பெற்ருேர்களின் மனேநிலையைக் குழந்தையும் பிரதிபலிக்கும்.

நல்லது எது, கெட்டது எது என்பதைப் பிரித்தறியக் குழந்தைகளுக்குத் தெரியாது.

கணவன், மனைவியின் வாய்ச் சண்டையை குழந்தையும் கவனித்துக் கொள்ளும். தனக்குக் கோபம் வரும்போது பெற்ருேர் பாவித்த வார்த்தைகளைப் பாவித்து உங்களையே திட்டும் சந்தர்ப்பத்தை நீங்களே குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறீர்கள்.

கணவன் மனைவியைத் திட்டி அடித்துச் சண்டை போடக் கூடாது.

இது குழந்தைகளுக்குத் தாய்மேல் ஒரு தாழ்வு உணர்ச்சியையும் அலட்சியத்தையும் பயமில்லாத தன்மையையும் ஏற்படுத்தும்.

- அல்லி -

தவிர, தந்தைமேல் வெறுப்புணர்வும், பயமும் வளர்ந்து நாளடைவில் குடும்பத்துடன் ஒட்டுறவு இல்லாமல் உதவாக்கரைப் பிள்ளையாக மாறுகின்றது. ஊர், உலகம் பழித்துத் திட்டும். இவை குழந்தைகளைப் பாதிப்பது மட்டுமல்ல, உங்கள் மனநிலையையும் பாதிக்கும்.

சிறுவர்கள் எதிரில் வீட்டில் உள்ள பாட்டா, பாட்டி போன்ற பெரியவர்களைப் பற்றிக் குறைகூறுதல் கூடாது.

இப்படிக் குறைகூறுவதால் சிறுவர்கள் பெரியவர்களை மதிக்கத்தவறி அலட்சியப் படுத்துவார்கள். இதனுல் பெரியவர்கள் மனம் வருந்துவது மட்டுமல்ல அவர்களின் வெறுப்புக்கும் சிறுவர்கள் ஆளாவார்கள்.

மேலும் சிறுவர்கள் எதிரில் குடிப்பது, சிகரெட் பிடிப்பது போன்ற வேண்டாத பழக்கங்களைச் செய்யாதீர்கள். பின் அவர்களுக்கும் பயம் நீங்கி அதே வேலையைத் தாங்களும் செய்து பார்க்கத் துணிவார்கள். இது அவர்களுக்கும் உங்களுக்கும் நல்லதல்ல.

எனவே குழந்தைகளின் எதிரில் எது செய்யக்கூடாதோ அவற்றில் முடிந்தளவு இங்கு கூறப்பட்டுள்ளது மிகுதியை நீங்களும் கவனித்து தவிர்த்துக் கொண்டீர்களேயானுல், நாடும் வீடும் போற்றும் நற்பிரஜைகளை உருவாக்கலாம் என உறுதியாகக் கூறலாம். ★

### புளியம்பூத் துவையல்

புளியம்பூவைத் துவரம் பருப்புடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் பசியில்லாமை, வாய்வுத்தொல்லை, குமட்டல், வாந்தி நின்று, உடல் குணமை பெறும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெனிஸ் விழாவில் யேசுநாதர் படம்; கிறிஸ்தவர் மத்தியில் பலத்த எதிர்ப்பு!

வெனிஸ் உலகப் பட விழா இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 9 ஆம் திகதி விழா முடிவடைகின்றது.

இவ்விழாவில் காட்டப்பட வுள்ள படங்களின் பட்டியலில் யேசுநாதர் பற்றிய படம் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

இப்படம் இத்தாலியில் பெரிய சர்ச்சையையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

படத்தின் பெயர் 'The Last Temptation of Christ' என்பது. அமெரிக்க டைரக்டர் மார்ட்டின் ஸ்கோர்ஸிஸ் தயாரித்துள்ள இப்படம் கிறிஸ்தவர்களை அவமதிப்பதாக உள்ளதாக திருச்சபைத் தலைவர்கள் கண்டித்து உள்ளனர்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையுடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ள இத்தாலியின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, இப்படத்தை வெனிஸ் திரைப்பட விழாப் பட்டியலில் இருந்து அகற்ற வேண்டும் என்று கோரியுள்ளது.

கிறிஸ்தவ மக்களின் சமய உணர்வைப் புண்படுத்துவதாக அமைந்துள்ள இப்படம் பற்றி விழா அமைப்பாளர்கள் கருத்துக்கெடுத்துக் கொள்ளாதது வருத்தத்துக்குரியது என்று அக்கட்சியின் கலாசாரப் பிரிவு தெரிவித்திருக்கிறது.

வெனிஸ் படவிழா இயக்குநர் குலில்மோ பிராஹி சொன்னதாவது:

'படத்தில் பிரச்சினைக்குரியதாக இருக்கும் கட்டம் யேசுநாதரின் கனவு காணும் காட்சி'.

இப்படம் திரைப்படவிழாவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சியைத் தருகிறது என்று இத்தாலியின் தேசியத் திரைப்பட சபை தெரிவித்துள்ளது.

படவிழா இயக்குநர் பாஓலா போர்ட்டோஹெஸி சொல்கிறார்.

'இப்படம், விழாவில் இருந்து வாபஸ் வாங்கப்படமாட்டாது.

ஒரு படம் தகுதி, தரம் பற்றி தீர்மானிக்கும் உரிமை, ரசிகர்களுக்கே உண்டு. வெனிஸ் பட விழாவின் பாரம்பரிய வழக்கமும் இதைத்தான் வலியுறுத்துகின்றது'

வத்திக்கான் நிர்வாகம் இப்படம் பற்றி இன்னமும் கருத்து வெளியிடவில்லை.

ஆனால் அமெரிக்காவில் உள்ள சிரேஷ்ட ரோமன் கத்தோலிக்க மதகுருமார்கள் இப்படம் விழாவில் சேர்க்கப்பட்டுள்ளதைக் கண்டித்துள்ளனர்.

யுனிவெர்ஸல் பிக்ஸர்ஸ் நிறுவனம் சினிபிளெக்ஸ் ஓடியன் பிலிம்ஸுடன் இணைந்து, கிரேக்க எழுத்தாளர் நிகோலாஸ் கஸான்சக்கிஸ் எழுதிய நாவலை மையமாக வைத்தே இப்படத்தை தயாரித்துள்ளது.

இந்த நாவலை எழுதியதற்காக இக்கிரேக்க எழுத்தாளர் கிழக்குத் திருச்சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார்:

வில்லெம் டெபோ யேசுவாகவும் பிரிட்டிஷ் பொப் நடிகர் டேவிட் போவி பொன்டியஸ் பைலேட் ஆகவும் பார்பரா ஹெரஷே மேரி மகதலின் ஆகவும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

வெனிஸ் படவிழாவில் இப்படம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி திரையிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

விழாவில் 'தங்கச் சிங்க விருது' பட்டியல் படங்களில் இப்படம் சேர்க்கப்படவில்லை.

சிறப்புப் படங்களின் பட்டியலில்தான் இது சேர்க்கப்பட்டுள்ளது. ★

## ஜெயலலிதா மீது பட அதிபர் வழக்கு

சென்னையைச் சேர்ந்த பட அதிபர் கே. நாராயணசாமி 'எனக்கொரு காதலி இருக்கிறாள்' என்ற படத்



ஜெயலலிதா

தைத் தயாரித்து வந்தார். ஜெயலலிதா படத்தின் கதாநாயகி.

இந்தப் படம் பாதியில் நின்று விட்டது.

இதை ஒட்டி பட அதிபர் நாராயணசாமி சார்பில் அவரின் வழக்கறிஞர் ஏ. சிதம்பரம் ஜெயலலிதாவுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:

எனக்கொரு காதலி இருக்கிறாள் என்ற வண்ணப் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டீர்கள்.

4 ஆயிரம் அடி படம் எடுக்கப்பட்டதும் தொடர்ந்து நடிக்க மறுத்துவிட்டீர்கள்.

"எம். ஜி. ஆர் என்னை வேறு எந்தப் படத்திலும் நடிக்கக் கூடாது"- என்றதாக நீங்கள் காரணம் காட்டினீர்கள். படத்தில் நடிப்பதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வாங்கி இருக்கிறீர்கள்.

உங்களின் உடைகளுக்கு மட்டும் 50 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டது.

பாதியில் நிற்கும் படத்தை நடித்து முடித்துத் தர வேண்டும். அல்லது ஆறே மக்கால் லட்சம் ரூபாய் நட்டஈடாகத் தர வேண்டும்.

இப்படி வழக்கறிஞரது நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

## வலம்புரிஜான் டைரக்டராகிறார்

'தாய்' பத்திரிகை ஆசிரியர் வலம்புரி ஜான். இவர் அ. தி. மு. க ஜானகி அணியைச் சேர்ந்த எம். பி.

இவரும் சினிமாப்பட டைரக்டராகிறார்.

சாதிக் கொடுமைகள் ஒழிய வேண்டும் என்பதை மையமாகக் கொண்ட 'அது அந்தக் காலம்' என்ற படத்துக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

பிரபல ஒளிப்பதிவாளர் மது அம்பர்ட் இப்படத்தின் ஒளிப்பதிவைக் கவனிக்கிறார்.

லட்சுமி, சரண்ராஜ், எஸ். எஸ். சந்திரன் ஆகியோர் நடிக்கின்றனர்.

'சுதந்திர நாட்டின் அடிமைகள்' என்ற படத்துக்கு வலம்புரி ஜான் வசனம் மட்டும் எழுதிக் கொடுத்திருந்தார். ★

# கமலஹாசன் கதை, வசனத்தில் 'அபூர்வசகோதரர்கள்'

கமலஹாசன் தயாரிக்கும் புதிய படத்துக்கு கதை, வசனத்தை அவரே எழுதுவதுடன் இரட்டை வேடத்திலும் நடிக்கிறார். கவுதமி கதாநாயகியாக நடிக்கிறார்.

### ராஜ்கமல் படம்

'சத்யா, படத்தையடுத்து கமலஹாசலன் ராஜ்கமல் இன்டர்நேஷனல் பட நிறுவனம் .அபூர்வ சகோதரர்கள்' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறது. இடபடத்தின் கதை திரைக்கதை வசனம் ஆகியவற்றை கமலஹாசன் எழுத சிங்கீதம் சீனிவாசராவ் டைரக்டு செய்கிறார். ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்கிறார். இளையராஜா இசை அமைக்கிறார்.

### இரட்டை வேடம்

இப்படத்தில் கமலஹாசன் இரட்டை வேடத்தில் நடிக்கிறார். இவரது ஜோடியாகக் கவுதமி நடிக்கிறார்.

மற்றும் நாகேஷ், ஜனகராஜ் உட்பட பலர் நடிக்கின்றனர்.

இப்படத்திற்காக பிரமாண்டமான அரங்கு ஒன்றை வீனஸ் ஸ்டூடியோவில் ஏராளமான பொருட் செலவில் அமைத்து வருகின்றனர்.

(எ-4)



கமலஹாசன்

## துணுக்கு

வாழ்க்கையில் நொந்து போன பழைய பட அதிபர்கள் மீண்டும் புதுப்படம் தயாரிக்க முன்வந்தால் அவர்கள் படத்தில் குறைந்த ஊதியம் பெற்று நடித்துக் கொடுக்கும் பிரபல நடிகை ஒருவரும் இந்தக் காலத்தில் இருக்கிறார். அவர்தான் புன்னகை சிந்தும் 'கற்பகம்' நாயகி. ★

## வெள்ளித் திரையில்

# திரைப்பட வன்முறை

நூறு புத்தகங்கள் சொல்கிற கருத்துப் பரவலைவிட ஒரு நாடகம் செய்கிற கருத்துப் பரவல் மிகுதியானது. காதுக்கும் கண்ணுக்கும் விருந்தாவதால் வலிமையானது. ஒரு நாடகம் ஒரு நேரத்தில் ஓரிடத்தில் மட்டுமே நிகழக் கூடிய ஒன்று. ஒரு திரைப் படமோ பல இடங்களில் பலரைப் பலமுறை சென்றடையும் வாய்ப்புப் பெற்றது. பொருளியல் காரணங்களாலும் பிறவற்றாலும் நாடகக் கலை சுருங்கி வருகிறது. பார்வைக் கலையாக விளங்குகிற திரைப்படம், படிக்காத பாமரர்க்கும் விருந்தாகி பணக்கலையாகப் படத்துறையினர்க்கு உள்ளது. வணிக நோக்கு மிகுந்து பேய்ப் போட்டி அதிகமாகி விட்டதால் சில அல்லது ஒரு நல்ல (!) கருத்தையாவது தந்தாலும் ஆபாசம், வன்முறை என்னும் இரண்டையும் இன்று பரப்பி வருகிறது. இந் நிலைக்கு இதழ்களும் தொலைக்காட்சியும் உள்ளாகி வருகின்றன.

### ஆபாசமும் வன்முறையும்

ஆபாசம் எவ்வாறு பாலுணர்வைத் தூண்டி ஒழுக்கத்தைச் சீர்குலைக்கிறதோ அது போல வன்முறையானது சமுதாய ஒழுங்கையும் சட்ட ஒழுங்கையும் சமூக உறவுகள் என்னும் கட்டுக்கோப்பையும் உடைத்து வருகிறது. வன்முறை என்பது பாலியல் சார்ந்த வன்முறை, குற்றவியல் சார்ந்த வன்முறை என இருவகைப்படும். பாலியல் வன்முறையில் திரைப்படங்களில் கற்பழிக்க முற்படுதலும் கற்பழிக்கப்படுதலும் பாலுணர்வு, சித்திரவதை என்ற இரு நிலைகளின் உச்சக்கட்டத்திற்கு இட்டுச் செல்கின்றன. திமிங்கிலம், நாய், பூனை முதலியவற்றைக் கொண்டு பெண்ணை நிர்வாணமாக்கிப் பாலுணர்வு, சித்திரவதை உணர்வுகளைப் பெருக்கும் மேல்நாட்டுத் திரைப்படங்கள் கிராமங்களையும்கூட அடைந்துள்ளன

### குற்றவியல் வன்முறை

தனிமனித வன்முறை, பொதுமக்கள் வன்முறை என்ற இருவகையிலும் குற்றவியல் வன்முறை நிகழலாம். குற்றமனப்பான்மை, சமூக மனப்பான்மை என்னும் இரண்டில் ஒன்று இவற்றுக்குக் காரணமாக அமையும். குற்ற மனப்பான்மையால் (திருட்டு, கொலை முதலியன) அல்லது சமூக மனப்பான்மையால் (பசியால் திருடுதல், ஏழைகளுக்குக் கொடுப்பதற்காகத் திருடுதல் முதலியன) செய்யும் வன்முறைகள் முன்பு திரைப்படமாக்கப்பட்டன. ஆனால் இவற்றின் முடிவாகக் குற்றம் செய்தவன் அழிவதாக அல்லது திருந்துவதாகக் காட்டப்பட்டது.

கல்லூரி மாணவர்களைப் பற்றிய திரைப்படச் சித்திரிப்புகளால் இளைஞர்கள் பெண்களைத் தரக்குறைவாகக் கேலி செய்வது பெருகியுள்ளது.

'காயத்ரி' படம் பார்த்ததால் கற்பழித்து விடியோ படம் பண்ணுவது பரவியது.

'சிகப்பு ரோஜாக்கள்' படம் பார்த்த சில இளைஞர்களால் பெண் கற்பழிப்புக்குள்ளானாள்.

'நூறாவது நாள்' படம் பார்த்த இளைஞன் பல கொலைகள் செய்தான்; இப்படம் பார்த்த ஓர் அம்மையார் திரைப்படக் கொட்டகையிலேயே இறந்தார்.

'நான் சிகப்பு மனிதன்' படத்தில் ஏறத்தாள 27 கொலைகள் உள்ளன. 'மனிதன்' என்னும் படத்தில் மனிதத்தன்மையற்ற முறையில் கண்மூடித்தனமாக் குண்டு வீசியும் துப்பாக்கியாலும் கொல்லப்படுகின்றனர்.

## - பா. இறையரசன் -

கண்களைப் பிடுங்குவது, உறுப்புக்களை எடுத்து விற்பது, அயல்நாட்டுக்குக் கடத்துவது, வழிப்பறி செய்வது ஆகியன திரைப்படங்களால் பரப்பப்படுகின்றன. மிகவும் கண்ணியத்தோடும் மதிப்போடும் கருதப்பட வேண்டியதும், தவறு செய்வோரால் அச்சத்தோடு நோக்கப்பட வேண்டியதுமாகிய நீதித்துறை, காவல்துறை ஆகியவற்றைச் சார்ந்தவர்களை இழிவு செய்தும், குற்றவாளிகள் அவர்களது மனைவியைக் கற்பழிப்பதாகவும், குழந்தையைக் கொல்வதாகவும் படமெடுப்பது நலம்வாய்ந்த சமுதாயத்துக்கு நச்சாகும். ★

# சப்தங்களின் சர்க்கஸ் இன்றைய திரைப்பட இசை!

கவிஞர் அப்துல் ரகுமான், திரைப்படத்துறை பற்றிய கேள்விகளுக்கு அளித்த சுவையான பதில்களில் சில இங்கு பிரசுரமாகின்றன.

## - கவிஞர் ரகுமான் பேட்டி -

? வானத்து நட்சத்திரங்கள் – வெள்ளித்திரை நட்சத்திரங்கள், என்ன வேறுபாடு?

! வானத்து நட்சத்திரங்கள் வேஷம் போடுவதில்லை; ஒளிமங்கும் போது அரசியலில் நுழைவதில்லை. மேலும் வானத்து நட்சத்திரங்கள் மீது சாணி அடிக்கமுடியாது

? மறைந்த கண்ணதாசனைப் பற்றிச் சில வரிகள்?

! அவர் ஒரு முரண்–தொடைச் செய்யுள். இறந்த புத்தகம் மீன்விற்கும் சந்தையில் விண்மீன்களை விற்ற பைத்தியம்

? இன்றைய திரைப்படப் பாடல்களைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

! இன்றைய திரைப்படப் பாடல்களுக்குத் தேவைப்படுவது கவிதை அல்ல; சப்தங்களின் சர்க்கஸ்; வாத்தியங்களின் வாந்திபேதி; படுக்கை அறை முக்கல், முனகல்.

இதிலே பாவம், கொஞ்சம் நன்றாக எழுதுகின்ற பாடலாசிரியர்களும் கிழிந்து கந்தலாகி வருகிறார்கள்.

? எந்தச் சூழ்நிலையிலும் சினிமாவுக்குக் கவிதை எழுத மாட்டீர்களா?

! எனக்குச் சினிமாப் பைத்தியமும் இல்லை! என் உளி சிலை செதுக்கப்பழக்கப்பட்டது.

'மசாலா' அரைக்கும் அம்மியைப் பொழிய அழைத்தால் போகமாட்டேன். சிலை செதுக்கும் நேரம்வந்தால் செதுக்குவேன்.

? காதலர்களைப் பற்றி?

! இழப்பதனால் பெறுபவர்கள். பரிமாறுவதால் பசியாறுகிறவர்கள். கண்ணீரால் புன்னகைப்பவர்கள். காயங்களைப் பூக்களாகச் சூடிக்கொள்கிறவர்கள். ★



அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்
அழகுக்கு அழகூட்டும் தரமான
கலர்ப்படப் பிரதிகளை
யாழ்ப்பாணத்திலேயே
அதிகுறை கட்டணத்தில்
மிகக் குறுகிய காலத்தில் பெற
"ஷப்ரு"வை நாடுங்கள்!
கலர் படச் சுருள் கழுவுதல்-
முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்ய படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone No: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவித்தளி

### கரையைத் தொடாத அலைகள்

கடலலைகளை கரையேற்றி
விடத்துடிக்கும்
கடல்மீன்களே!
நீங்கள்
என்னதான்
ஆர்ப்பாட்டம்
செய்தாலும்
அவைகளை
வெளியேற்றமுடியாது—
ஏனெனில்
அவைகள் கரையைத்
தொடாத அலைகள்.

— அல்வத்தனி-உமா

### ஒரு சிலர்தான்

காதலென்று
கால்கடுக்க
மாலையுடன்
பாலைவனத்தில்
ஓடுகின்றார்
ஆனால்......
இருளுமுன்னர்
பசும்சோலைதனைக்
காண்பவர்கள்
ஒருசிலர்தான்

### அணுவும் அழிவும்

உயிரணுவில்
உருவாகித்
தாயன்பின்
தாலாட்டில்
வளர்ந்தவுயிர்
அனுதினமும்
ஊசலாடுது
அணுகுண்டின்
வளர்ச்சியினால்
ஆனால்......
உலகமோ
உறங்குது

—சாரங்கன்

### காரணம்

பெண்களை ஏன்
சந்திரனுக்கு
ஒப்பிட்டார்கள்?
ஓ...அவர்கள்
சிரிக்கும்போது
பௌர்ணமி போலவும்
முறைக்கும்போது
அமாவாசை போலவும்
ஆவதனாற்றானே!

—நிலாவெளியூர்
ஜெக. தர்மா

# நல்ல சிந்தனைகளே நம்மை உயர்விக்கும்; இதை உணர்த்தியவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

எமது சிந்தனைகளே எம்மை உருவாக்குகின்றன. நல்ல சிந்தனைகள் எம்மை உயர்வுறச் செய்கின்றன. தீய சிந்தனைகள் எம்மை இழிநிலைக்குத் தள்ளிக்கொண்டு போய் விடுகின்றன:

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ''உங்கள் சிந்தனைகளைப் பற்றி அவதானமாக இருந்தீர்களாயின் அதுவே போதும். மற்றதெல்லாம் சரியாக அமைந்து விடும்'' என்று அருளினார்.

ஒரு தீய சிந்தனை எவ்வளவு சிறியதாயினும் மனதில் வேரூன்றி விட்டாலோ அது பரவிப்படர்ந்து காலகதியில் பாவ அழுக்குகள் நிறைந்த குட்டையில் கொண்டுபோய் தள்ளிவிட்டுவிடும்.

பரஹம்ஸர் இதற்கு உதாரணமாக ஒரு கதையைக் கூறினார்.

துறவியொருவர் ஒரு கோவிலின் வசலில் உட்கார்ந்து கொண்டு இடையிடையே தியானத்தில் ஈடுபட்டு வந்தார். பக்கத்திலே ஒரு விலைமாதின் வீடு இருந்தது.

தங்கள் உடல் பசியைத் தீர்ப்பதற்காக அங்கு பலர் போய்வருவதைக் கண்ணுற்ற துறவி அவ் விலைமாதை அழைத்து அவள் புரியும் கொடிய பாவத்தைச் சுட்டிக் காட்டினார்.

மனம் வெதும்பிய விலைமாது, ''சுவாமி, இந்த ஈனத் தொழிலை என்னால் விட முடியவில்லை. காரணம் வறுமை. இறைவனிடம் என் பாபத்தை மன்னித்து விடும்படி ஒவ்வொரு விநாடியும் மன்றாடிக் கொண்டிருக்கிறேன். என் சீவனத்துக்கு வேறு வழி கிடைத்தால் இதை

> சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நினைவுதினம் இம்மாதம் 16 ஆம் திகதி வருகிறது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

விட்டுவேன்'', என்று அழுது கொண்டே கூறினாள். துறவி அவளை எச்சரிக்கை செய்து அனுப்பி விட்டார்.

துறவி இந்த சமாச்சாரத்தை அத்தோடு விட்டு விடவில்லை. விலைமாதின் வீட்டுப்பக்கம் அவருடைய கண்கள் அடிக்கடி நோட்டம் விட்டன. இன்னும் பலர் போய் வந்து கொண்டுதானிருந்தார்கள்.

ஒவ்வொரு மனிதனும் கதவைத் தட்டி உள்ளே செல்வதைக் கண்டவுடன் சுவாமி ஒரு சிறு கல்லை எடுத்துத் தன் முன்னால் போட்டு வைக்க ஆரம்பித்தார். சில நாட்களின் பின் பெரிய கற்குவியல் ஒன்று சுவாமியின் முன்னால் சேர்ந்திருந்தது.

துறவி விலைமாதை அழைத்து, ''நீ எவ்வளவு கொடிய பாவங்களைச் செய்திருக்கிறாய் என்று பார்த்தாயா'' என்று கூறிக் கற்குவியலைக் காண்பித்தார். மனமுடைந்த விலைமாது அன்றிரவே இறந்து விட்டாள்.

நிகழ்வுப் பொருத்தமாக, துறவியும் அதே இரவு மாரடைப்பினால் இறந்து விட்டார். துறவியின் உடலுக்கு ஊர் மக்கள் திரண்டு வந்து



ராமகிருஷ்ணபரமஹம்ஸர்

மரியாதை செலுத்தினார்கள். வெகு விமரிசையாக ஈமக்கிரியைகள் செய்து முடிக்கப்பட்டன.

விலைமாதின் உடல் கழுகுகளுக்கும் நரிகளுக்கும் விருந்தாக மலைச்சரிவில் வீசப்பட்டது.

மறு உலகில் நடந்ததோ வேறு கதை. இரண்டு ஆத்மாக்களும் வரவேற்கப்பட்டன. விலைமாதுவுக்கு உயர்ந்த படிநிலை வழங்கப்பட்டது.

துறவிக்கோ கீழ்மையான ஒரு நிலை கொடுக்கப்பட்டது. அதிர்ச்சியுற்ற துறவி ஏன் அப்படி என்று எதிர்வாதம் செய்தார்.

துறவிக்கு விளக்கங் கொடுக்கப்பட்டது. ''இறைவன் முன்னிலையில் நெறி பிறழாத நீதியே வழங்கப்படுகிறது.

நீர் துறவியின் உடலில் இருந்து கொண்டு சதா தீய சிந்தனைகளிலேயே மனதை ஓட விட்டீர். அந்த விலைமாது ஈன உடலைச் சுமந்து கொண்டு, எப்போதும் இறைவனையே தியானித்த வண்ணம் இருந்தாள்.

இழி தொழிலைச் செய்தாளாயினும் பற்று அற்ற நிலையிலேயே செய்தாள். எனவே, அவரவருக்கு உரிய இடமே இங்கு கொடுக்கப்படுகிறது.'' என்று கூறப்பட்டது. ★

- அ. குமரகுரு -

# இந்துமாகடல் பற்றிய மடகாஸ்கார் மாநாடு: ஒரு கண்ணோட்டம்

> இந்துமாகடலை அமைதிப் பிராந்தியமாக்கவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தும் சர்வதேச மாநாடு அண்மையில் மடகாஸ்காரில் நடைபெற்றது.
>
> 27 நாடுகளைச் சேர்ந்த 140 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.
>
> உலக சமாதான சபை, ஆபிரிக்க—ஆசிய ஒருமைப்பாட்டுக்குழுமம், மலகாஸே அமைதி, ஒருமைப்பாட்டுக் கமிட்டி ஆகியன இம்மாநாட்டை ஒழுங்குசெய்திருந்திருந்தது.
>
> அம்மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்துகொண்ட திரு. ரி. துரைசிங்கம் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

உலக சமாதானக் கவுன்சில் தலைவர் ரொமேஷ் சந்திரா பேசுகையில்;

அமைதி, நீதி உலகில் வெற்றிபெறவேண்டும். அந்தச் சாத்தியக்கூறுகள் நிலவும் புதிய உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அமைதி, ஆயுதபரிகரணம், சுதந்திரம் ஆகியவற்றுக்கான போராட்டங்களுக்கு அணிசேரா இயக்கம் முழு ஊக்கமளித்துவருகிறது.

மூன்றுவது உலகில் 45கோடி மக்கள் பஞ்சத்தில் வாழ்கின்றனர்.

இந்துமாகடலை அமைதிப் பிராந்தியமாக்கும் முயற்சி இப்போது எடுக்கப்படுவது சாலப் பொருத்தமானது. புதிய சர்வதேசக் கோட்பாடு ஒன்றைத் தோற்றுவிக்க இது உதவும்—

இப்படி ரொமேஷ் சந்திரா கூறினர்

மடகாஸ்கார் ஒருமைப்பாட்டுக் கமிட்டிச் செயலாளர் நாயகம் கிஸெலி ரபேஷஹால சர்வதேச ஜனநாயக பெண் இயக்கம் சார்பாகப் பேசினர்.

பெண்களின் பொருளாதார, சமூக, அரசியல் உரிமைகள் மீறப்படுவதை எமது இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என்று அவர் சொன்னார்.

ஆபிரிக்க – ஆசிய ஒருமைப்பாட்டுச் சங்கத்தின் இலங்கைக் கிளையின் சார்பாக நான் பேசினேன். 1970 இல் இந்துமாகடலை அமைதிப் பிராந்தியமாக்கும் யோசனை இலங்கையின் முயற்சியினாலேதான் கொண்டு வரப்பட்டது என்று நான் சுட்டிக் காட்டினேன். இந்த யோசனை செயல் வடிவத்தில் வர நாம் அனைவரும் எம் சக்தி அனைத்தையும் திரட்டிப் பாடுபடவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இது சம்பந்தமாகக் கூட்டும் மாநாடு, கொழும்பிலோ அல்லது தகுதியான வேறு இடத்திலோ தாமதமின்றி உடனடியாகக் கூட்டப்படவேண்டும் என்று நான் எனது பேச்சில் வலியுறுத்தினேன்.

இந்த அணுயுகத்தில் போரா, சமாதானமா என்பதல்ல பிரச்சினை. வாழ்வா, சாவா என்பதே இன்று உள்ளபிரச்சினை என்றும் நான் சொன்னேன்.

மாநாட்டின் முடிவில் பிரகடனம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.

அது வருமாறு;

சமாதானத்துக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை சர்வதேச ரீதியில் உருவாகி வருவதை திருப்தியுடன் நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

யுத்த எதிர்ப்புச் சக்திகள் எடுத்து வந்த ஆயுதபரிகரண முயற்சிகள் நடுத்தர குறுகிய தூர ஏவுகணைகளை ஒழிக்கும் ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் செய்துகொள்ள வைத்தன.

இந்த உடன்படிக்கை சர்வதேச அரசியல் சூழ்நிலையில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதில் சந்தேகமே இல்லை.

இப்படி அந்தப் பிரகடனம் கூறியது.

உலக அமைதி நோக்கிச் செல்லும் பயணத்தில் முன்னேற்றம் காணப்படும் சாத்தியம் நிறைய உண்டு என்ற நம்பிக்கை உணர்வுடன் மாநாடு முடிவடைந்தது.★

- ரி. துரைசிங்கம் -

# தொடர்மதிப்பீடு; மாணவர் நலனுக்கு உகந்ததா?

சென்ற ஆண்டு நடுப்பகுதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட மாணவர்கள் தொடர் மதிப்பீடு, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்து நிற்கின்றது. தொன்று தொட்டு நடைமுறையிலிருந்த வழமையான பரீட்சைகள், பெறுபேறுகள் என்பனவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டுப் புதிதாக எழுந்துள்ள இத்தொடர் மதிப்பீடு மாணவர்கள் ஆசிரியர்கள், கல்விமான்கள் ஆகியோர் மத்தியில் ஒரு தெளிவற்ற தன்மையினைத் தோற்றுவித்துள்ளது. கல்வி கற்பித்தல் பரீட்சித்தல் மதிப்பிடுதல் என்ற அம்சங்களில் திடீரென இந்நடைமுறை புகுத்தப்பட்டமையால் ஆசிரியர்கள் மாணவர்கள் இதன் நோக்கம், விளைவு என்பனவற்றை முழுமையாகக் கிரகிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இப்புதிய திட்டத்தினால் ஏற்படும் சாதக பாதகப் பலன்களைக் காய்தல், உவத்தல் தவிர்த்து நடுநிலை நின்று ஆய்தல் ஒரு பயன் தரும் முயற்சியாகும். மாணவர்களின் கல்வித்தரம், கற்றலில் ஈடுபாடு, சமூகத்தில் மாணவர்கள் பங்களிப்பு என்பவற்றை விருத்தி செய்யும் உயர் நோக்கங்களுக்காக இந்நடை கொண்டுவரப்பட்டதாக அறியப்படுகின்றது. இந்நடைமுறை எவ்வளவு தூரம் பயனளிக்கும் என்பதனைக் காலந்தான் நிச்சயிக்கும்.

கல்வித்திட்டங்கள் மாற்றப்படும் பொழுது கால அவகாசம் அளிக்கப்படுவது மரபு. புதிய திட்டத்தினை ஆசிரியர்கள் விளங்கி நடைமுறைப்படுத்த அவகாசம் அளிக்கப்படல் அவசியமானது. இத்திட்டம் திடீரென நடைமுறைக்கு வந்தமையால் ஆசிரியர்கள் மத்தியில் இத்திட்டம் பற்றிய தெளிவான விளக்கம் ஏற்படவில்லைப் போலுள்ளது.

தொடர் மதிப்பீட்டுக்கான பரீட்சைகள் பல்வேறு பாடசாலைகளிலும், பல்வேறு ஆசிரியர்களால் பரீட்சிக்கப்பட்டு, மதிப்பிடப்படுதலால், வினாக்களின் தரம், மதிப்பிடும் முறை என்பவற்றில் வேறுபாடுகள் தோன்ற இடமுண்டு. ஒன்பது அம்சத்திட்டத்தில் புள்ளிகள் வழங்கப்படும் பொழுது ஒரே புள்ளியைப் பெற்ற இரு வேறு பாடசாலை மாணவர்களின் தரம் ஒரே தன்மையானது என்பது உறுதிபடக் கூற முடியாது. இதனால் ஒரு பாடசாலையிலுள்ள மாணவர்கள் இறு[illegible] பாட்சைப[illegible] களில் பாதிக்கப்படவும் இன்னோர் பாடசாலை மா[illegible]

பாடத்திட்டங்கள் வருடா வருடம் அளவிலும் ஆழத்திலும் அதிகரிக்கப்படுகின்றன. பாடத்திட்ட விஸ்தரிப்புடன் இத்தகைய மதிப்பீடுகளை நடைமுறைப்படுத்துவது ஆசிரியர்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும் விடயமாகும். மாணவர்கள் வரவு ஒழுங்கின்மைகளுக்குப் போதிக்கும் பொன்னான காலத்தைப் புள்ளிகள் பதிதல் கோவைகளைப் பேணல் போன்ற இன்னோரன்ன கடமைகளில் ஆசிரியர் செலவிடின் அதன் காரணமாகப் பாதிப்படைபவர்கள் மாணவர்களன்றி வேறெவருமல்லர்.

மாணவர்கள் இத்திட்டங்களை முறைப்படி செயற்படுத்துவதனால் அவர்களுக்கு அதிகமான வேலைப்பளு ஏற்படுகின்றது. நாளும் பொழுதும் இத்திட்டங்களை செயற்படுத்தவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதனால் தமது ஆரோக்கியத்திற்கு அவசியமான உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு கால அவகாசமில்லாது போகின்றது.

மாணவர்களுக்கு அவர்களின் ஆற்றல்களுக்கு மேலான வேலைகளைக்கொடுப்பதால் கல்வியில் வெறுப்பும் விரக்தியும் ஏற்பட இடமுண்டாகும். எந்த நோக்கத்திற்[illegible]

அதிகமாக நன்மை பெறவும் இடமுண்டாகும். பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினால் இத்திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தல் சாத்தியமாகாது.

''ஒப்படை'' என்ற பகுதியைத் திருப்திகரமாக மாணவர் சமர்ப்பிப்பதற்கு அவர்கள் பல்வேறு நூல்களை ஆய்ந்து சொந்த முயற்சி எடுக்க வேண்டும். இதனைச் செயற்படுத்துவதற்கு மாணவர்களுக்குப் போதிய வசதி வாய்ப்பு இல்லாதுள்ளது. பெரும்பாலும் கிராமப்புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு நூல் நிலைய வசதிகள் கிடைத்தல் அரிது. ''ஒப்படை'' என்ற பகுதியினை மாணவர்கள் பிறர் உதவியுடனே சமர்ப்பிக்க முயல்வர். சமர்ப்பிக்கப்படும் விடய நுணுக்கங்களைத் தாம்கிரகிக்க முயறசியாத மாணவர்க்கு ஒப்படையினைச் சமர்ப்பிப்பதால் அதி பயன் கிடையா.

குறிக்கோளை அடையமுடியாத நிலை ஏற்படுமோ என்ற அச்சம் தோன்ற இடமுண்டு.

மாணவர்கள் இயந்திரங்களுமல்லர். ஆசிரியர்கள் இயந்திரங்களை இயக்குபவர்களுமல்லர். மாணவர்கள் வளரும் பயிர்கள். அவர்கள் வளர்ச்சியில் ஏற்படும் இடர்களைந்து உறுதுணையாக நின்று வழிபாட்டுபவர்களே ஆசிரியர்கள். இவ்விருசாரார்க்கும் உகந்த முறை கல்வி வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் சிறந்த வழிமுறையாகும்.

இப்புதிய திட்டத்தினை மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் ஆழ்ந்து அலசிஆராய்தல் அவசியமாகும்.

- திருமதி. அ. ஞானசீலன் -


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.
Pfizer
சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# பொது அறிவுப்போட்டி இல. 10

1. ஒவ்வொருவருக்கும் இந்த உணர்வு வேண்டும்? ... ... சட்டுப்பாடு / கடமை
2. ரஷ்யாவில் இறந்த பாரதப் பிரதமர் யார்? ... ... ... ... நேரு / சாஸ்திரி
3. இந்தப் பலம் இருந்தால் ஒருவராலும் அசைக்கமுடியாது? ... ... ... ... ... ஆத்மபலம் / யானைப்பலம்
4. மாலையில் மலர்வது எது? ... ... ... ... ... ... ... மல்லிகை / அல்லி
5. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது எது? ... ... .. ... முதலை / தவளை
6. ஆற்றை மறித்து எதைக் கட்டுவார்கள்? ... ... ... ... அணை / பாலம்
7. செய்தி கொண்டு வருவது எது? ... ... ... ... ... கடிதம் / பத்திரிகை
8. முன்னேற்றத்துக்கு எது வேண்டும் என்பர்? ... ... ... உழைப்பு / ஊக்கம்
9. இவளை மகாலக்ஷ்மியின் அவதாரம் என்பர்? ... ... ... ... ராதை / சீதை
10. காற்றை விட வேகமானது எது? ... ... ... ... ... ... மனம் / ரொக்கட்
11. துணி நெய்வதற்கு எது வேண்டும்? ... ... ... ... ... ... பஞ்சு / நூல்
12. குழந்தைக்கு எது அவசியம்? ... ... ... ... ... சத்துணவு / விளையாட்டு

பெயர்:- ..................
விலாசம்:- ........................
...............

பொது அறிவுப்போட்டி இல: 10
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

— இங்கே வெட்டுக —

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 10. 8. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி பெற்றுச் செல்லும் அரசியல்வாதிகள் நாட்டு நலன் பற்றிச் சிந்திப்பது இல்லை

உலக நாடுகளில் மிகுந்த தொன்மையும், சிறப்பும் மிக்கது பாரத நாடுதான். இந்தியாவில் தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. கிடைத்தும் வருகின்றன அமெரிக்காவும், ரஷ்யாவும் விஞ்ஞானத்தில் மேலோங்கி இருக்கலாம். ஆனல் அங்கு தொல்பொருள் ஆய்வுத்துறையினருக்கு அந்த அளவுக்கு வேலையே இல்லை.

அரசியல், தொழில் விஞ்ஞானம் ஆகியவற்றின் மூலமாகக் கிடைத்த புகழும்

> காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் 'மக்கள் விழிப்புணர்வு இயக்கம்' ஒன்றை ஆரம்பித்திருக்கிறார். அங்குரார்ப்பண விழாவில் அவர் நிகழ்த்திய உரையின் சுருக்கம் இங்கு பிரசுரமாகிறது.

பெருமையும் நமக்கு இந்தப் பண்டைய கலாசாரச் சான்றுகளின் மூலமாகத்தான் கிடைக்கின்றன,

நமது நாட்டில் ரொக்கெட் விடப்பட்டு அது கீழே விழுந்து நொருங்கிய நிகழ்ச்சியையும் நாம் கண்டு இருக்கிறோம். எனினும் நாம் ஆன்மீகத்தில் முன்னேடியாக உள்ளோம்.

நமது நாட்டின் வரலாறு சில ஆயிரம் ஆண்டுகளாகத் தொகுக்கப்பட்டு இருப்பினும் இதன் வரலாற்றுக்கு கோடிக் கணக்கான ஆண்டுகளின் பின்னணி உண்டு.

பூமிக்குப் பொறுமை உண்டு. பொறுமை ஒரு எல்லை கடந்தால் நிலமே வெடிக்கும். அப்போது பாதிப்புப் பயங்கரமாக இருக்கும். ராமன் ஒரு

## காஞ்சி சுவாமிகள் 'கண்டனம்'

சாந்தமூர்த்தி. டி. வி. யில் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு சாந்த சொரூபனாக ராமன் இருக்கிறார். எனினும் பொறுமை எல்லை தாண்டியது. இராவணன் வதைபட்டான். ராமாயணக்கதை முடிகிறது. ராமன் கூட சாந்தம் விட்டு ஆயுதம் ஏந்த வேண்டி இருந்தது. கிருஷ்ணன் குழந்தையாக இருந்தபோதே கம்சனை வதை செய்யவேண்டியதாயிற்று கடவுள் அவ்வப்போது இந்த உலகுக்கு வந்து அதர்மத்தை வென்று தர்மத்தை நிலைநாட்டி விட்டுப் போயிருக்கிறார். இப்போது கடவுள் வந்தால்தான் தீர்க்க முடியும் என்று கருதும் அளவுக்கு நாட்டில் நிலைமைகள் இருக்கின்றன.

கண்ணன் ஆரம்பத்திலேயே ஆயுதம் ஏந்தி இருந்தால் பாரதப்போர் 18 நாள் தொடர்ந்து இருக்காது. ஒரே நாளில் முடிந்து இருக்கும். எனினும் கண்ணன் பொறுமையாக இருந்தார். சிசுபாலன் என்றவன் கண்ணனைப் பழித்துப் பேசிக்கொண்டே இருந்தான். 99 முறை பொறுத்துக் கொண்டிருந்த கண்ணன், நூறுவது முறை பழிச்சொல் வந்த போது சிசுபாலனை வதை செய்தான் சூனியம் உச்சநிலை கொள்ளும்போது தான் தெய்வம் விசுவரூபம் எடுத்து வதை செய்கிறது.

இப்போது நாடு இருக்கும் நிலைமையைப் பார்த்தால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமே



ஜெயேந்திர ஸ்வாமிகள்

பரவாயில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அடிமை போன்ற ஒரு நிலைமை தான் இன்னும் தோன்றுகிறது. என்போன்ற சந்நியாசிகள் கூட இப்படிப் பேசவேண்டிய அளவுக்கு நிலைமைகள் உள்ளன.

இத்தகைய இழி நிலைக்கு அரசாங்கமோ அரசியல்வாதிகளோ காரணம் அல்ல. மக்கள் தான் காரணம் அரசையோ, அரசியல்வாதிகளையோ அந்தக் கடவுள் வந்தால் கூடக் காப்பற்ற முடியாது. இந்த அரசியல்வாதிகள் கடவுளுக்கும் அப்பாற்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

மக்கள் நினைத்தால் எதையும் செய்ய முடியும். எனவே மக்கள் நல்வழியில் விழிப்புக் கொண்டால் அரசியல்வாதிகளின் ஆட்டம் நின்று விடும். அவர்கள் தாமே திருந்தி விடுவர்.

பல அரசியல்வாதிகள், அதிகாரிகள், மந்திரிகள் பரமாச்சாரியார் சுவாமியை சந்திக்க வந்தனர். நாட்டு நலம் குறித்து சுவாமிகள் அவர்களிடம் பேசினர். 'உங்கள் ஆசி இருந்தால் அப்படியே ஆகட்டும்' என்று கூறிவிட்டுச் சென்றனர். எங்களிடமும் அவர்கள் வந்தனர், நானும் கேட்டேன். 'யோசிக்கிறோம்' என்றனர்.

இவர்கள் எல்லாம் எங்களிடம் அருளாசி பெறத்தான் வருகின்றனரே தவிர நாட்டுக்கு நலன் கிடைக்கும் திட்டங்களை நிறைவேற்றும் நல்ல உணர்வுடன் வருவதில்லை.

மன்னர் ஆட்சி நீங்கி ஜனநாயகம் நமது நாட்டில் நடக்கிறது. ஆனல் இதன் மூலமாக ஆட்சிக்கு வருவோர் மன்னர் ஆட்சியைவிட தீவிரமாக நடந்து கொள்கின்றனர். இராணுவ ஆட்சியே தேவலை என்று கருதும் அளவுக்கு நடந்து கொள்கின்றனர்.

உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து இயங்கினல் பணம் தானே வரும். நாம் பணத்துக்கு கஷ்டப்பட வேண்டியதில்லை. பணம் வசூலிப்பது பின்பு கணக்குக் கேட்க எனக்குத்தான் ரைட் இருக்கிறது என்று பேசுவது எல்லாம் நமக்கு வேண்டாம். நமக்கு லட்சங்கள் தேவை இல்லை. லட்சிய நோக்குத்தான் வேண்டும் கடவுளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கூட அவர்களின் தாய் நாட்டுப் பற்றை விடுவதில்லை.

அனைத்து மதத்தினரும், இனத்தவரும் ஓரணியில் நின்று ஒரே சித்தாந்தத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

விபீடணனைக்கிண்டல்செய்து சிலர் பேசுகின்றனர். உதாரணம் கூறுவதற்கு விபீடணனை தவறான வழியில் உபயோகப் படுத்தக்கூடாது. அவர் நல்ல இதயம் படைத்தவர். எனவே தர்மத்தின் பக்கம் நின்றவர். இராவணனும், கும்பகர்ணனும் சாபம் பெற்றவர்கள். எனவே வதைக்கு உள்ளாயினர்.

3 குரங்குகளின் பொம்மைகளைச் செய்து, தீயதைப் பார்க்காதே, தீயதைப் பேசாதே, தீயதைக் கேட்காதே என எழுதி வைக்கப்பட்டுள்ளது. இதில் தீயதை உண்ணக் கூடாது. குடிக்கக் கூடாது என்ற வாசகத்தைச் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு காஞ்சி மடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கூறினர். (எ-4)

# சிவாஜி கொளுத்திய அதிசய வெடிகள்!

தமிழக முன்னேற்ற முன்னணியின் தலைவர் சிவாஜி கணேசன் மதுரையில் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.



சிவாஜி

மிகுந்த உற்சாகமுடன் காணப்பட்ட அவர் 15 நிமிடங்களே கூட்டத்தில் பேசினர்.

ஆதரவாளர்களிடையே அவர் உத்வேகத்தை ஏற்படுத்தினல் அரசியல் ரீதியில் அவர் கொளுத்திய புதுச்சர வெடிகள் அரசியலில் புதிதாகப் புகுந்தவர்களின் முகங்களைச் சுளிக்க வைத்து விட்டது.

இலங்கைப் பிரச்சினை பற்றி பேசிக்கொண்டிருந்த சிவாஜி கணேசன், வாய் தவறியோ என்னவோ, "இலங்கையில் வடக்கையும் தெற்கையும் என்று கூறினர்களே, இணைத்தார்களா?" என்று கேள்வி எழுப்பினர்.

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்ற கருத்தின் ஆதிக்கத்தில் சிவாஜி மூழ்கி விட்டதால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பதற்குப் பதிலாக இப்படிக் கூறியிருக்கலாம்

சென்னையில் இருந்து
தி. மேனகன்

என்று சிலர் திருப்தியடைந்திருக்கலாம்.

இதே போல், திராவிடக் கட்சிகளின் அண்ணா, பெரியார் பெயரில் பல்கலைக் கழகங்கள் வைக்கப்பட்டன. ஆனல் காங்கிரஸ்காரர்களே பெருந்தலைவர் காமராஜ் பல்கலைக்கழகம் என்று வைக்காமல் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் என்று வைத்து விட்டார்கள்" - என்று கூறினர்.

பெரியார் பெயரில் இன்னும் பல்கலைக்கழகமே ஆரம்பிக்கப்படவில்லை.

மதுரைக் காமராஜ் பல்கலைக்கழகம் காங்கிரஸ் ஆட்சியில் ஏற்படுத்தப்படவில்லை.

இவையெல்லாம் சிவாஜிக்கு தெரியாதா?

# இன்றைய தமிழக எழுத்துச் சூழ்நிலை எப்படி?

## பேராசிரியர் அருமைராசன் பேட்டி!

தமிழ் நவீன இலக்கியத்தில் சமூகஞ் சார்ந்த படைப்பாளர்கள் பலர் வெளியில் தெரியாமல் கிடக்கிறார்கள் என்ற உண்மை கசப்பானது.

காலம் ஒருவேளை இவர்களின் வாழுங்காலத்தைப் போற்றினலும் வாழும் படைப்பாளியின் மனநிலையை அறிந்து வாழுங்கால சிக்கல் பற்றிப் பேசுவது சுவையான விஷயம்தானே.

அந்த ரீதியில் தமிழகத்தில் குமரிமாவட்ட கிறிஸ்தவ மக்களின் வாழ்நிலை சார்ந்து நவீன புதினங்கள், சிறுகதைகள் எழுதிக்கொண்டிருப்பவர் திரு. ஐசக் அருமைராசன். கல்லூரிப் பேராசிரியராகப் பணிபுரியும் இவரது நாவல்களில் முக்கியமானவை கல்லறைகள், கீறல்கள், தவறான தடங்கள், அழுக்குகள் ஆகியனவாகும்.

வாழுங்காலத்தைப் படம் பிடித்துக்காட்டும்இவர், சுந்தர ராமசாமி, ஹெப்சிபா யேசுதாஸனையும் படித்த பிறகு தான் படைக்க அமர்ந்தாகக் கூறுகிறார்.

இவரின் 'கீறல்கள்' மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பில் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

மண்ணின் மணத்தோடு எழுதும் இவரின் பேட்டிவருமாறு:

### தொடர்பு

கேள்வி; ஓர் இலக்கியப் படைப்புக்கும் வாசகனுக்கும் உள்ள தொடர்பை எந்த அளவு மதிப்பீடு செய்கிறீர்கள்,

பதில்: படைப்பிலும் பலவிதம் உள்ளது. வாசகர்களிலும் பலவிதம் உள்ளனர். பொதுவாக சமூகத்துக்கு ஏதாவது செய்யநினைப்பவர்கள் பிரச்சினைகளை ஆழமாக எழுதுகிறார்கள். சிலர் தெரிந்தே 'லைட் ரீடிங்' என்று கொடுக்கிறார்கள்,

இருவகையான வாசகர்களையும் ஓர் எழுத்தாளன் திருப்திப்படுத்த இயலாது.

படைப்புக்கும் வாசகனுக்கும் உள்ள தொடர்பு மனப்பக்குவம் கொண்டதாக இருக்கும் பட்சத்தில் அதுவே படைப்பாளனின் வெற்றியாகும்.

கேள்வி: மனப்பக்குவம் ஏற்படுத்துவது என்பது ஒரு படைப்பாளி மிகச்சிறந்த படைப்பைக் கொடுப்பதில் தானே இருக்கிறது?

பதில்: இன்று தமிழக எழுத்துச் சூழ்நிலை வாசகர்களின் மனப்பக்குவத்தைக் கீழான நிலைக்குக் கொண்டுவந்துள்ளது பெரும்பாலும் திரைப்பொழுதுபோக்கு பிரயாணத்தில் இருப்பார்கள் 'லைட்ரீடர்ஸ்' விரும்புகிறார்கள்.

(உ-ம்) கிரைம் நாவலை விரும்புகிறார்கள். ஆனல் எப்போதுமே அவர்கள் அதை விரும்புவதில்லை. ஆனல் மலிவாகக் கிடைப்பது பொழுது போக்குப் புத்தகங்கள்தான். இவைகளில் தரமான – மனப் பக்குவம் அடைந்த வாசகர்களை உருவாக்க முடிவதில்லை.

படைப்புக்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகள் தடத்தை மாற்றிக் கொண்டால் வருங்காலத்தில் ஆழமான 'சப்ஜெக்டை' விரும்பும் வாசகர்களின் எண்ணிக்கை பெருகக்கூடும்.

சமீபகாலத்தில் செக்ஸை மையமாக வைத்து விற்பனை செய்யப்பட்ட பத்திரிகைகள் தோல்வியைத் தழுவியுள்ளன. இது ஓரளவு சமூகப் பிரக்ஞை உணர்வு ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

### தரமான எழுத்தாளர்

கேள்வி: பத்திரிகைகள் தரமான எழுத்தாளரை உருவாக்குவது இல்லையா? அவர்களை ஊக்கப்படுத்துவது இல்லையா?

பதில்: பெரும்பாலான எழுத்தாளர்கள் தரமானவர்கள்தான். ஆனல் அவர்கள் பத்திரிகைகளின் தரத்துக்கு இறங்கி வர வேண்டியுள்ளது. அதே போல் சிறு பத்திரிகைகளில் எழுதும் எழுத்தாளர்கள் 'பாப்புலாரிட்டி' தேடி பெரிய பத்திரிகைகளுக்குத் தாவவேண்டியுள்ளது. இதனல் தரக்குறைவு ஏற்படுகிறது.

கேள்வி: படைப்பைத் தொழிலாகக் கொள்வது உழைப்பாகுமா?

பதில்: படைப்பது உழைப்பில்லைதான் பாரதி 'எமக்குத் தொழில் கவிதை' என்கிறன். அவன் தொழில் எனக் குறிப்பிடுவது வேறு அர்த்தம். தொழில் அல்லது உழைப்பு எனும் போது அதில் அழகியல் கட்டாயமல்ல. உழைப்பின் நோக்கம் கூலிதான். இலக்கியத்தில் அழகியல் என்பது கட்டாயம் அத்துடன் கூலி கிடைக்கிறதோ இல்லையோ இலக்கியம் படைக்கப்பட்டு விடுகிறது. அதனல் இலக்கியம் படைப்பதை முழுநேர வேலையாகக் கொள்ள முடியாது. 'க்ரைம்' நாவல் எழுதுவோர் விஷயத்தில் இதில் மாறுபாடு இருக்கலாம். அது கூலிக்காகப் படைக்கப்படுவது.

### பாதிப்பு

கேள்வி: முதிர்நிலை வயதுள்ள வாசகனுக்குள் உங்கள் இலக்கியம் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்று சிந்தித்திருக்கிறீர்களா?

பதில்: இலக்கியம் எல்லோருக்கும் என்று படைக்கப்பட்டதுதான். நான் படிக்க மட்டும் எழுதாமல் சிந்திக்கவும் எழுதுகிறேன். நான் எடுத்துக் கொள்ளும் கரு முழுக்க சமுதாயம் சார்ந்தது. கீறல்களில் வரும் வேதமாணிக்கம் வாத்தியன் பாத்திரம் முதியது தான். அவரைத் தீவிரவாதியாக நாவலில் சொல்லி உள்ளேன். இதைப் படிக்கும் முதிய வாசகன் பழைமையில் ஊறிப் போனவனாக இருந்தாலும் நிச்சயம் சிந்திப்பான். கீறல்களில் இயேசுவைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது இளைஞர்களிடையே கோபத்தை ஏற்படுத்திபது என்பது எனக்குத் தெரியும். காரணம் இதுவரை அவர்கள் புரிந்திருக்கும் அனுபவத்துக்கு இது எதிரானது. அதனல் இதை ஜீரணிக்கும் மனப்பக்குவம் அவர்களுக்கு ஏற்படவில்லை. வாசகனுக்கு வயசு ஒரு தடை இல்லை.

கேள்வி: குடும்ப உறவு நிலையைச் சீர்படுத்துவதில் இலக்கியத்தின் செயற்பாடு எப்படி இருக்கும்?

பதில்: புதினம், சிறுகதைகள் ஒட்டுமொத்தமாய் சமூக மாற்றத்துக்குத்தான் உதவ முடியும் குடும்பத்தில் உள்ள சிறு சிறு பிரச்சினைகளை ஒரு நாவலோ சிறுகதையோ சீர் செய்யமுடியும் என்பதை நம்ப முடியவில்லை. இந்தப் பிரச்சினைகள் அப்போதைக்கு அப்போது முளைத்து அழிந்து விடும். (எ-4)

# ஒருவரை ஒருவர் விழுங்காதவரை ஜீரணிக்கும் கேள்விக்கு இடமில்லை!

தேர்தல் என்றல் கட்சிகள் கூட்டணி அமைக்கும்.

அப்படி உருவாகும் கூட்டணிகள் சில தேர்தல் வரை நின்று பிடிக்கும்.

சில, தேர்தல் முடிந்து அடுத்த தேர்தல் வரும் வரை கூட தாக்குப் பிடிக்கும்

இப்போது தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலும் இன்றே நாளையோ என்றிருக்கிறது.

யாருடன் கூட்டணி வைப்பது என்பதை இந்திரா காங்கிரஸ் இன்னும் தீர்மானிக்கவில்லை.

ஒன்றகி, இரண்டாகி இப்போது மூன்றகி விட்ட அ. தி. மு. கவும் அதுபற்றிப் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

தேர்தல் கூட்டணி பற்றி தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறுவதாவது;

எமது கூட்டணியில் உள்ள கட்சித் தலைவர்கள் ஒருவரை ஒருவர் எப்படி ஜீரணிக்கப் போகிறர்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் கிண்டல் பண்ணுகிறர்கள்.

ஒருவரை ஒருவர் விழுங்குவது என்ற நிலைமை ஏற்பட்டால்தான் ஜீரணிக்கக்கூடிய நிலை குறித்த பிரச்சினையே எழும்.

விழுங்காத நிலை இருக்கும் வரை ஜீரணிக்கும் பிரச்சினை ஏற்படாதல்லவா?

இப்படிக் கருணாநிதி தெரிவித்திருக்கிறர். ★

# 'ஜெ' அணி இரகசியங்கள் நீதிமன்றத்தில் வெளிப்படுமா?

தமிழ்நாட்டில் 'ஜெ' அணி மோதல் நீதிமன்றம் வரை போகும்நிலை ஏற்பட்டு விட்டது.

ஜெயலலிதாவும் திருநாவுக்கரசும் ஆளுக்கு ஆள் சட்டத்தரணிமூலம் நோட்டீஸ் அனுப்பிவிட்டார்கள்.

ஜெயலலிதாவுக்கு தொழிலதிபர் விஜயமல்லையா பட அதிபர் ஜி வி பெருந்தொகை கொடுத்தார் என்று திருநாவுக்கரசு கூறியிருந்தார் அல்லவா!

இதை யொட்டியே திருநாவுக்கரசுக்கு ஜெயலலிதா நோட்டீஸ் அனுப்பியிருக்கிறர்.

,விஜய்மல்லையா, பட அதிபர் ஜி. வி. ஆகியோரிடம் பணம் பெற்றேன் என்று திருநாவுக்கரசு கூறியதனல் என் கௌரவம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரத்துக்குள் மன்னிப்புக்கோரவேண்டும். அத்துடன் பத்துலட்சம் ரூபா நட்டஈடும் தரவேண்டும்—' இப்படி ஜெயலலிதா தனது சட்டத்தரணி ஆர். சுவாமிநாதன் மூலம் அனுப்பிய நோட்டீஸில் தெரிவித்துள்ளார்.

இந்த நோட்டீஸுக்கு அனுப்பிய பதிலில் ஜெயலலிதா வழக்குப்போட்டால் சந்திக்கத்தயார்' —என்று திருநாவுக்கரசு தெரிவித்திருக்கிறர்.

அதேவேளை தனது சட்டத்தரணி பி. எஸ். ராமன்மூலம் திருநாவுக்கரசு ஜெயலலிதாவுக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறர்.


அந்த நோட்டீஸில் திருநாவுக்கரசு கூறியிருப்பதாவது;

நான் அ.தி. மு. க. பொருளாளர் என்ற முறையில் நிதி, மற்றும் கணக்கு வழக்குகள் என்னிடமே இருக்கவேண்டும். ஒன்றரைக்கோடி (இந்தியப் பணத்தில்) ரூபா வசூலிக்கப் பட்டுள்ளது. அந்த நிதியை நீங்களே வைத்துள்ளீர்கள். நோட்டீஸ் கிடைத்த பத்து நாளில் கணக்குவழக்கை என்னிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லாவிட்டால் உங்கள் மீது கிரிமினல் வழக்குப் போடப்படும்.

இப்படி நோட்டீஸில் திருநாவுக்கரசு கூறியிருக்கிறர். ★

# சொற்சிலம்பம்

போட்டி இல. 85



சொற்சிலம்பம் இல: 85
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

—————— இங்கே வெட்டுக ——————

முடிவு திகதி: 24-8-1988

### இடமிருந்து வலம்

1. சுழிவிரக்கம், 5. வறுமை, 7. நூறு, 9 இரை, 10. அதிகம், 11. அவச்செயலைக் குறிக்கும், 13. இந்தியாவின் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்று. பட்டின் பெயராலும் பேசப்படுவது. 15. கைத்தொழில், 18. சிறு தாவரம். வயலில் மாற்றுச் செய்கைக்காகப் பயிரிடுவர். 19. விநாயகருக்கு உகந்த பலகாரம், 21. உள்வீடற்ற நெல், 22. மேல்நாட்டு குடிவகை, 23. இராமன் ஜானகியைக் கண்டது இங்குதான்.

### மேலிருந்து கீழ்

1. பின் ஐந்தாவது நாள், 2. ஏழரை நாழிகை கொண்டகாலம். இரவையும் குறிக்கும், 3. செம்பு. 4. கல், 6. குற்றத்துக்கு வழங்கப்படுவது, 8. தகுதி 11. நிறம். 12. நெருப்பில்லாமல் வருமா?. 14, அறிகுறி, 16. மேலிருந்துகீழ் 6-முடிந்ததும் கிடைப்பது 17. இலங்கைத் தேசிய கீதத்தின் முதற்சொல், 20. பெருக்கல் அடையாளம், 21. தலைவன்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றும் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் & பிளவுஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவுஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை

சனிக்கிழமை 13-08-1988

நவநாகரிகத்திற்கேற்ப
★ மிறடைம் ★ பாட்லி
★ றிமோட் கொன்றோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவுஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# பர்மாவில் கலவரங்கள் தொடர்வது புதிய ஆட்சியாளர்களுக்குச் சவால்!

அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த மாணவர் ஆர்ப்பாட்டங்களை அடுத்து பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின் (77 வயது) பதவி துறந்தார்.

இராணுவத் தளபதி சீன் லிவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

கலவரங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக நாட்டில் இராணுவச்சட்டமும் அவசரகாலச் சட்டமும் தற்போது பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

எனினும் இதை எழுதும் வரை கலவரங்கள் ஓயவில்லை. நாடு முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. தொடர்ந்து நெருக்கடி நிலை இருந்து வருகிறது.

### ஊநூவின் ஆட்சிக்காலம்

1962 ஆம் ஆண்டு திடீர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார் ஜெனரல் நீவின். அப்பொழுது ஆட்சியில் இருந்தவர் ஊநூ. இவர் பர்மாவின் முதலாவது பிரதமர். ஆசிரியராக இருந்து அரசியலுக்கு வந்தவர்.

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி பர்மா பிரிட்டிஷ் ஆட்சியாளரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. 1950 ஆம் ஆண்டு நாட்டின் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. பிரதமராக ஊநூ பதவி ஏற்றார்.

### உள்நாட்டுக் குழப்பங்கள்

எட்டு வருட ஆட்சியின் பின்பு உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக 1958 ஆம் அப்போதைய இராணுவத் தளபதி நீவினிடம் ஊநூ ஆட்சியைக் கையளித்தார்.

1960 ஆம் ஆண்டு பர்மாவில் நடந்த பொதுத்தேர்தலில் ஊநூவின் கட்சி மீண்டும் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்றி வெற்றியீட்டியது. 1960 ஆம் ஆண்டு ஊநூ தலைமையில் பர்மாவில் மீண்டும் சிவில் ஆட்சி ஏற்பட்டது.

ஏற்கனவே இரு வருட காலம் அதிகாரத்தை அநுபவித்த நீவின் சும்மா இருப்பாரா? 1962 ஆம் ஆண்டு நாட்டில் மீண்டும் குழப்பங்கள் மூண்டபோது இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

### வறுமையின் விளிம்பில்

1962ஆம் ஆண்டு முதல் கடந்த ஜூலை பிற்பகுதியில் இவரது பதவி துறப்பு இடம்பெறும் வரை 26 வருடகாலம் இவரது ஆட்சி பர்மாவில் நீடித்தது.

## தென்கிழக்காசியாவின் நெற்களஞ்சியம் இன்று வறுமையின் விளிம்பில்

ஊநூவின் பத்துவருட ஆட்சிக்காலத்தில் தென்கிழக்காசியாவின் நெற்களஞ்சியம் என்று பர்மா அழைக்கப்பட்டு வந்தது.

இன்று உலகநாடுகளிடம் இருந்து ...

... கீட்டு முறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

1962 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரிசியை ஏற்றுமதி செய்த பர்மா இன்று தனது நாட்டின் தேவைக்காக அரிசியை இறக்குமதி செய்கிறது.



கரென் தேசிய விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த பெண் போராளிகளைப் படத்தில் காணலாம்.

பெறும் நோக்கத்துடன் தன்னை ஒரு வறிய நாடாக அங்கீகரிக்கும்படி ஐக்கியநாடுகள் சபையிடம் பர்மா மனுச் செய்துள்ளது.

நாட்டின் 3 கோடியே 80 லட்சம் குடிமக்கள் பட்டினியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நாட்டில் உணவுப்பற்றாக்குறை நீடிக்கிறது. எண்ணெய் உற்பத்தியில் 50 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டு எண்ணெய் விநியோகம் பங்கீட்டு ...

### யார் காரணம்?

இவற்றுக்கெல்லாம் காரணம் யார்?

ஜெனரல் நீவினின் கொள்கைகள்தான். பர்மா நாட்டுக்கென்று ஒரு தனியான சோஷலிசக் கொள்கையை நீவின் வகுத்தார். அது நாட்டைக் குட்டிச் சுவராக்கி விட்டது.

அத்துடன் மாணவர் கலவரங்கள், இனப்பிரச்சினைகள் நாட்டை விரைவாக படுகுழிக்குள் தள்ளிவிட்டன.

### கரென் தேசிய விடுதலை இராணுவம்

கடந்த 40 ஆண்டு காலமாக கரென் (Karen) சிறுபான்மை இன மக்கள் சுயாட்சி கோரிப் போராடி வருகிறார்கள்.

கரென் தேசிய விடுதலை இராணுவம் என்ற பெயரில் ஆட்சியாளருக்கு எதிராக ஆயுதப்போராட்டம் நடைபெறுகிறது.

நாட்டின் ஒரு மூலையில் நடைபெறும் இப்போராட்டம் நீவின் ஆட்சியாளருக்குப் பெரிய அளவில் தலையிடியைக் கொடுத்திருக்காவிட்டாலும் நாட்டில் அடிக்கடி அமைதியற்ற சூழ்நிலையை இது தோற்றுவித்து வந்தது.

எனினும் மாணவர்களினால் அடிக்கடி நடத்தப்பட்ட கிளர்ச்சிகளே ஜெனரல் நீவின் பதவி துறப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

### மாணவர் போராட்டம்

கடந்த 10 மாத காலத்தில் மூன்று தடவைகள் பர்மாவில் மாணவர் கலவரங்கள் ஏற்பட்டன.

கடைசியாக கடந்த மாதம் இடம்பெற்ற மாணவர் கிளர்ச்சி பரந்த அளவில் வெகுஜனப் போராட்டமாக உருவெடுத்தது.

இதுவே ஜெனரல் நீவினைப் பதவி துறக்க வைக்கவும் உதவியது.

### ஊதாண்ட்

முன்னாள் ஐ. நா பொதுச் செயலாளர் ஊதாண்டின் மரணத்தின்போது 1974 ஆம் ஆண்டு பர்மாவில் மூண்ட கலவரத்துக்குப் பின்பு பெரிய கலவரமாக கடந்த மாதக் கலவரம் கருதப்படுகிறது.

1961 ஆம் ஆண்டு தொடக்கம் 1971 ஆம் ஆண்டு வரை ஐ. நா பொதுச்செயலாளராக இருந்தவர் ஊதாண்ட்.

1974 ஆம் ஆண்டு தனது 65 ஆவது வயதில் ஊதாண்ட் அமெரிக்காவில் காலமானார். அவரது இறுதிச் சடங்குகளுக்காக அவரது பூதவுடல் பர்மாவுக்குக்கொண்டுவரப்பட்டது.

ஊதாண்டின் செல்வாக்குக் காரணமாக ஏற்கனவே அவரில் அதிருப்தி கொண்டிருந்த ஜெனரல் நீவின் எந்த ஓர் அரச மரியாதையும் இன்றி ஈமக்கிரியைகளுக்கு உத்தரவிட்டார். இதனை ஆட்சேபித்து மாணவர்கள் கலவரங்களில் இறங்கினர். 1974 இல் ஏற்பட்ட இக் கலவரத்தில் பல மாணவர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1961 ஆம் ஆண்டுக்கும் 1971 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பர்மாவின் புழ்ச்சர்வதேச அரங்கில் பிரபல்யம் பெற்ற ஒரு தனி மனிதர் பிரமுகராக இருந்தார் என்றால் அவர் ஊதாண்ட் தான்.

டாக் ஹமர்சீல்டுக்குப் பின்னர் பொதுச் செயலாளர் பதவி ஊதாண்டுக்குக் கிடைத்திருந்தது.

1961 இல் கொங்கோவில் உள்நாட்டு யுத்தம் மூண்ட சமயம் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது டாக் ஹமர்சீல்ட் விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

கொங்கோவின் சட்டபூர்வமான பிரதமர் பட்றிக் லுமும்பா படுகொலை செய்யப்பட்டது, கொங்கோவின் வட பகுதியான கட்டங்கா மாகாணம் ஷோம்பே தலைமையில் தனிநாடு பிரகடனம் செய்தது ஆகிய சம்பவங்களால் கொங்கோ ஒரு வருடத்துக்கு மேல் குழப்பத்தில் மூழ்கி இருந்தது.

### கடந்த செப்டம்பர் கலவரம்

1974 ஊதாண்டின் மரணச்சடங்கின் பிற்பாடு கடந்த செப்டம்பர் மாதமே முதல் தடவையாக கலவரங்கள் பெரும் அளவில் தலைதூக்கி இருந்தன.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியாத நிலையில் பெறுமதி கூடிய ... ரூ நோட்டுகளை ஜெனரல் நீவின் செல்லுபடி அற்றதாக்கினார். செப்டம்பர் கலவரத்துக்கு இதுவே காரணமாக அமைந்தது.

இதன் பின்பு இந்த ஆண்டு மார்ச் மாதம் தேநீர்ச்சாலை ஒன்றில் ஏற்பட்ட தகராறு மீண்டும் பெரும் கலவரமாக வெடித்தது.

மார்ச் சம்பவத்தின் போது கைதானவர்களை விடுதலை செய்யக்கோரியும் மாணவர் சங்கத்தை நிறுவக்கோரியும் கடந்த மாதக் கலவரம் மூண்டது.

கடந்த மாதம் கடைசியாக



நடைபெற்ற கலவரங்களுக்கு அதிருப்தியாளரும் மிதவாதியுமான அவுங்கி (Aung Gyi) முக்கிய காரணம் என்று கருதப்படுகிறது.

கடந்த மே மாதம் 12 ஆம் திகதியும் ஜூன் மாதம் 8 ஆம் திகதியும் ஜெனரல் நீவினுக்கு இவர் எழுதிய இரு பகிரங்கக் கடிதங்கள் நாட்டில் பெரும் பிரசாரத்தைப் பெற்றிருந்தன.

1962 ஆம் ஆண்டு ஜெனரல் நீவினின் அரசாங்கத்தில் அங்கம் வகித்து அவரின் இடதுசாரிப்போக்கில் அதிருப்தி கொண்டு ஒருவருடத்தின் பின் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டவர் அவுங்ஜி.

தனது இரு கடிதங்களிலும் ஜெனரல் நீவினை இவர் கடுமையாகச் சாடியிருந்தார்.

### தமிழர் படுகொலை

பர்மா 1937 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது.

அப்போது சுமார் 6 லட்சம் இந்தியத் தமிழர்கள் பர்மாவில் வசித்து வந்தனர். பர்மாவின் பொருளாதாரத் துறையில் இவர்கள் பெரும் ஏகபோகம் செலுத்தி வந்தனர். 1938 ஆம் 39 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக அங்கு இனக்கலவரங்கள் வெடித்தபோது நூற்றுக் கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். வீதிகளில் வைத்து தமிழர்களின் தலைகள் சீவப்பட்டன. தமிழர்கள் அகதிகளாகக் கப்பல்கள் மூலம் சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

அந்த இனக்கலவரத்துடன் பர்மாவில் தமிழரின் ஆதிக்கம் முற்றாக முடிவடைந்தது.

### 1948இல் சுதந்திரம்

1948 ஜனவரி 4 இல் பர்மா சுதந்திரம் அடையும் வரை டில்லியில் உள்ள பிரிட்டிஷ் வைஸ்ரோய் மூலமே பர்மா ஆளப்பட்டு வந்தது.

ஜெனரல் நீவின் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பர்மாவின் சுதந்திர இயக்கமான தாகின் (Thakin) இயக்கத்தில் சேர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடினார்.

1941ஆம் ஆண்டு இராணுவப் பயிற்சி பெறுவதற்காக பர்மாவிலிருந்து இரகசியமாக சீனா சென்ற 30 தாகின் இயக்கவாதிகளில் ஜெனரல் நீவினும் ஒருவர்.

ஜெனரல் நீவின் ஏழு தடவைகள் திருமணம் செய்திருந்தார். இதில் ஒரே பெண்ணை இரு தடவைகள் கூட அவர் திருமணம் செய்துள்ளார்.

அவரது 26 வருட ஆட்சிக் காலம் பர்மாவின் இருண்ட காலமாகக் கருதப்படுகிறது ★

## விறுவிறுப்பாக நடைபெற்று வரும் 'ஷப்ரு' கிண்ணக் கிரிக்கெட் போட்டி

'ஷப்ரு' சுற்றுக்கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட்போட்டி மிகவிறுவிறுப்பாகவும் ரசிகர்களுக்கு விருந்தூட்டும் வகையிலும் நடைபெற்றுவருகின்றன.

ஷப்ரு யுனைக்கோ பினன்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறும் நொக் அவுட் முறையிலான இந்த மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ் மாவட்டத்தில் உள்ள 14 கழக அணிகள் மோதுகின்றன.

இவற்றில் 5 ஆட்டங்கள் இதுவரையில் முடிவடைந்துள்ளன.

இந்த கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் மல்லாகம் றெட் ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியும், கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழக அணியும் மோதின.

முதலில் றெட் ஸ்ரார்ஸ் அணி 26.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

கொக்குவில் அணி ஆரம்பத்தில் ஆடியவேகம் இலகுவான வெற்றியைநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதிலும் 3ஆவது, 4ஆவது, 5ஆவது, 6ஆவது விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தபோது ஆட்டம் சூடுபிடித்தது.

எனினும் 26 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் கொக்குவில அணி வெற்றிக்குத்தேவையான ஓட்டங்களைப்பெற்று 3 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது. கிறுஸ் கொப்பர்ஸ் அணிவீரர் பொன்வில்லியஸ் 37 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

யாழ் யங் பற்றீசியன்ஸ் அணிக்கெதிரான இரண்டாவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை கிறுஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 26.5 ஓவர்களிலேயே தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

யங் பற்றீசியன்ஸ் அணி வீரர் எச். ரட்ணனந்தன் 6 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதும் அணித்தலைவர் எஸ்.ஏ. கிளற்ஸ்ரன் 2. 5. ஓவர்கள். பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதும் சிறப்பம்சங்கள்.

யங் பற்றீசியன்ஸ் அணி 28.3 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் யாழ் யங்ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணி, பைஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை வென்றது.

யங் ஸ்ரார்ஸ் அணி வீரர் கே. இளங்கோ தனது முதலாவது ஓவரின் கடைசிமூன்று பந்துகளிலும் தொடர்ந்து மூவரை 'போல்ட்' செய்து ஆட்டமிழக்க வைத்து 'ஹட்ரிக்' சாதனையை நிலைநாட்டினார். இவர் 6 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களைக் கைப்பற்றித் தனக்கும், தனது அணிக்கும் பெருமை தேடிக் கொண்டார்.

**- விவியன் -**

இந்தப்போட்டியில் முதலில் பை ஸ்ரார்ஸ் அணி 29 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

யங் ஸ்ரார்ஸ் அணி 29 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 143 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் வட்டுக்கோட்டை 'ஓல்ட் கோல்ட்ஸ்' விளையாட்டுக்கழக அணிக்கும் இடையேயான நான்காவது போட்டி ரசிகர்களை விறுவிறுப்பின் விளிம்பிற்கே கொண்டு சென்றது.

இந்தப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி வீரர் கே. கலாவண்ணன் 82 பந்துகளைச் சந்தித்து எடுத்த 'செஞ்சரி'யும் அணித் தலைவர். டி. புரட்சிதாஸன் 6 நிமிடங்களில் 9 பந்துகளை மட்டும் சந்தித்துப் பெற்ற 23 ஓட்டங்களும் சென்றலைட்ஸ் அணியின் வெற்றிக்கு வழிகோலின.

இந்த அணி ஒதுக்கப்பட்ட 30 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 194 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

20 ஆவது ஓவரில் 6 விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களை மட்டும் இந்த அணி பெற்றிருந்தபோது போட்டி முடிவடைவதுபோல் தென்பட்டது.

எனினும் தொடர்ந்து ஏழாவது விக்கெட் ஜோடியான ... அபாரமாக ஆடத்தொடங்கினர்.

46 பந்து வீச்சுக்களைச் சந்தித்த அன்ரன் 72 ஓட்டங்களைப் பெற்று வெளியேறிய சமயம் ஓலட் கோல்ட்ஸ் அணி 189 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் இறுதி மூன்று விக்கெட்டுக்களும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டதனால் அந்த அணி தோல்வியையே தழுவியது.

30 ஓவர்கள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 192 ஓட்டங்களைப்பெற்றது.

ஐந்தாவது ஆட்டத்தில் யாழ் 'ஷப்ரு' கிரிக்கெட்

### விளையாட்டுத்துறை

அணியும், யாழ் பல்கலைக் கழக அணியும் மோதின.

ஷப்ரு அணி முதலில் ஆடி. 24 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

பல்கலைக்கழக அணி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஷப்ரு அணித் தலைவர் வை. ஜெயந்தன் 6 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மற்றைய ஆட்டங்கள் தொடர்ந்து இவ்வாரமும் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ★

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org